In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கயிலை பாதி காளத்தி பாதி

திருவந்தாதி

(நக்கீரர் தேவநாயனார் அருளிச் செய்தது)

பாரத்வாஜ ஆஸ்ரமம்

ஸ்ரீகாளஹஸ்தி - 517644

www.srikalahasti.org

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாழ்த்துரை

ஆந்திர மாகாணத்தில் உள்ள ஸ்ரீகாளஹஸ்தி பிரசித்தி பெற்ற புண்ணிய சிவக்ஷேத்ரமாகும். இந்தியாவில் உள்ள பெரிய முக்கியமான சிவக்ஷேத்ரமாகும். இந்தக்ஷேத்ரம் பஞ்சபூத க்ஷேத்ரங்களில் வாயு க்ஷேத்ரமாகும். இங்கு சிவன் சுயம்புவாக எழுந்தருளியுள்ளார். வாயுஸ்வரூபமாகவும் விஸ்வரூப சொரூபமாகவும் உள்ளார். இந்தக்ஷேத்ரம் தட்சிண கயிலாயம், ஸத்யவிரத க்ஷேத்ரம் பாஸ்கரக்ஷேத்ரம் அகண்டவில்வாரண்யம், சத்யோமுக்திகர விரக்ஷேத்ரம், விஞ்ஞானக்ஷேத்ரம், சிவானந்த நிலையமென ஸ்தல புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த க்ஷேத்ரத்திற்கு அகில உலகத்திலிருந்து பக்தர்கள் வந்த வண்ணமுள்ளனர். தற்போது நிலவும் அவசரகதியுகத்தில், பக்தர்கள் இங்குள்ள கடவுள் பற்றியும், க்ஷேத்ரத்தை பற்றிம், மலைகள் பற்றியும், தீர்த்தங்கள் பற்றியும் கேள்விப்பட்டகோயில் பற்றியும் மற்றும் பூஜா விபரங்கள் ஆராதனைகள் உற்சவ விபரங்கள் பற்றி தெரிந்து கொள்ளாமல் வந்த வேகத்திலேயே சென்று விடுகின்றனர். இச்சேக்ஷத்ரத்தை பற்றி தமிழ் இலக்கியங்கள் மற்றும் புராணங்களில் உள்ள விபரங்கள் பக்தர்களுக்கு கிடைப்பதில்லை ஆகவே அனைத்து விவரங்களும் பக்தர்களுக்கு விளங்கும் வண்ணம் நல்ல முறையில் புத்தக வாயிலாக எடுத்துரைக்க முயற்சி எடுத்த எனக்கு உறுதுணையாக உதவிபுரிந்த

Sri. V. Ramakrishna, LANCO, Sri Kalahasthi
Sri. T. Srinivasan, Nellore
Sri. S. Balaji & Friends, Sri Kalahasthi

திரு. முத்துகிருஷ்ணன் சென்னை, ஆகிய அன்பர்கள் இந்த நூலை சிறந்த முறையில் பதிப்பிக்க உதவியுள்ளார்கள் அவர்களுக்கு ஸ்ரீஞானப்ரசூனாம்பா சமேதஸ்ரீகாளஹஸ்திஸ்வரர் அருட்கடாட்சம் என்றென்றும் உண்டென வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்,
ஈசானசிவகுரு
(பாபு குருக்கள்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி

(நக்கீர தேவநாயனார் அருளிச் செய்தது)

நூலாசிரியர்

மு. நடராஜன்

பாரத்வாஜ ஆஸ்ரமம்

ஸ்ரீகாளஹஸ்தி - 517644

Visit us www.srikalahasti.org

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் விவரம்

நூலின் பெயர்	:	கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதி
ஆசிரியர்	:	நக்கீர தேவநாயனார்
பதிப்பாசிரியர்/ உரையாசிரியர்	:	S.M.K.A. GURUKUL 4-730, CAR STREET, SRI KALAHASTI - 517644 08578-222318
பதிப்பு ஆண்டு	:	2009
நூல் வடிவம்	:	டெம்மி 1/8
அச்சுத்தாள்	:	14.4 வெள்ளைத்தாள் CREMOVO
எழுத்துக்கள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	106
வெளியிட்டோர்	:	S.M.K.A. GURUKUL 4-730, CAR STREET, SRI KALAHASTI - 517644 08578-222318
பிரதிகள்	:	500
விலை	:	ரூ.50/-
அச்சிட்டோர்	:	ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ், சென்னை - 83

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

நூலாசிரியர் குறிப்பு	6
முன்னுரை	7
நக்கீர தேவர் வரலாறு	13
கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியில்காளத்திச் செய்திகள்	17
கண்ணப்பர் சரித்திரம்	21
ஸ்ரீ காளத்தி க்ஷேத்ர மகாத்மியம்	26
பரத்வாஜ ஹிருதயம்	33
டாக்டர் உ.வே.சா. குறிப்பு	37
முகவுரை (டாக்டர். உ.வே. சா. அவர்களின் திருக்காளத்திப்புராண முன்னுரை)	52
1. திருக்காளத்தித்தலத்தின் சிறப்பு	61
2. திருக்காளத்தி- தலவரலாறு	63
ஸ்ரீ நக்கீரர் இயற்றிய 100 பாடல்களும், உரையும்	66

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

IN REMEMBRANCE

Sri Natarajan hails from ardent Adisaiva family of Maniankurichy Village near Tiruchirapally. Even from his childhood he was helping his father not only in the day to day Temple rituals but also in the management of the Agricultural activities. His primary education was at his native village. Then he had his graduated studies at Madurai. He Graduated in Scociology and latter in law. He started his carrier in Premier Fertilizers in Accounts department later in the elite Group of SICAL Chennai. He served long in this organization. He was Dependable Resource in the company activities and to all his Kith and kin. Sri Natarajan had in depth knowledge in Tamil and English literature and he writes with ease both in Tamil and English. Sri Natarajan married from the renowned Adisaiva family of Srikalahati, Who are High priests of the Famous Shiva Temple.

Bharadwaja Asharamam, Srikalahasti approached Natarajan for the transalation from old Tamil text of this book, he did with ease in a manner that even a layman can understand the heart of the literary work. Bharadwaja Ashramam opines that this book will be very useful to devotees to have knowledge of this famous Temple. The ashramam had undertaken to publish other books in Tamil literature to benefit the devotees. Soon this Ashramam will publish a book on a great devotee of Lord Shiva, the Kannappa nainar, Embodeiment of Devotion. Adisankara praises Kannappar as the best devotee of Lord Shiva in his book "Sivanandalahari".

Bharadwaraja Asharamam has lost Sri Natarajan when his services are very much required by his departure to join the feet of lord Siva.

Dr. S.M.K.A. Gurukul

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமர்ப்பணம்

எங்கள் இனிய நடராஜன் அவர்களுக்கு



1949-2009

திருமதி. ஞானாம்பாள் நடராஜன்
குமாரி. திவ்யா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூலாசிரியர் குறிப்பு

களப்பிரர் ஆட்சியின் இறுதிப் பகுதியில் சிவபெருமானது திருவருளால் மூர்த்தி நாயனார் பாண்டிய நாட்டை அரசாண்டார். அவரால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்ச் சங்கப் புலவர்களும் பழைய தமிழ்ச் சங்கத்தில் இருந்த நக்கீரர், கபிலர், பரணர் முதலிய பெயர்களைப் பூண்டிருந்தனர். இவர்களையே நம்பியாரூரர் "பொய்யடிமையில்லாத புலவர்" என்றதனால் இவர்கள் "நாயன்மார்" எனப்பட்டனர். இச்சங்கத்தில் இருந்த நக்கீரரே சிவபெருமான் அருளிச் செய்த "கொங்கு தேர் வாழ்க்கை" எனத் தொடங்கும் பாட்டிற்குக் குற்றங்கூறி வாதாடிப் பின், திருந்தித், தாம் செய்த பிழைக்கு இரங்கிச் சிவபெருமான்மேல் பல பிரபந்தங்களை அருளிச் செய்து உய்தி பெற்றார். தென்கயிலாயம் என்று சிறப்புடன் அழைக்கப்படும் திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருக்கணநாதேசுரரும், இறைவி ஞானப்பூங்கோதையும் இவர்தம் ஆன்மார்த்த மூர்த்திகள். எனவே தான் இவர் திருக்கயிலைக்கு ஒரு வெண்பாவும், திருக்காளத்திக்கு ஒரு வெண்பாவுமாக மாறி மாறி வர நூறு வெண்பாக்களால் ஆகிய அந்தாதிப் பிரபந்தத்தை அருளிச் செய்தார் என்பதைத் திருவிளையாடற் புராணத்திலும், சீகாளத்திப் புராணத்திலும் காண்க. அதையே "கயிலைபாதி காளத்தி பாதி அந்தாதி" என்ற தலைப்பில் நூறு வெண்பாக்களையும், விளக்க உரையுடன் இந்தப் புத்தகத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

மு. நடராஜன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்னுரை

அன்புக்கே ஆண்டவன் ஆட்படுவான் என்கின்ற
தென்புக்குச் சாட்சிதிருக் காளத்தி - மன்பதையில்
ஒப்பில்லா இத்தலத்தின் உண்மைப் புகழ்பேசித்
தப்புவோம் தீமை தவிர்த்து.

தேனினும் இனியமொழி தெலுங்குமொழி. அமிழ்தத்திற் கொத்தது தமிழ்மொழி. சர்வேஸ்வரனுக்கொத்தது சமஸ்கிருதம். இந்த மூன்று மொழிகளிலும் புராணங்கள்-இலக்கியங்கள் உள்ள ஒரு சிவஸ்தலம் உண்டு என்றால், அது ஸ்ரீகாளத்தியே ஆகும். தேசிய மொழியாம் இந்தியிலும் உலக வாணிகமொழியாம் ஆங்கிலத்திலும் இத்தலம் பற்றிய வெளியீடுகள் வந்துள்ளன.

தெலுங்கு மொழியில் உள்ள துர்ச்சடிகவி இயற்றிய ஸ்ரீகாளத்தி மகாத்மியம் என்ற நூலும் வசன வடிவில் வந்துள்ள நூல்களும் புராணரீதியில் உள்ளன. சமஸ்கிருதத்தில் இத்தலபுராணத்தைச் சொல்ல நான்கு நூல்கள் தோன்றின. அவை மட்டுமின்றி இரண்டு பேரிலக்கியங்களிலும் ஸ்ரீ காளத்தித் தலமகிமை, விரிவாகப் பல அத்தியாயங்களில் வருகின்றன. இவையாவுமே பௌராணிக ரீதியில் உள்ளனவே.

தமிழில் ஆனந்தக் கூத்தர் இயற்றிய 1726 பாடல்கள் கொண்ட திருக்காளத்திப் புராணமும் பௌராணிக இலக்கியமே ஆகும். பௌராணிகத்துக்கும் அப்பால் 'அன்புக்குக் கடவுள் அருள் செய்வான்' என்ற தத்துவத்திற்குக் கண்ணப்பர் வரலாறு தகுந்த எடுத்துக்காட்டு ஆகையினால், தமிழ் இலக்கியங்கள் மிகப் பலவற்றில் காளத்தியின் பெருமை பேசப்படுகிறது. அவற்றைத் தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதையர் தொகுத்து 1912-ஆம் ஆண்டில் தாம் பதிப்பித்த 'திருக்காளத்திப்புராணம்' பதிப்பில் சேர்த்து வெளியிட்டார்கள். அவற்றை ஒரு சேரப் பார்க்கும்போது கண்ணப்பரின் அன்பின் சிறப்பைத் தமிழிலக்கியங்கள் மையப்படுத்துவன என உணரலாம்.

தமிழில் உள்ள காளத்திப் புராணத்தில் கண்ணப்பர் வரலாறு இல்லை. ஆனால் பின் வந்த புலவர் ஒருவர் 'கண்ணப்பர் சிவகோசரியார் முத்தியடைந்த அத்யாயம்' என்ற தலைப்பில் 88 பாடல்கள் எழுதி அந்நூலுடன் சேர்த்தார். தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்கள் திருக்காளத்திப்புராணத்தின் பின்னிணைப்பாக அப்பாடல்களை வெளியிட்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

75 இலக்கியங்களிலிருந்து பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பாடல்களின் மூலங்களை வெளியிட்டார். அத்துடன் திருக்காளத்திப் புராணமும் சேர 76 இலக்கியங்கள் காளத்தியின் புகழ் பேசுகின்றன எனச் சற்றொப்ப நூறு ஆண்டுகளுக்கு முன்பே டாக்டர் உ.வே.சா. அவர்கள் உலகுக்கு வெளிப்படுத்தினார்.

உலா, தூது முதலிய இலக்கியங்களிலும் காளத்தி பற்றியும் கண்ணப்பர் பற்றியும் வருகின்றன. பழைய கீர்த்தனைகளிலும் காளத்தி பற்றியும் கண்ணப்பர் பற்றியும் வருகின்றன. அவற்றையெல்லாம் அரிதின் முயன்று தொகுத்தால் ஏறக்குறைய நூறு நூல்களில் காளத்தியின் பெருமை வருகிறது எனலாம்.

வழிபாடுகளில் குருவழிபாடு, லிங்கவழிபாடு, சங்கம (அடியார்கள்) வழிபாடு என மூன்று உள்ளன. வியாச பகவான் முதலிய முனிவர்களுக்குத் தட்சிணாமூர்த்தியாகக் காட்சிகொடுத்த தலம் காளத்தியாகும். ஆகவே இது குரு வழிபாட்டுத் தலம் ஆக உள்ளது. பிரசித்தமான வாயுலிங்கம் உள்ள தலமாகையால் சிவலிங்க வழிபாட்டுத்தலம் ஆக உள்ளது. அறுபத்துமூன்று சிவனடியார்களுள் ஒருவராகிய கண்ணப்பரையும் வழிபடுதற்குரிய தலம் ஆகையால் இது சங்கமவழிபாட்டுத்தலமும் ஆகிறது. இவ்வகையில் ஸ்ரீகாளத்தி குருலிங்க சங்கம வழிபாட்டுத்தலம் என்ற பெரும் சிறப்புடைய தலம் ஆகும்.

கயிலாயத்தில் இருந்த சிவானந்த ஏகநிலயம் என்ற சிகரம், யுகாந்த காலத்திலும் அழியாதது என்பதனால், சிவனாந்த ஏகநிலயம் என்ற சிகரத்தைப் பிரம்மன் காளத்தியில் ஸ்தாபித்தார்.

சிவானந்த ஏகநிலயம் சிகரத்தில், ஸ்ரீ பரமேஸ்வரி சமேதராக ஸ்ரீ பரமேஸ்வரர் வீற்றிருந்த பொழுதுதான் திருப்பாற்கடலில் தோன்றிய விஷத்தை உண்டார். அதை உளம்கொண்டுதான் திருஞான சம்பந்தர் ஸ்ரீகாளத்திப் பதிகத்தின் முதற்செய்யுளிலேயே,

"வானவர்கள் தானவர்கள் வாதைபட
வந்தொரு மாகடல்விடம்
தான் அமுது செய்து அருள்புரிந்தசிவன் மேவும் மலை"

என்று ஸ்ரீகாளத்தி மலையைக் குறிக்கிறார்.

தேவாரம் வேதசாரம் என்பார்கள். தேவாரத்தைத் திராவிட வேதம் என்பார்கள். தேவாரப்பாடல்களுக்கு மேம்போக்கான பொருள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்று இருக்கும். அது பதஅர்த்தம்; பதார்த்தம்; உள் அர்த்தமாக ஞானப்பொருள் இருக்கும்.

சிவபெருமான் செய்த எத்தனையோ திருவிளையாடல்கள் அருட்செயல்கள் இருக்க ஆலகால விஷம் உண்டதை முதலில் நினைவு கூர்ந்ததற்கு உரிய ஞானப் பொருள்:- 'அந்த அருட்செயல் ஸ்ரீபரமேஸ்வரன் சிவானந்த ஏக நிலயத்தில் இருந்து செய்தது; அந்தச்சிகரம் பிரம்மனால் கொண்டுவந்து ஸ்ரீகாளத்தியில் ஸ்தாபிக்கப்பட்டது' என்பதாகும்.

இந்த அற்புதப் பொருளைச் சிவநெறிச் செல்வர் சொல்லக்கேட்ட பாக்கியம் பெற்றமையால் இதை எழுதுகிறேன்.

அதுமட்டுமன்று. இப்பதிகத்தின் நான்காம் பாடலுள் ஸ்ரீபரமேஸ்வரர் ஸ்ரீஉமாபரமேஸ்வரராக-விருஷபாரூடராக-எருதேறியாகக் காட்சி கொடுக்கிறார் என்று வருகிறது. எனவே சிவானந்த ஏகநிலயச் சிகரத்தில் விருஷபாரூடராகக் காட்சிக் கொடுத்தார் என்பதும், அந்தச் சிகரம் உள்ள ஸ்ரீகாளத்தியில் விருஷபாரூடராக ஸ்ரீ உமாபரமேஸ்வரரைத்தரிசிப்பது அர்ச்சனை மூர்த்தத்தில் விசேஷம் என்பதையும் உணரலாம்.

"வேய்அனைய தோள்உமைஒர் பாகம்அது வாக
விடைஏறி சடைமேல்
தூயமதி சூடி சுடுகாடின் நடமாடி மலை"

என்பது அந்தத் திருப்பனுவலின் தொடர். 'சுடுகாடின் நடமாடியாகிய சிவன் இம்மலையில், சடைமேல் தூயமதிசூடியாக - சந்திரசேகரனாக; உமையோர் பாகம் அதுவாக- உமாமகேஸ்வரனாக; விடைஏறி-காளைமேல் ஏறிக் காட்சிதருகிறார்', என்பது அத்தொடரின் பொருள்.

ஆகக் கர்ப்பக்ரஹ தரிசனத்தில் வாயுலிங்க தரிசனம் விசேஷம்; அதேபோலத் திருக்காளத்தி மலைமேல் விருஷபாரூட தரிசனம் விசேஷம் என்பது திராவிட வேதக் கருத்தாகும்.

வேதம் எப்படிப்பிரமாணமோ அதேபோலத் திராவிட வேதமும் பிரமாணமாகும். அதேபோல ஸ்ரீபரமேஸ்வரனை வழிபடுபவர் களுக்குத் தேவாரத் தொடர்கள் ஆப்தவாக்யங்கள் என அறியவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருஞானசம்பந்தரின் திருவிராகம் எனப்படும் பதிகம்-சிவனின் அருட்செயல்களாக,

1. திருப்பாற்கடல் நஞ்சு உண்டது.
2. திரிபுரம் எரித்தது.
3. காளியைக் கொண்டு தாரகனை அழித்தது.
4. விருஷபாரூடராகக் காட்சி கொடுத்தது.
5. யானையை உரித்துப் போர்த்துக் கொண்டது.
6. பகீரதனுக்கு அருள்செய்தது.
7. சலந்தராசுரனை அழித்தது.
8. இராவணனைக் கால்விரலால் நெரித்தது.
9. அடிமுடிதேடிய பிரம்மனும் விஷ்ணுவும் அறியமுடியாமல் விஸ்வரூபம் எடுத்தது.

என்னும் ஒன்பது செயல்களைக் குறிப்பிடுகின்றது. திருஞானசம்பந்தர் பதிகங்களில் எல்லாம் எட்டாம் பாடல்களில் இராவணன் பற்றியும், ஒன்பதாம் பாடல்களில் பெரும்பாலும் அடிமுடிதேடுதலும் வரும். எனவே அவை இரண்டையும் வழக்கமானவை எனக்கொண்டு, எஞ்சிய ஏழு நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டும். மூன்றாம் நிகழ்ச்சி காளியின் செயல். ஐந்தாம் நிகழ்ச்சி தாருகா வனத்து நிகழ்ச்சி. ஆறாம் நிகழ்ச்சியாக,

'பாரதம் விளங்கிய பகிரதன் அருந்தவம்
முயன்ற பணிகண்டு
ஆர்அருள்புரிந்து, அலைகொள் கங்கை சடை ஏற்றவன்

எனக்கூறப்பட்டுள்ளது. இதில் கங்கையைப் பூவுலகுக்கு அளித்த செயல்இல்லை. அருள்புரிந்ததற்கு யாரும் 'கங்கையை அளித்த' என்று உரையும் எழுதவில்லை. கங்கையைப் பூலோகத்திற்கு அளித்தவராக இல்லாமல் கங்காதரராக ஸ்ரீபரமேஸ்வரர் குறிக்கப்பட்டுள்ளார்.

இப்படி ஒவ்வொரு செயலையும் சிந்தித்தால் கயிலாயத்தில்-சிவானந்த ஏகநிலய சிகரத்தில் சிவனின் காருண்யச் செயல்களை அச்சிகரம் உள்ள காளத்தியில் திருஞானசம்பந்தர் வரிசைப்படுத்திப் பாடித் துதித்தார் என உணரலாம். சாஸ்திரப் பேரறிவுபெற்ற, ஞானானுபவப் பெரியவர்களும் இந்த நோக்கில் மேலும் ஆராய்ந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெரிவிப்பது ஸ்ரீகாளத்திநாதனை ஆராதிப்பதற்கச் சமமான பணியாகும்.

திருப்பாற்கடல் நஞ்சுண்டது சிவானந்த ஏகநிலயத்தில் என்பதும் அச்சிகரம் ஸ்ரீகாளத்தியிலே உள்ளது என்பதும், விருஷபாரூடக் காட்சியும் சிவானந்த ஏகநிலயத்துக் காட்சி என்பதும் அச்சிகரம் ஸ்ரீகாளத்தியிலேயே உள்ளது என்பதும் தெளிவான செய்திகள் ஆகும்.

ஸ்ரீகாளத்தி பற்றிக்கூறும் தமிழ் இலக்கியங்கள் 76-ல் (டாக்டர் உ.வே.சா. தொகுப்புப்படி) முதலாவதான திருஞானசம்பந்தர் பதிகங்களுள் ஒன்று இவ்வளவு விரிவான ஆழமான பொருள்நுணுக்கம் உடைய தென்றால், எஞ்சியவற்றை எல்லாம் விரிவாக ஆராயத் தொடங்கினால் எவ்வளவு பெரிதாகும் எனச் சிந்திக்க வேண்டும்.

டாக்டர் உ.வே.சா. ஸ்ரீகாளத்தி பற்றிய பாடல்களைத் தொகுத்து 1912 திருக்காளத்திப்புராணத்துடன் வெளியிட்டார் என முன்னர்க் குறிப்பிடப்பட்டது. அவை செய்யுள்கள்.

திருக்காளத்தித் தலச்சிறப்பு என்ற அருமையான புத்தகத்தை வெளியிட்ட ஸ்ரீகாளத்தித் தலத்தின் தலைமை சிவாசார்யார் ஆகிய ஈசான சிவகுரு சிவஸ்ரீ டாக்டர் எஸ்.எம்.கே. அய்யாவு குருக்கள் அவர்கள் தற்போது கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதியையும் வெளியிட்டுச் சிவ புண்ணியப் பணியைத் தொடர்ந்து செய்கிறார்.

பொறியியல் துறையில் வல்லவராகப் பேராசிரியராக விளங்கிய அவர், பணியைத் தூக்கி எறிந்துவிட்டுப் 'பரமன் பணியே பணி' என வந்துள்ளார் என்றால், அவரைப் பாராட்டுவதைவிட அவரை வணங்குவதே பெரும்பாக்கியம் ஆகும்.

'ஸ்ரீகாளத்தியின் பெருமைகள் தமிழ் இலக்கியங்களில் நிறையப் பேசப்பட்டுள்ளன. அவற்றை எல்லாம் உலகுக்குத் தெரிவிக்க வேண்டும்' எனத் தன் தாயார் திருமதி ஈசான சிவா (ஸ்தானம் முனிம்மா) சொன்னதை வேதவாக்காகக் கொண்டு எல்லாரும் பயனடைய வேண்டும் என்று இந்நூலையும் அச்சிட்டு வெளியிடும் அவரின் ஆர்வத்தை-பக்தியை-சிரத்தையை எப்படிப் புகழ்வதென்றே தெரியவில்லை. மீண்டும் மீண்டும் சிவஸ்ரீ எஸ்.எம்.கே.ஏ. குருக்கள் அவர்களுக்கு என் வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி நூலுக்குப் பலர் உரை எழுதியுள்ளார்கள். சிவத்திரு. முத்துசாமி நடராஜன் அவர்கள் தற்போது உரை எழுதியுள்ளார். எல்லாருக்கும் புரியும் படியாக இவரின் உரை எளிமையாக உள்ளது. இவர் உரையே இப்பதிப்பில் உள்ளது. இவர், சிவஸ்ரீ. டாக்டர் எம்.எஸ்.கே.ஏ. அவர்களின் உறவினர். பெரியபதவிகள் வகித்தவர். தற்போது திருச்சி மாவட்டத்தில் சிவப்பணி செய்பவர். அரிய உரை எழுதிய அவருக்கு நம் பாராட்டுகள் உரியன. வணக்கங்கள் உரியன.

கயிலை பாதி காளத்திபாதி அந்தாதியைப் பாடியவர் நக்கீரதேவர். அவரின் வரலாறும், இந்நூயில் உள்ள காளத்திபற்றிய ஐம்பது பாடல்களின் கருத்துச் சுருக்கமும், கண்ணப்பர் சரித்திரச் சுருக்கமும் எழுதி இத்துடன் இணைத்துள்ளேன். இவற்றைப் படித்துப் பிறகு நூலைப் படித்தால் பயன் அதிகமாகும் என்பது என்நம்பிக்கை.

சிவ பரம் பொருளை முழு முதற்கடவுளாக ஏற்கும் சமயம் சிவாத்வைத சமயமாகும். இச்சமயத்திற்குப் பன்னிரு திருமுறைகள் தோத்திர நூல்கள் ஆகும். அவற்றுள் பதினோராம் திருமுறையுள் கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி உள்ளது. எனவே ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக, சைவர்களால் தோத்திர நூலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல் இது என்பதை அறிய வேண்டும்.

எல்லோரும் இப்புனித நூலைப் பாராயணம் செய்து இகபர சௌபாக்கியங்கள் அடைய அருள் பாலிக்க வேண்டும் என எல்லாம் வல்ல திருவருட்சக்தியை வேண்டுகிறேன்.

சுபம்

அன்புடன்
ம.வே.பசுபதி

காப்பாட்சியர்
டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம்,
பெசன்ட் நகர்
சென்னை - 600 090

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நக்கீர தேவர் வரலாறு

நக்கீரரும் பாடல்களும்

நக்கீரர் மதுரையைச் சொந்த ஊராகக் கொண்டு வாழ்ந்த பெரும் கவிஞர். அவரின் தந்தையார் புகழ்பெற்ற ஓர் ஆசிரியர் ஆவார். அவர் பெயர் தத்தன் என்பர். ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை ஆகிய நூல்கள் இவர் இயற்றியவை. எட்டுத் தொகை நூல்களுள்ளும் இவரின் பாடல்கள் உள்ளன. இந்த நக்கீரர்தான் 'கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி, உள்ளிட்ட 9 நூல்கள் பாடியவர் என்று சில ஆராய்ச்சியாளர்களும், 'இல்லை; அவர் வேறொரு நக்கீரர்; அவர் 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்' என்று சில ஆராய்ச்சியாளர்களும் கூறுகின்றனர்.

நக்கீரர் இயற்றிய நூல்கள்-பாடல்கள்

1. திருமுருகாற்றுப்படை
2. நக்கீரர் நாலடி நாற்பது
3. நெடுநல் வாடை
4. அகநானூறு நூலில் 17 பாடல்கள் (36, 57, 78, 93, 120, 126, 141, 205, 227, 249, 253, 290, 310, 340, 346, 369, 389)
5. குறுந்தொகை நூலில் 8 பாடல்கள் (75, 105, 131, 143, 161, 266, 280, 368
6. நற்றிணைநூலில் 7 பாடல்கள் (31, 86, 197, 258, 340, 358, 367)
7. புறநானூறு நூலில் 3 பாடல்கள் (56, 189, 395)
8. இறையனார் அகப்பொருள் நூலுக்கு மெய்யுரை
9. கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி
10. திரு எழுகூற்றிருக்கை
11. பெருந்தேவபாணி
12. கோபப்பிரசாதம்
13. போற்றித்திருக்கலிவெண்பா
14. திருஈங்கோய் மலை எழுபது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15. திருவலஞ்சுழி மும்மணிக் கோவை
16. கார்எட்டு
17. திருக்கண்ணப்ப தேவர் திருமறம்.

இப்பட்டியில் எண் இரண்டில் உள்ள நக்கீரர் நாலடி நாற்பது என்ற நூல் மட்டும் தற்போது கிடைக்கவில்லை.

நக்கீரர் பற்றிய கதைகள்

பாண்டியனுக்கு ஒரு சந்தேதம் வந்தது. தன் மனைவியின் கூந்தலில் வீசும் மணம் இயற்கையானதா? வாசனைத் திரவங்களைப் பூசிக் கொள்வதால் ஏற்பட்ட செயற்கையானதா? என்பது அவன் சந்தேகம். அதை அவன் யாருக்கும் சொல்லாமல் 'என்மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்துள்ளது; அதற்கு விடை சொல்வதான ஒரு கவிதை எழுதிக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசளிப்பேன்' என்று அறிவித்தான்.

மனிதனின் மனத்தில் இருப்பதை இன்னொரு மனிதனால் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? அது ஈசனுக்கு மட்டுமே முடியும்! ஈசன் புரிந்துகொண்டான்.

ஈசனை முப்போதும் திருமேனி தீண்டிப் பூசிக்க வேண்டும் என்ற ஆசை அதிகம் கொண்டவன் தருமி. அப்படித் திருக்கோயிலில் உள்ள இறைவனைப் பூசிக்க வேண்டுமென்றால் கிரஹஸ்தனாக வேண்டும் என்பது ஆகமவிதி. திருமணம் செய்து கொள்ளத் தருமியிடம் பணவசதி இல்லை.

அரசன் அறிவித்த பரிசைத்தருமிக்கு வாங்கிக் கொடுத்தால் அவன் ஆசை நிறைவேறுமே என எண்ணிய இறைவன் 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் ஒரு பாட்டை எழுதித் தருமியிடம் கொடுத்தார். தருமி அரசசபையில் அப்பாடலைப் படித்தான். அரசன் பரிசு கொடுக்கும் வேளையில் நக்கீரர் 'இப் பாட்டில் பொருள் குற்றம் இருக்கிறது' எனக் கூறிப் பரிசு கொடுக்க விடாமல் தடுத்துவிட்டார்.

இறைவன் தருமிக்குத், தானே பணம் கொடுத்து மணம் செய்து வைத்திருக்கலாம். நக்கீரரின் புலமையையும் பக்தியையும் பக்திக்கு மிஞ்சிய அறிவுவைராக்கியத்தையும் உலகுக்குக் காட்டுவதும் இந்தத்திருவிளையாடலின் நோக்கமாகும். அதனால் அப்படிச் செய்யவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நக்கீரர் இறைவனிடமே வாதிட்டார். இறைவன் அக்கினியாகிய நெற்றிக் கண் காட்டினார். 'நெற்றிக் கண் காட்டினும் குற்றம் குற்றமே' என்றார் நக்கீரர்.

நெற்றிக் கண் தந்த காங்கையால் பொற்றாமறைக் குளத்தில் மூழ்கிய நக்கீரரை ஈசன் கரையேற்றினார்.

'கயிலாய தரிசனம் வேண்டும்' என நக்கீரர் வேண்ட மதுரைப் பொற்றாமரைக்குளத்தில் மூழ்கிக் காளத்தியின் பொன் முகரியில் எழுமாறு செய்தார் இறைவன். நக்கீரர் காளத்திக்கு ஒரு பாடலும் கயிலைக்கு ஒரு பாடலுமாக 50 + 50 பாடல்களால் கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதியைப் பாடினார். கயிலையின் முக்கிய சிகரமாகிய சிவானந்த ஏக நிலையம் காளத்தியில் இருப்பதால் காளத்தியில் இறைவன் தரிசனம் கொடுத்தார். அப்பரக்களுக்குக் காளத்தியில் தரிசனம் கொடுத்ததும் இக்காரணத்தினாலேயே ஆகும்.

✦✦✦

நக்கீரர் தலயாத்திரை சென்றார், ஓரிடத்தில் அமர்ந்து சிவபூஜை செய்யும் போது மரத்திலிருந்து குளத்தில் விழுந்த இலை மீனாகவும் தரையில் விழுந்த இலை பறவையாகவும் மாறியது கண்டு அதிசயித்தார். ஓர் இலை தரையில் பாதி தண்ணீரில் பாதியாக விழுந்தது. பாதி மீனாகவும், பாதிப் பறவையாகவும் ஆயிற்று. நக்கீரர் சிவபூஜையை நிறுத்திவிட்டு அவற்றைப் பிரித்தார். சிவபூஜைப் பிழைசெய்த ஆயிரம் பேரைச் சேர்த்து வைத்துத்தின்ன வேண்டும் என இருந்த இராக்கதன் நக்கீரரைச் சிறையில் வைத்தான். அப்போது திருமுருகாற்றுப் படை பாடினார். முருகப் பெருமான் அங்குத் தோன்றி இராக்கதனை அழித்து நக்கீரரையும் பிற சிவனடியார்களையும் விடுவித்தார்.

✦✦✦

'கொண்டான்' என்னும் குயவர் சமஸ்கிருதம் உயர்ந்தது; தமிழ் தீயது' என்றான். நக்கீரர்,

'முரணின் பொதியின் முதல்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி- அரணியல்
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோடன்
ஆனந்தம் சேர்கசுவா கா'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்றுபாடினார். இந்தப் பாடலின் மந்திரசக்தியால் குயவன் இறந்தான். தமிழ், சக்திவாய்ந்த நல்லமொழி என்பது நிருபணமாயிற்று. நக்கீரர்,

'ஆரியம் நன்று தமிழ்தீது எனவுரைத்த
காரியத்தால் காலக்கோட் பட்டானை ச் - சீரிய
அம்தண் பொதிகையில் அகத்தியனார் ஆணையால்
செந்தமிழே தீர்க்கசுவா கா

என வேறொரு பாட்டுப் பாடிக் குயவனாரை உயிர் பெற்றெழச் செய்தார்.

✦✦✦

இப்படியாகப் பலகதைகள் தமிழ் இலக்கியங்களிலும் தனிப்பாடல்களிலும் நக்கீரரைப் பற்றி வழங்கப்படுகின்றன.

'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நல் கனகக் கிழிதருமிக்கு அருளி னோன் காண்"

என அப்பரடிகள் திருப்புத்தூர்த்திருத்தாண்டகத்தில் குறிப்பிடுவதால் தருமிக்குப் பொற்கிழி அருளிய கதையின் உண்மைத்தன்மை உறுதியாகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதியில் காளத்திச் செய்திகள்

கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதியில் இரட்டைப் படை எண்களில் வரும் ஐம்பது பாடல்கள் காளத்தி பற்றியனவாகும்.

அவற்றின் கருத்துரைகள் வருமாறு:

வெண்பா எண்	கருத்துரை
2	காளத்திநாதருக்கு ஆட்பட்டேன்; இதுவே பிறவிப் பயன்.
4	அவன் திருவடிகளை வணங்கி என் உள்ளம் அஞ்சலி செய்கிறது.
6	உமை பாகனாக இருப்பதால் அவன் வடிவம் இருவடிவம்.
8	பாற்கடல் கடையும் போது வந்தநஞ்சை, ஈசன் உண்டமையால் உலகம் வாழ்கிறது.
10	காளத்தியானுக்கு அடியவர் யாரோ, அவரைப் பேணாதவர்கள் இழிந்தவர்; அவர்கள் பலமுறை பிறப்பார்கள்.
12	நிலை பேறு, கண்ணப்பர் போல் வாழ்ந்தால் கிடைக்கும். வீணாகப் பொழுதைக் கழிக்கக் கூடாது.
14	ஈசா! உனக்குத் தொடர்ந்து தொண்டு செய்வேன், என்னை ஆட்கொள்!
16	இறைவா! நான் பாசத்தை விட்டுக் கடைத்தேறக் கைகொடு!
18	தேவர்களும் காணாத பெருமானை நான் காளத்தியில் காணப் போகிறேன்.
20	காளத்தியானை மலரிட்டு வணங்க வேண்டும். அவன் புகழையே துதிக்க வேண்டும்.
22	நமக்குத் தெரிந்தபடி நாம் அவனைப் புகழ்ந்தால் அவன் தகுதிக்கேற்ப நமக்கு உயர்வளிப்பான்.
24	புண்ணியபாவங்களால் மீண்டும் மீண்டும் பிறக்கும் நிலை காளத்தியானை வணங்குபவர்களுக்கு இல்லை!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

26 காளத்தியானை வணங்கும்பாக்கியம் கிடைக்குமானால் மீண்டும் பிறப்பது இனிமையானதுதான்.

28 ஆன்மா என்ற பேதைப் பெண் காளத்தி யான் மேல் கொண்ட காதலால் தவிக்கிறாள்.

30 எலும்பை அணிந்து, சுடுகாட்டில் வாழ்ந்துவரும் பிச்சைக் காரனை எப்படித் தேவர்கள் எல்லாம் வந்து வணங்குகிறார்கள்?

32 இப்படிப்பட்டவர் அற்பச் சிலந்திக்கும் அற்புத வாழ்வளித் தார்.

34 ஆன்மப் பெண் இவனைப் பிரிந்திருக்க முடியாமையால் 'வா! வா!' என்று கூவி மயங்குகிறாள்.

36 இந்தப் பெண்ணின் மயக்கம் தீரப் பெருமானின் விபூதியை இவள்மேல் தூவுங்கள். அவனின் நிருமாலியத்தை இவளுக்குச் சூட்டுங்கள்.

38 வினை என்னும் விஷவியாதி நீங்க, அவன் திருநாமம் என்னும் மருந்தை வாயிலேயே வைத்திருங்கள்.

40 பஞ்சாட்சரம் சொன்னால் பெருமான் நெருங்கி வருவான். பஞ்சாட்சரத்தின் விரிவே வேதங்கள்.

42 சதாசர்வ காலமும் அவனையே நினைத்தாலும் அவன் ஏன் எனக்கு அருள்செய்யவில்லை?

44 காளத்தியானைத் தரிசிக்க நாங்கள் புறப்பட்டு விட்டோம். நல்லகாலம் வரும்போது நீங்களும் காளத்திக்கு வருவீர்கள்.

46 காளத்தி மன்னவா! உண்டாக்குவதும் நீயே; ஒடுக்குவதும் நீயே! நின் இயல்பை யார் அறிவார்?

48 எங்கும் நிறைந்த நீ, யான்காண வா!

50 பசுபதியே எல்லா உயிர்களுக்கும் பற்றானவன்.

52 மனமே! காளத்தியானை ஏத்தாமல் பிறதெய்வங்களை ஏத்துவதில் என்ன பயன் இருக்கிறது?

54 எக்காலத்திலே, எந்தப் பிறவியிலே உன்னைக் காணப் போகிறேனோ?

56 உடம்பு சொல்வதைக் கேட்பது நல்ல வழக்கமாகாது. காளத்தியானின் பெருமையைக் கற்பதே நல்ல வழக்கம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

58 'நாளைக்கு இறைவன் தன் நிருமாலியத்தைக் கொடுப்பான்' என்று ஆசையுடன் ஏங்குகிறாள் ஆத்மப் பெண்.

60 காளத்தியானின் கழல், காப்பாற்றும்; முத்தி கொடுக்கும். தியானித்தால் முன்வந்து நிற்கும்.

62 கிளியே! ஈசனின் குணங்களை எனக்குச் சொல்!

64 கடலே! நீயும் காளத்தியானைக் காதலிக்கிறாயா? அதனால்தான் இரவெல்லாம் தூங்காமல் இருக்கிறாயா?

66 'பயப்படாதே' என்று அருள் செய்யும் பெருமானின் திருவடிகளையே தேவர்கள் எல்லாம் தலையில் சூடிக்கொண்டிருக்கிறார்கள்.

68 காமதகனம் செய்தவன் காளத்தி நாதனே ஆவான்.

70 அர்ச்சுனனுக்கு விஞ்சிய தவசி இல்லை. அவனொருவனே காளத்தி நாதனைத் தொட்டவன்.

72 எல்லாத் தெய்வங்களுக்கும் மேலான, முதலான தெய்வம் காளத்தி நாதனே!

74 தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவங்கள் எல்லாம் பொன் முகரியில் குளிக்கும் போதே போய்விடும்.

76 நீ எனக்கு அருள் செய்யாமைக்குக் காரணம், என்பாவமே.

78 'இறைவன் ஏறும் ரிஷபமே! என் தெருப்பக்கம் வா! அவனிடம் கொண்ட காதலால் நான் படும் பாட்டை உனக்காவது காட்ட வேண்டும்' என்கிறாள் ஆத்மப் பெண்.

80 குயில் பிள்ளையே! வா! 'காளத்திக் கோமான் வருகிறான்' என்று இசையுடன் கூவு!

82 'காளத்திநாதன் என்னைக் காதலினால் இளைக்க வைத்தான்,-ஆசைமயக்கத்தை உண்டாக்கினான்' என்கிறாள் ஆத்மப் பெண்.

84 சலந்தராசுரன் இறைவனை எதிர்த்துப் பட்ட பாட்டை எண்ணிப்பாருங்கள்.

86 யமன், தன் தூதுவர்களிடம் 'காளத்தியானின் அன்பர்களிடம் நெருங்காதீர்கள்' என்று சொல்லுவான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

88 இறைவனின் திருநடனம் எல்லா அண்டங்களிலும் ஊடுறுவும்.

90 கைவிரலால் சுழி போடுகிறேன், கண்ணை மூடிக் கொண்டு; காளத்தியான் என்னைக் சேர்வானென்றால், அது தொடங்கிய இடத்தில் முடியட்டும்.

92 சாவதையும், செத்தவரைக் கொளுத்துவதையும் பார்த்துமா 'இறைவனிடம் மனம் வைக்க வேண்டும்' என்ற எண்ணம் வரவில்லை!

94 இறைவனின் புனைகோலங்கள் 1. சடை 2. திருநீறு 3. புலித்தோலாடை 4. பாம்புஅணி

96 மனத்தில் இருக்கும் இறைவன் 'வா' என்று அழைத்து ஆண்டுகொள்ளும் நல்லநாள் எது என்று குறித்துக் சொல்ல வேண்டும்.

98 பிழைப்பறியாத நான் உன்னை அழைப்பதை அறிவேன். நீ வரம் கொடு!

100 மனம் தளராமல் சிவ நாமங்களையும் பஞ்சாட்சரத்தையும் எப்பொழுதும் சொல்லவேண்டும்.

-இவை காளத்தி பற்றிய வெண்பாக்களின் கருத்துச் சுருக்கங்கள் ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்ணப்பர் சரித்திரம்

பொத்தப்பி நாட்டில் உடுப்பூர் என்ற நகரிலிருந்து வேடராசாவாக ஆட்சி செய்தவன் நாகன் என்ற வேடன். அவன் மனைவி பெயர் தத்தை. இவர்களுக்குப் புத்திரபாக்கியம் இல்லை. வேடர்களின் தெய்வம் முருகன். இவர்கள் முருகனை வழிபட்டு வேண்டினார்கள். முருகன் அருளால் இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையை எல்லாரும் சுலபமாகத் தூக்கி எடுத்துக் கொஞ்சமுடியாது. கருங்கல்லைத் தூக்குவது போல அசாத்திய சிரமப்பட்டுத்தான் தூக்க முடியும். அவ்வளவு எடை; அவ்வளவு கெட்டி! அதனால் அந்தப் பிள்ளைக்குத் 'திண்ணன்' எனப் பெயரிட்டார்கள். திண்மை உடையவன் என்பது அச்சொல்லுக்குப் பொருள்.

திண்ணன் வளர்ந்தார்; குலப்பழக்கமாகிய காட்டில் வேட்டையாடும் கலையைக் கற்றுக் கொண்டார். நாணன், காடன் என்ற இரண்டு வேடர்கள் இவருக்கு நெருங்கிய நண்பர்கள்.

வேடர்குல அரசனாகிய நாகன், தன்மகனாகிய திண்ணனை அரசனாக்கினான்.

அரசனானபின் முதன்முதலாக வேட்டைக்குப் போவதைக் கன்னி வேட்டை என்பார்கள்.

எத்தனையோ மேடைகளில் பேசி ஓட்டுக்களைப் பெற்று நாடாளுமன்றத்திற்குச் செல்கிறார்கள். அவர்கள் எத்தனை முறை மேடைப் பேச்சுப் பேசியிருந்தாலும் நாடாளுமன்றத்தில் முதன் முதலாகப் பேசுவதைக் 'கன்னிப்பேச்சு' என்கிறோமல்லவா? அதைப் போலத்தான் கன்னி வேட்டை என்பதும் அரசனானபின் முதன்முதலாகச் செய்யும் வேட்டையையே குறிக்கும்.

திண்ணன் அரசனானபின் கன்னி வேட்டைக்குப் போனார். அவருடன் நாணன் காடன் என்னும் நண்பர்களும் போனார்கள். காட்டில் ஒரு பன்றி இவருடைய அம்புக்குச் சிக்காமல் போக்குக்காட்டி ஓடியது. அதை இவர்கள் வெகுதூரம் துரத்திக் கொண்டு ஓடினார்கள். கடைசியில் பன்றி, திண்ணனின் அம்படிபட்டு- துளைக்கப்பட்டு விழுந்தது. திண்ணன் உடைவாளால் பன்றியை வெட்டினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பசிக்காக அதைச் சுட்டுத் தின்ன முடிவெடுத்தார்கள். தின்றால் தாகம் வரும். அதனால் நணன் சொன்னபடி பொன் முகரி ஆற்றங்கரைக்குப் போனார்கள்.

ஆற்றுக்கு அப்பாலிருக்கும் மலையைத் திண்ணன் பார்த்தார். ஆற்றைப் பற்றிச் சொன்ன நாணனே மலையைப் பற்றியும் சொன்னான்.

'அந்தமலையில் குடுமித்தேவர் இருக்கிறார். கும்பிடலாம்' என்றான். சற்குருநாதர் பண்ணவேண்டிய உபதேசம் சமான்ய நண்பனிடமிருந்து வந்தது.

குடுமி என்றால் மலை; தேவர் என்றால் சாமி. இந்த அளவுக்கான அர்த்தத்தில்தான் நாணன் சொன்னான்.

'கயிலாயத்தில் இருந்த சிகரம் சிவானந்த ஏகநிலையம் என்பதும், அங்கிருந்துதான், திருப்பாற்கடல் கடைந்த போது தோன்றிய சிவபரம்பொருள் நஞ்சை உண்டார்; அதனால்தான் தேவர்களும் மாந்தரும் பிழைத்தனர் என்பதும், அதனால் 'நீலகண்டம்' என்ற மந்திரப் பெயர் பெற்றார் என்பதும், அதனடிப்படையிலேயே மலைக்கு மந்தரம் என்று பெயர் அமைந்தது என்பதும், சிவானந்த ஏகநிலையத்திலிருந்தே பெருமான் ரிஷபாருடக் காட்சி அருளினார் என்பதும், அந்தச்சிவானந்த ஏகநிலையம் எந்த யுகாந்த காலத்திலும் அழியாது நிலைத்திருக்கும் என்பதும், அழியாது மேலிருப்பது என்ற பொருளுடையதே 'குடுமி' என்ற சொல் என்பதும், அந்தச் சிவானந்த ஏக நியைத்தைப் பிரம்மா, காளத்தியில் கொண்டுவந்து வைத்தார் என்பதும், இந்த நிகழ்வால் கயிலாயம் காளத்திக்கு வந்தது என்பதும் ஆகிய பேரறிவால் அறியக்கூடிய எதையும் அறியாதவன் ஆயினும் நாணனின் வாக்கிலிருந்து,

'கோணமில் குடுமித்தேவர் இருப்பர்; கும்பிடலாம்'

என்ற ஐந்து வார்த்தைகள் வந்தன. இந்த ஐந்து வார்த்தைகளும் திண்ணனாருக்கு இறைவனின் ஐந்துமுகத்தாலும் பஞ்சாட்சர உபதேசம் செய்ததுபோலாயிற்று.

வேகவேகமாக ஆற்றைக் கடந்து மலையேறினார்கள். திண்ணனார் மலையின் ஒவ்வொரு படியேறும்போதும் கர்மவினைகள் ஒவ்வொன்றாகக் கழன்று இறங்கி ஓடின.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திண்ணன் பெருமானைக் கண்டார். கட்டித் தழுவிக் கொண்டார். முத்தமிட்டார். உச்சிமுகர்ந்தார். ஞானவாசனை தலைக்கேறியது. பெருமான் பசித்திருப்பதால், தான் உணவு படைக்க வேண்டுமென்றும் பெருமான் தனித்திருப்பதால் தான் துணையாக இருக்க வேண்டுமென்றும் பிரதிக்ஞை செய்துகொள்கிறார்.

திண்ணனாரின், இந்த அமைதியற்ற படபடப்புகளைச் சற்றுத் தொலைவிலிருந்து பார்த்த நாணனும் காடனும் 'இவன் தேவுமால் கொண்டான்' அதாவது இவனுக்கு 'ஞானப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று இவனுடைய தந்தை நாகனிடம் தெரிவிக்கவேண்டும்' எனச் சொல்லிக் கொண்டே அங்கிருந்து ஓடிவிட்டார்கள்.

சிவனுக்குச் சிவ வேதியர் நீராட்டிப், பூ இட்டு, மந்திரம் சொல்லி உணவு படைப்பதை முன்பொருமுறை நாகனுடன் வந்தபோது நாணன் கண்டதுண்டு. திண்ணன் சிவனைக் கண்டபோது நாணன், சிவாசாரியார் செய்தவற்றைத் தான் எப்படிப் புரிந்து கொண்டானோ அப்படியே சொன்னதுண்டு. திண்ணன் அப்படியே தானும் செய்ய விரும்பினார்.

மலையிலிருந்து கீழிறங்கினார். பன்றி மாமிசத்தைச் சுட்டார். ஒவ்வொரு துண்டத்தையும் கடித்துப் பார்த்தார். தன்வாய்க்குச் சுவையாகப் பட்ட துண்டங்களைத் தேக்கிலையில் வைத்துக் கொண்டார். அபிஷேகத்திற்குப் பொன் முகரி ஆற்று நீரை வாயில் மொண்டுகொண்டார். அலங்காரத்துக்கு மலர்கள் பறித்துத் தன் தலையில் செறுகிக்கொண்டார். மலை ஏறினார். சிவனைக் கண்டார். ஏற்கனவே இருந்த மலர்களைத் தன் செருப்புக் காலால் அப்புறப்படுத்தினார். வாயில் இருந்த நீரை இறைவன் மேல் உமிழ்ந்தார். இது திருமஞ்சனம். தன் குடுமியில் செறுகி வைத்திருந்த மலர்களை எடுத்து இறைவன் பேரில் இட்டார். இது அலங்காரம்; அருச்சனையும் கூட! தான் வெட்டிச் சுட்டுச் சுவைபார்த்துக் கொண்டுவந்த பன்றிமாமிசத்துண்டுகளை இறைவனின் எதிரில் வைத்துச் சாப்பிடு என்றார். இது மகாநைவேத்யம்.

பெருமானுக்குப் பரமதிருப்தி; உபசாரமாகச் செய்யப்பட்ட பூஜை போலவே, அன்பை மையப்படுத்தி உண்மையாகவே செய்யப்பட்ட பூஜை இது என்பதால் பெருமானுக்குப்பரமதிருப்தி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இராமபிரானுக்குக் குகன் தேனும் மீனும் கொடுத்தபோது இராமபிரான் 'அறிவில்லாமல் செய்கிறாய்! நான் சத்ரியன் என்பதால் மீன் சாப்பிடுவேன் என்று நீயாக முடிவெடுப்பதா?' என்றெல்லாம் கேட்டுக் குகனின் அன்புமனசைப் புண்படுத்தவில்லை. 'உண்டனம் ஆகும் அன்றே' = 'நீ அன்புடன் கொடுத்த மீனைச் சாப்பிட்டதாக வைத்துக்கொள்' என்று கனிவுடன் கூறினார்.

திண்ணனார் படைத்த பன்றிக்கறியைப் பெருமான் ஏற்றுக் கொண்டார். திண்ணனாரின் செயலால் காட்டுப் பன்றி, மகாபாக்கியம் அடைந்தது என்றால் மிகையாகாது.

பன்றிக் கறியைப் படையல் வைத்த திண்ணனார் வில்லைத் தரையில் ஊன்றியபடி, பிற்பகலிலும் மாலையிலும் இரவு முழுவதும் இறைவனுக்குக் காவலாக நின்று கொண்டிருந்தார்.

நாணனும் காடனும் திண்ணனைப் பற்றிச் சொன்ன செய்திகளைக் கேட்ட நாகனும் தத்தையும் வருந்தினார்கள். திண்ணனைக் காளத்தி மலையிலிருந்து மீட்டு அழைத்து வர ஆன முயற்சிகளும் செய்தார்கள்; தோற்றார்கள்.

திண்ணன் பிடித்தபிடி உடும்புப் பிடி. அவர்பிடித்தபிடி அவருக்குப் பிடித்த பிடி!

மறுநாள் காலை, திண்ணன் இறைவனுக்குத் திருவமுது செய்விப்பதற்காக வேட்டைக்குப் புறப்பட்டுப்போனார். அந்த நேரத்தில் சிவ கோசரியார் என்னும் சிவவேதியர் சிவபூஜை செய்யவந்தார். செருப்புக் கால் பதிவுகளும் எலும்புத்துண்டுகளும் அவர் பார்வையில்பட்டன. 'அனுசிதம்'-மரபுப் பிழையான அருவருப்புத்தரும் பாவச் செயல் நடந்துள்ளது என அறிந்து பதைத்தார். தூய்மை செய்து, பரிகாரங்கள் செய்து பூஜை செய்தார். சென்றார்.

திண்ணனார் வந்தார்; வாயில் புனித நீரும், தலையில் பூக்களும் தேக்கிலையில் மாமிசமுமாக! நேற்றுச் செய்தது போலவே இன்றும் இவரின் பூஜையும் காவலும் தொடர்ந்தது.

அன்புப் பூஜையும் அறிவுப் பூஜையுமாக மாறி மாறி நடந்தது ஐந்து நாட்கள்.

ஐந்தாம் நாள் இரவு சிவன், சிவகோசரியாரின் கனவில் வெளிப்பட்டுத் திண்ணனின் அன்புப் பெருக்கை அகல விரித்துரைத்தார். நாளைக்கு அதை நேரில்காண்க என அருளினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திண்ணன் வேட்டையாடி உணவுதயாரித்து வரும்போது சில கெட்ட சகுனங்கள் ஏற்பட்டன. பெருமானுக்கு ஏதேனும் கெடுதிநேர்ந்திருக்குமோ என அஞ்சியவாறு வேகமாக வந்தார்.

சிவகோசரியார் மறைந்திருந்து பார்ப்பதை அறியாத திண்ணன் பெருமானை நெருங்கினார். பெருமானின் வலக் கண்ணிலிருந்து இரத்தம் சொரிவதைப் பார்த்தார். பதைத்தார். பச்சிலைகளைத் தேடிக் கொண்டுவந்து கண்ணில் பிழிந்தார்; பயனில்லை. 'ஊனுக்கு ஊன்' என்ற வேடர் மருந்துவமுறை நினைவுக்கு வந்தது. தன் கண்ணை அம்பினால் நோண்டி எடுத்துச் சுவாமியின் வலக்கண்ணில் அப்பினார்; இரத்தம் நின்றது. தன்கண் போனது பற்றி வருந்தாமல் இறைவனின் கண்ணில் வழிந்த இரத்தம் நின்றதற்காகப் புளகாங்கிதம் அடைந்து துள்ளிக்குதித்துத் தோள்தட்டி ஆடினார்.

அந்த ஆனந்தம் நெடுநேரம் நிலைக்கவில்லை. இறைவனின் இடக் கண்ணிலிருந்து இரத்தம் வழியத் தொடங்கியது. திண்ணன் 'ஊனுக்கு ஊன்' என்ற வைத்தியத்தையே தொடர முடிவெடுத்தார்.

இருக்கிற இரண்டாங்கண்ணையும் பிடுங்கிவிட்டால் எங்கே அப்புவது எனத் தெரியாமல் போகுமே என்ற கவலை வந்துவிட்டது. தன் செருப்புக்காலை இறைவனின் இடக்கண் அருகில் வைத்துக் கொண்டார்; தன்கண்ணை அம்பால் தோண்ட யத்தனித்தார்.

பெருமானால் தாங்கிக் கொள்ள முடியவில்லை; 'கண்ணப்ப! நிற்க!' என மூன்று முறை கூவினார். வலப்பக்கத்தில் நிலையாக இருக்கச் செய்தார்!

திண்ணன் - நாகனும் தத்தையும் வைத்த பெயர்!

கண்ணப்பன் - கடவுள் வைத்த பெயர்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ காளத்தி க்ஷேத்ர மகாத்மியம்

ஸ்ரீ கொட்ரா, வெங்கட நரசிம்ம சாஸ்திரி அவர்கள் தெலுங்கில் எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்பு - தழுவல்

கயிலாச வாஸீ பகவான்
காளகஸ் தீஸ்வர சிவஹ |
கரோது நித்யகல்யாணம்
கருணா வருணா லயஹ ||

இந்தத் தலத்தைத் தெற்குக் கயிலாயம் -தட்சிண கயிலாசம் என்று ஆசிரியர்கள் சிறப்பித்துச் சொல்வார்கள்.

ஸ்ரீ காளத்தித்தலத்தில் உள்ள சிவலிங்கம், பஞ்ச பூதலிங்கங்களில் 'வாயுலிங்கம்' (காற்றுலிங்கம்) என்று புராணங்கள் தெரிவிக்கின்றன.

கிருதயுகத்தில் வாயுபகவான் இங்கே கடும் தவம்புரிந்தார். ஸ்ரீ காளத்திநாதர் அவர்தவத்தை மெச்சி இரண்டுவரங்கள் கொடுத்தார். 1. எல்லா இடங்களிலும் வாயு (காற்று) நீக்கமில்லாமல் பரவி இருப்பதற்கான வரம். 2. ஸ்ரீகாளத்தியில் உள்ள சிவலிங்கம் 'வாயுலிங்கம்' என்ற திருநாமத்துடன் விளங்க வேண்டும் என்பதான வரம்.

இப்படி வாயுபகவான் கடும் தவம் செய்து வரம் பெற்றதால் ஸ்ரீகாளத்தில் உள்ள லிங்கம் வாயுலிங்கம் என்ற மிகுந்த புகழ் பெற்றது.

இந்த லிங்கம் வாயுலிங்கம் என்பதற்கு ஆதாரமாகக் கருவறையில் (கர்ப்ப க்ருகத்தில்) இரண்டு விளக்குகள் அசைந்தவாறே எரிந்து கொண்டிருக்கும். இரண்டு ஜோதிகள் ஒளிவிடுவதும் இங்குள்ளது, வாயுலிங்கம் என்பதைத் தெளிவாக்குகிறது. (காற்றுக்கு இரண்டு குணங்கள்: 'வளியின் எண்ணும் இரண்டு குணமாகி இயைவான்' என்பது விநாயகபுராணம்)

கயிலாயமலை பிரசித்தமானது. அது நூறு சிகரங்களை உடையது. அதில் சிவானந்த ஏகநிலையம் என்று ஓர் உச்சி. (உச்சி-குடுமி-சிகரம்) உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் உலக நன்மைக்காகக் கயிலாயத்தில் உள்ள நூறுசிகரங்களில் ஒன்றான சிவானந்த ஏகநிலையம் என்ற உச்சியை மகேஸ்வரன் எழுந்தருளுவதற்காக இங்குக் கொண்டுவந்து ஸ்தாபித்தார்.) அதனால், பிரசித்தமான எல்லாச் சிவஸ்தலங்களைக் காட்டிலும் மிக உயர்ந்ததாக இத்தலம் விளங்குகிறது.

'பூமவ் தட்சிண கயிலாசே
பிரவேசான் முக்தஹா'

என்ற ஆதாரம் இந்தத் தலத்தில் வாழும் உயிரினங்களுக்கும் மோட்சம் கிடைக்கும் என்று தெரிவிக்கிறது.

'காஸ்யாந்து மரணான் முக்தி

என்ற வாக்கியம் 'காசி முதலாகிய தலங்களில் மரணம் அடைந்தால் தான் முக்கி கிடைக்கும்' என்று கூறுகிறது. ஆனால் காளத்தியில் கால்வைத்தாலே முத்தி கிடைக்கும். (பிரவேசான் முக்தி)

பிரம்மா உலகத்தைப் படைப்பதற்குத் தமக்கு வலிமை ஏற்ட வேண்டும் என்று சதாசிவத்திடம் வரம் கேட்டார்.

கயிலாசஹ! பஞ்சதாப் ரோக்த:
தான ஐஸ்வர்யதி பேததாஹா |

என்று தொடங்கி

உக்தம் தேப்யோரி சர்வார்த்த சாதனம்
பஞ்சமம் ஜிபுஹி:
ஸ்ரீமத் தட்சிணே கயிலாச தானம்
சர்வ ஜனாஸ்ரயம் தபஹ |
கர்த்தும் யாதோத்ரைவ சுகம்
நாயதோத்ருவம் ||

என்று அவர் பிரார்த்தனை செய்தார். அதைக் கேட்ட சதாசிவர் சந்தோஷம் அடைந்தார். அவ்வாறே வரங்களைக் கொடுத்தார். மேலும் 'பிரம்மா! எல்லா உலகங்களும் அழியும் காலத்திலும் கயிலாய மலையின் சிவானந்த ஏகநிலயம் என்னும் உச்சிமட்டும் அழியாது. முன்னைய ஊழிக்கலங்களிலும் - பிரளய காலங்களிலும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அது அழிந்ததில்லை. அது என் சூலத்தின்மேல் உள்ளது' என்ற ஒரு செய்தியையும் தெரிவித்தார். அவ்வளவு சிறப்புள்ள-பிரளய காலத்திலும் அழியாத சிவானந்த ஏகநிலையம் என்னும் கயிலாயமலைச் சிகரத்தைத்தான் பிரம்மா ஸ்ரீகாளத்தியில் கொண்டுவந்து வைத்து மகேஸ்வரனை எழுந்தருளச் செய்தார்.

இந்த நிகழ்ச்சியால் சிவானந்த ஏகநிலையம்- ஸ்ரீகாளத்திமலை யுகாந்த காலத்திலும்-பிரளய காலத்திலும் அழியாது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இங்குள்ள சிவலிங்கம் திருமால் இந்திரன் பூஜித்த சுயம் வடிவம் உடையது. இதனைப் பூஜிக்குமாறு பிரம்மாவிடம் ஸ்ரீ சதாசிவர் தெரிவித்தார். இதனால் இதன் பெருமையை அறியலாம்.

போன ஜன்மங்களில் செய்த பாபங்களின் கெட்டபலன்கள் தீயந்து போக வேண்டும். அதற்கு ஸ்ரீகாளத்திக்கு வந்து தரிசனம் செய்யவேண்டும். மனிதர்கள் அடையும் துன்பமாகிய வெப்பத்திற்கு மழைமேகம் போன்றது இந்தத்தலம். ஆத்யாதிக, ஆதி தெய்விக, ஆதி பௌதிகத்தலம் இந்தத்தலமே ஆகும்.

மனிதர்களின் பூர்வ ஜன்ம பாபங்களை முழுவதுமாக அழிக்கும் தலம் ஸ்ரீகாளத்தித் தலமே ஆகும் என்று வேதங்கள் சொல்கின்றன.

'மோட்சம் வேண்டும் என்று நினைப்பவர்கள் ஸ்ரீகாளத்திக்குச் செல்லவேண்டும்' என்று பரத்வாஜ மகரிஷி கூறியதாக சூதமகரிஷி தெரிவித்தார்.

இந்தத் தலத்தின் பெருமையை முழுவதுமாகச் சொல்வது என்ப்து பரமசிவனைத் தவிர வேறுயாராலும் ஆகாது.

கிருதயுகத்தில் இத்தலம் 'பிரம்மபுரி' என்று பெயர் பெற்று விளங்கியது. துவாபர யுகத்தில் இத்தலம் 'நாகபுரி' என்று பெயர் பெற்று விளங்கியது. கலியுகத்தில் இத்தலம் 'வரகுணபுரி' என்று பெயர் பெற்று விளங்குகிறது.

கிருதயுகம் முதலாகிய நான்கு யுகங்களிலும் இத்தலம் வேறு வேறு பெயர்களுடன் விளங்குவதைப் போலவே இத்தலத்தில் உள்ள சிவலிங்கமும் நான்கு யுகங்களிலும் வேறு வேறு நிறங்களில் காட்சி அளிக்கிறது.

கிருதயுகத்தில் இத்தலத்தில் உள்ள சிவலிங்கம் பொன்னிறமாகக் காட்சி அளித்தது. திரேதாயுகத்தில் இத்தலத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ள சிவலிங்கம் வெள்ளி நிறமாகக் காட்சி அளித்தது. கலியுகத்தில் இத்தலத்தில் உள்ள சிவலிங்கம் கல்நிறமாகக் காட்சி அளிக்கிறது.

சிவபெருமான் யுகங்கள்தோறும் வேறு வேறு நிறங்களில் காட்சி அளித்து, பக்தர்களை ரட்சிக்கிறார் என்று தலபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தலத்தில் பிரம்மா, விஷ்ணு, இந்திரர் முதலிய கடவுளர்களும், வசிஷ்டர், அகத்தியர் முதலிய முனிவர்களும், சிலந்தி (சீ) பாம்பு (காளம்) யானை (அத்தி) முதலிய விலங்குகளும் வழிபாடு செய்து முக்தி அடைந்தமையைத் தலபுராணம் விவரித்துச் சொல்கிறது.

இவை மட்டுமின்றி யுகம் வாரியாக யார்யார் பூஜித்து முத்தி அடைந்தார்கள் என்ற விவரமும் தலபுராணத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிருதயுகத்தில், இத்தலத்தில் வழிபட்டு வரம்பெற்று முத்தி அடைந்தவர்கள் பத்துப் பேர்கள் ஆவார்கள். (1) பிரமன் (2) அகத்தியர் (3) அம்பாள் (4) நீலா (5) ஹரஹரன் (6) மயூரன் (7) பீமன் (8) சந்திரன் (9) சூர்யன் (10) இந்திரன் என்பவர்கள் அந்தப் பத்துப் பேர்கள் ஆவர்.

திரேதாயுகத்தில், இத்தலத்தில் வழிபட்டு வரம் பெற்று முத்தி அடைந்தவர்கள் பதினொருபேர்கள் ஆவர். (1) ஹரி (2) பிரம்மா (3) லட்சுமி (4) குமாரஸ்வாமி (5) ஸ்ரீராமர் (6) மார்க்கண்டேயர் (7) சிலந்தி (8) பாம்பு (9) யானை (10) சுதர்சன சக்ரம். (11) கண்ணப்பர் என்பவர்கள் அந்தப் பதினொருபேர்கள் ஆவார்.

துவாபரயுகத்தில் இத்தலத்தில் வழிபட்டு வரம்பெற்று முக்தி அடைந்தவர்கள் ஒன்பது பேர்கள் ஆவார்கள் (1) சுபகா (2) விஜயன் (3) ஜபாலா (4) மிருத்யுஞ்சய (5) நாரதா (6) சுகமகரிஷி (7) சனத்குமாரா (8) பராசரா (9) சஹஸ்ர தேவர்கள்.

கலியுகத்தில், இத்தலத்தில் வழிபட்டு வரம் பெற்று முத்தி அடைந்தவர்கள் எட்டுப்பேர்கள் ஆவர். (1) சாரங்கன் (2) வரகுணர் (3) இராஜேந்திரசோழன் (4) நீலகண்டர் (5) சக்ரதரன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(6) அமிர்தலதா (7) காந்திமதி (8) பத்மசேனர் என்பவர்கள் அந்த எட்டுப்பேர்கள் ஆவர்.

இந்தக் தட்சிண கயிலாய மலையில் சித்குகை ஒன்று உள்ளது. அதனைச் சதாசிவகுகை என்றும், யட்ச குகை என்றும் சொல்வார்கள். இந்தக் குகையில்தான் சதாசிவர் தேவதைகளுக்குத் தேர்வு வைத்தார். அபூர்வசக்திகள் தேவதைகளுக்கு உள்ளன. அதனால் அவர்கள் கர்வம் கொண்டிருந்தார்கள். அவர்களின் கர்வத்தை அடக்கவே சதாசிவர் பரீட்சை வைத்தார்.

வைக்கோலைக் குகையின் வாயிலில் போட்டு அக்னிதேவதையை எரிக்குமாறு கட்டளை இட்டார். அக்னியால் அதை எரிக்க முடியவில்லை. வாயுவை அழைத்து வைக்கோலை அசைக்குமாறு உத்தரவிட்டார். வாயுவினால் அதை அசைக்க முடியவில்லை. இப்படியே அந்தக் குகையில் தேவதைகளும் தேவர்களும் தம் சக்தியால் எதையும் செய்யமுடியாமல் தோற்றனர்.

அவர்களின் கர்வமும் நீங்கியது. இப்படியான அபூர்வமான குகையுள்ள மலை ஸ்ரீ தட்சிண கயிலாய மலை ஆகும்.

இந்தக் குகையில் பிரம்மா, விஷ்ணு, அக்கினி, வாயு ஆகியோருக்குப் பரமேஸ்வரன் ஒவ்வோர் ஆண்டும் காட்சி கொடுக்கிறார் என்று தலபுராணம் கூறுகிறது. இச்செய்தி வேதமாதா கேனே பனிஷத்தில் உள்ளது. தசோபனிஷத்தில் இரண்டாவது கேனோபனிஷத் ஆகும். அதில் இரண்டாவது தலைப்பில் இச்செய்தி வருகிறது.

தலபுராணம் 74-ஆவது அத்யாயத்தில் ஸ்கந்தன் நாரதருக்குச் சொன்ன பகுதி உள்ளது. அப்பகுதியில் இத்திருக்கோயிலில் உள்ள நந்தி சிவஞானாகாரமானது என்றும் தர்புஜநதி (பொன்முகரி) தட்சிண கயிலாயம், காடு ஆகியவை எல்லாம் சிவஞானாகாரமானவை என்றும் நாரதருக்குச் சொல்கிறார்.

'ஓ! நாரதா! இதில் ஒரு ரகசியம் இருக்கிறது. நிதானமாக இதனைக்கேள். பூவுலகில் உள்ள எல்லாத் தலங்களிலும் ஸ்ரீகாளத்தி பாஸ்கர க்ஷேத்திரம் என்று விளங்குகிறது!'

'ஓ! நாரதா! நான்கு காரணங்களால் இத்தலத்தில் சம்பூர்ண சான்னித்யம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால் இதனை பாஸ்கர க்ஷேத்திரம் என்று சொல்கிறார்கள்.'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'பூர்ணமான சான்னித்யம் உள்ள க்ஷேத்திரம் பாஸ்கர க்ஷேத்திரம்!.'

நான்கு காரணங்கள்:-

(1) எந்தத்தலத்தில் சிவலிங்கம் பெரியதும் பிரபல்யமானதும் சுயம்புவானதுமாக இருக்கிறதோ அந்தத்தலங்களில் கால்பங்கு சான்னித்யம் இருக்கும்.

(2) முன்சொன்னதுடன், அரி, பிரம்மா, இந்திரன் பூஜித்த தலமாகவும் இருக்குமானால் அத்தலங்களில் அரைப்பங்கு சான்னித்தியம் இருக்கும்.

(3) ஒரு நதிக்கரையில் க்ஷேத்திரம் இருக்கவேண்டும். அந்த நதியும் தோன்றிய இடம் முதல், கடலில் கலக்கும் இடம் வரை ஒரே பெயருடன் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நதிக்கரையில் இருக்கும் தலத்தில் முக்கால்பங்கு சான்னித்யம் இருக்கும். ஸ்ரீகாளத்தியில் ஓடும் பொன்முகரி நதி அப்படிப்பட்டது.

(4) மேலே கூறியபடி பெரிய பிரபல்யமான - சிவலிங்கம் - அரி, பிரம்மா, இந்திரர் வழிபட்ட சிறப்பு, தொடக்கம் முதல் முடிவு வரை ஒரே பெயரில் வழங்கும் புண்ய நதிக்கரையில் உள்ளது என்னும் சிறப்பு ஆகியவற்றுடன் பாவம் நீக்கும் மலை - "மலையே சிவன்" என்று உள்ள தலம் எதுவோ அங்கேதான் முழுமையான சான்னித்யம் உண்டு.

அப்படிப்பட்ட முழுசான்னித்யம் உடையது பாஸ்கர க்ஷேத்திரம் ஸ்ரீகாளத்தியே ஆகும்"- இவ்வாறு ஸ்கந்தர் நாரதருக்குக் கூறினார்.

மிகப்பெரிய ஞானிகளுக்குப் பரமேஸ்வரன் காட்சி கொடுத்து உபதேசம் செய்தார்.

ஒருசமயம், சுகர், சனகர், சனந்தனர், சனாதனார் சனற்குமாரர், பராசர மகரிஷி ஆகியவர்களுக்குள் ஒரு சர்ச்சை எழுந்தது. 'ஜீவாத்மா வேறு பரமாத்மா வேறு என்பதற்கு சிவமய மோகத்தால் பலகாரணங்கள் கூறப்பட்டன. பேதமே தலை நிமிர்ந்து நின்றது.

பரமேஸ்வரன் பிரம்மரிஷியுடன் அங்கே பிரத்யட்சமானார். முனிவர்கள் மிகவும் சந்தோஷம் அடைந்து வழிப்பட்டார்கள்.

'ஹே! சர்வரட்சகா! நமஸ்காரம். உங்கள் காட்சி தவிர எங்களுக்கு வேறெதுவும் தேவையில்லை என்றாலும் உலக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நன்மைக்காக எங்கள் சர்ச்சைக்குத் தீர்ப்புச் சொல்லுங்கள். பேதம் உண்டா இல்லையா? உண்மையா கற்பனையா? தெரிவிக்க வேண்டுகிறோம்"என்றார்கள்.

இவ்வாறு முனிவர்கள் பிரார்த்தித்தார்கள். ஸ்ரீபரமேஸ்வரர் முனிவர்களுக்கு அறிவுரை சொன்னார்.

"முனிவர்களே! நீங்கள் பிரசித்தமானவர்கள். பேதம் உண்மை என்று பேசுகிறீர்கள். அபேதத்திற்கு வேதத்தில் பிரமாணம் இல்லை என்றும் பேசுகிறீர்கள். வேறு வேறு சாட்சிகள் சொல்கிறீர்கள். உங்கள் பேச்சைக் கேட்டால் எங்களுக்கும் சந்தேகம் வருகிறது. வேதாந்த சித்தாந்த ரகஸ்யங்களை உலக நன்மைக்காகச் சொல்லுங்கள்" என்றார் ஸ்ரீ பரமேஸ்வரர்.

ஸ்ரீ பரமேஸ்வரரின் இந்த அறிவுரையில் உள்ள சூட்சமம் முனிவர்களுக்குப் புரிந்தது. 'ஜீவாத்மா வேறு; பரமாத்மா வேறு' என்று பேதம் பேசுவது நன்மையாகாது; அது உண்மையும் ஆகாது, என்று முனிவர்கள் புரிந்து கொண்டார்கள்.

உடனே ஸ்ரீ பரமேஸ்வரர் முனிவர்களுக்கு அபேததத்துவத்தை உபதேசம் செய்தார். அனுக்கிரகம் செய்தார். இந்தச் செய்தியைப் பிரமன் வியாசர் முதலியோருக்குத் தெரிவித்தார். பின்னர் பிரமனின் அறிவுரைப்படி வியாசர் முதலில் முனிவர்கள் ஸ்ரீதட்சிண கயிலாயத்துக்கு வந்து தவம் செய்தனர். அந்தத் தவத்தினால் மகிழ்ந்த ஸ்ரீபரமேஸ்வரர் வியாசர் முதலிய முனிவர்களுக்கு ஸ்ரீதட்சிணாமூர்த்தி வடிவத்தில் காட்சி கொடுத்தார். சின்முத்திரை காட்டி, 'வைதிகபீடம்' என்பதில் எழுந்தருளினார்.

எல்லாமுனிவர்களும் பேதபுத்தி நீங்கி ஞானோதயம் பெற்றதலம் ஸ்ரீகாளத்தித் தலமாகும்.

ஞானம் பெறவும், எல்லா நன்மைகளையும் பெறவும் சகலரும் இத்தலத்திற்கு வந்து தரிசிக்கப் பிரார்த்திக்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரத்வாஜ ஹிருதயம்

ஸ்தலபதி ஸ்தானிகர் மகத் ஆசார்யார் சிவஸ்ரீ எஸ். எம். கே சதாசிவ - குருக்கள் எம். ஏ. பி. எல் தலைமை சிவாச்சாரியார், ஸ்ரீ காளஹஸ்தி திருக்கோயில் எழுதியது.

ஸ்ரீமத் தக்ஷிண கைலாஸ ஸ்திதம் ஞானாம்பிகா பதிம் |
பாரத்வாஜ முகராயம் பக்த்ம்யம் பஜாம்யஹ்ம் ||
ஞானப் ரதாம் ஞான வல்லீம் ஞான வித்யா விநோதினீம் |
ஞானாம் பிகாம் ஸ்ருதி த்யாயேத் அக்ஞானாந்த தீபிகாம் ||

திருக்காளத்தி மிகச்சிறந்த சிவத்தலமாகும். இது பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றான வாயுத்தலமாகும். இத்தலம் தென்கயிலாயம் என்று புகழப்படுகிறது. இதனை சத்தியவிரத க்ஷேத்திரம் என்றும், பாஸ்கர க்ஷேத்திரம் என்றும் அகண்ட வில்வாரணியம் என்றும், சத்யோமூர்த்தி க்ஷேத்திரம் என்றும், விஞ்ஞான க்ஷேத்திரம் என்றும், சிவானந்தக நிலையம் என்றும் தலவரலாறு குறிக்கின்றது. இந்த இடத்தில் சிவபெருமான் வாயு ஸ்வரூபமாகவும், விராட்மூர்த்தி யாகவும் தோன்றுகிறார். இத்தலத்தில் ஒரு சிலந்தி, யானை, நாகம் ஆகியவை சுவாமியை பூசித்து முத்திபெற்றுள்ளன. அவ்வாறே வேடன் திண்ணனார், சிவபெருமானுக்குத் தம் கண்ணையே சமர்ப்பித்துக் 'கண்ணப்பர்' என்ற பெயரைப் பெற்றார். இத்தலத்தில் சிவபெருமான் சீகாளத்திநாதன் என்று, தம் பக்தர்களின் பெயரினால் உலத்தின் முன் காட்சியளிக்கிறார். இத்தலம் சந்தானகுரவர்கள் நால்வராலும் பாடப்பெற்றதாகும். இந்தத்தலத்தின் ஆசிரமங்களுள் பாரத்வாஜ ஆசிரமமும் ஒன்று.

இந்த க்ஷேத்திரத்தில் பரமேஸ்வரனுடைய தென்முகத்தில் தீட்சை பெற்ற ஆதிசைவரான பரத்துவாச முனிவர், காளத்திநாதரை பூசித்து முத்தியடைந்தார். அந்த பாரத்துவாச முனிவரின் பரம்பரையினராகிய எங்கள் முன்னோர்கள் ஸ்ரீஞானாம்பிகை சன்னதியில் தம்பதியராக ஆசாரிய அபிஷேகம் (சிவதீட்சை) செய்து கொண்டு, ஆகமவிதிகளின்படி ஷட்கால (ஆறுகால) பூஜையும், அவற்றுடன் நான்குகால அபிஷேகமும் செய்து வருகின்றனர். இந்த அபிஷேகங்களில் அபிஷேக திரவியங்களில் பாதியை அம்பாளுக்கும், பாதியை காளத்திநாதருக்கும் பிரிந்து அபிஷேகம் செய்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜெகன்மாதாவான ஞானாம்பிகையே இங்கு சுவாமிக்கு அபிஷேகமும் பூஜையும் செய்துள்ளதாக ஸ்தலவரலாற்றில் கூறப்படுகிறது. அதற்குரிய அடையாளமாக, இங்கே சுவாமி, அம்பாள் இருவருடைய கருவறை (கர்ப்பக்கிரஹம்) எதிரெதிரே உள்ளன. சுவாமி மேற்கு முகமாகவும், அம்மன் கிழக்கு முகமாகவும் உள்ளனர். இங்கு முதல்கால அபிஷேகம், முதலில் அம்பாளுக்கும் பிறகு சுவாமிக்கும் செய்யப்படுகிறது. இங்கு நிவேதனம் முதலில் கண்ணப்பருக்கும் பிறகு சுவாமிக்கும், அம்பாளுக்கும் செய்யப்படுகிறது. அதாவது கண்ணப்பன் செய்த நிவேதன முறைப்படியே இன்று வரை நடைபெற்று வருகிறது.

இரண்டாவது கால அபிஷேகத்தின் போது, பரமபக்தரான கண்ணப்பர் முதலில் அம்மனுக்கும் பின் சுவாமிக்கும் அபிஷேகம் செய்தது போலவே இப்பொழுதும் நடைபெற்றது வருகிறது. அதன்பிறகே பரிவார தேவதைகளுக்கு அபிஷேகமும், நைவேத்தியமும் நித்திய அக்னிஹோமமும் மற்றும் நித்தியஉற்சவமும் நடைபெற்று வருகிறது. இத்தகைய பூஜையைப் பார்த்து மகிழ்ந்த ஆதிசங்கரர் தம் சிவானந்த லகரியில், 63 ஆம் சுலோகத்தில்,

மார்க்கா வர்த்தித பசுபதே ரங்கஸ்ய கூர்ச்சாயதே |
கண்டூஷாம்பு நிஷேசனம் புரறிபோர் திவ்யாபி ஷேகாயதே |
கிஞ்சித் பக்ஷித மாம்ஸ சேஷ கபலம் நவ்யோய ஹாராய தே |
பக்தி: கிந் நகரோத்ய ஹோ வநசரோ பக்தாவ தம்சாயதே |

என்று பாடியுள்ளார். வேடனாகிய திண்ணனார் அவரது பூர்வஜென்ம புண்ணியத்தால் சுவாமியைப் பார்த்தவுடனே மெய்மறந்து அதிகபக்தியுடன், வாயில் தண்ணீர் கொண்டுவந்து அபிஷேகம் செய்து, தானே ருசிபார்த்துச் சுவைத்த மாமிசத்தை நைவேத்தியம் செய்தார். காட்டில் நடந்து நடந்து தேய்ந்த செருப்பை பெருமானின் கண்ணருகேவைத்து, தன் கண்ணை எடுத்துக் கொடுத்தார். இதனை சுவாமியே, வேதமுறைப்படி நடைபெற்ற புனித அபிஷேமாகவும், நைவேத்தியமாகவும் ஏற்றுக்கொண்டார். இது எத்தகைய ஆச்சர்யமான செயல்? பக்தியை விஞ்சியது உலகில் ஏதும் உண்டா? இல்லை, அதனால் காட்டுமனிதர் திண்ணனார், பக்தர்களுள் பரமசிரேஷ்டரானார் என்பது அந்த சுலோகத்தின் கருத்தாகும். ஆதிங்கரர் மேலும் தமது, விவேக சூடாமணியில்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"முக்தி சாதன சாமாகினயாம் பக்திரேவா கர்யசி" என்ற வரிகளில் திண்ணனுடைய பக்தியை வெளிப்படுத்தியுள்ளார். இவ்வூரில் செய்யப்படும் பூசை மிகவும் பிரசித்தம் என்றும் கூறியுள்ளார்.

இங்கு மூன்றாம் கால அபிஷேகம் (உச்சிகால அபிடேகம்) சிருட்டிகர்த்தாவான பிரம்மா செய்தபடியே, நடைபெறுகிறது.

மற்றும் பிரதோஷகாலத்தில் (மாலைநேரத்தில்) காரண ஆகமத்தில் சொன்னபடி, சூரிய அஸ்தமானமாகும் 1½ மணி நேரம், நாள்தோறும் பல்லாண்டுகளாக, தலைமுறை தலைமுறையாக நடைபெற்று வருகிறது. இந்த பிரதோஷ காலத்தில் சகல தேவதைகளும் சிவசன்னதிக்கு வந்து பூஜையில் கலந்து கொள்வதாக ஐதிகம். வேதத்தில் கூறியபடி தாய்க்கும், தந்தைக்கும் தெய்வவழிபாடு நடைபெறுகிறது. வேதத்தில் முதலில் அம்பாளுக்கும், பின்பு சுவாமிக்கும் நான்குகால அபிஷேகம் செய்ய விதிக்கப்பட்டுள்ளது. இந்த அபிஷேகமுறையால் பெருமான் அத்வைத தத்துவமாகவும், அர்த்த நாரீஸ்வராகவும் கருதப்படுகிறார். இதனையே ஆதிசங்கரர் சௌந்தரியலகரியில் "சிவா சக்தியா யுக்தோ!" என்று போற்றியுள்ளார். இந்த முறையே நமது இல்லற வாழ்க்கையின் மூலசூத்திரமாகும்.

இந்தத்தலத்தில் பக்தர்கள் காணிக்கையாகத்தரும் பழம், பூ மற்றும் பூசனைப் பொருள்கள் முதலில் கண்ணப்பநாயனார் திருமுன்புவைத்து, பின்னர் சுவாமிக்கு அர்ப்பணம் செய்யப்படு கின்றன. அதன் பின்னர் பிரசாதம் வழங்கப்படுகிறது. இம்முறை பழங்காலத்திலிருந்து நிர்ணயம் செய்யப்பட்டு கடைப்பிடிக்கப் பட்டுவருகிறது. இதனைப்போலவே அம்மன் சன்னதியிலும் பக்தர்கள் கொடுக்கும், பொருள்கள் ஸ்ரீலட்சுமிதேவி, ஸ்ரீஞானம்பிகையை பரதேவதை லலிதாம்பிகையாக பாவித்து ஸ்ரீசக்ரபூஜை செய்து அம்பாளுக்கு சமர்ப்பிக்கும் வகையில் எங்கள் பெரியோர்கள் நிச்சயித்தபடி அதன்படி இன்றும் நடை பெறுகின்றது. இதனை விளக்கும் வகையில் இன்றும் அம்பாளுக்கு லலிதாதிரிசதீ, ஸகஸ்ரநாமத்துடன், ஸ்ரீசக்ரத்திற்கு குங்கும பூஜை நடைபெறுகிறது. இங்குதான் பக்திக்கும் பட்டாபிஷேகம் செய்யப்படுகிறது. ஆகமத்துக்கும் சிறப்பிடம் தரப்படுகிறது. ஸ்தலபுராணத்தில் கூறியபடியே இன்றும் தொடர்ந்து அபிஷேகங்கள் நடைபெற்றுவருகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆண்டுதோறும் ஆடிமாதத்தில் வித்யாசைலம் ஸ்ரீகுமார ஸ்வாமி திருக்கோயிலில் ஆடி மாதம் பிரம்மோத்ஸவமும் மாசிமாதத்தில் ஸ்ரீகாளத்தீசர் திருக்கோயிலில் மகாசிவராத்திரி மஹோத்ஸவமும் நடைபெறுகின்றன.

நீலம் நாதா நிஷாத ராஜதனயம் சம்பூப்ரியம் ஸாம்பவம் |
சைவாராதன தத்புரம் குஸபீமத்ருக் சீர்ஷம் தனும் பூஷணம் ||
பாணீசம்மித தூணீம் ஆயுத தரம் வ்யாக்ராஞ் சனாலங்க்ருதம் |
வந்தே ஸ்வர்ண முகிதடே கிரிவரே ஸ்ரீ காள ஹஸ்தீஸ்வரே ||
ப்ரஸன்ன காள ஹஸ்தீச பாதபத்த மதுவ் ரதஹ:
ஸ்ரீ மத்கண்ணாஹ்ய பிலேந்த்ராஸ்ரேயஸே பூய ஸேஸ்துமே |

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

டாக்டர் உ.வே.சா. குறிப்பு

டாக்டர் ஐயரவர்கள் ஸ்ரீ காளஹஸ்தியைப் பற்றிக் காகிதங்களில் எழுதி வைத்துள்ள குறிப்புக்கள் ஸ்ரீ காளஹஸ்தி

தலவிநாயகர் இருவர்:
1. நிருத்த கணபதி :

2. புஷ்டி கணபதி : பார்வதி பிரதிஷ்டை. இவர் கோனேட்டிராவ் மண்டபத்திற்குச் சமீபத்தில் பருவத்திற்கு அருகே உள்ள இவர் இருக்கும் இடத்திற்குச் சித்த க்ஷேத்திரம் என்று பெயர். தீட்சை செய்வித்தன்றிப் பஞ்சாட்சர உபதேசம் செய்யேன்' என்று சிவன் சொல்லியதைத் தன்தோழி மாலினியோடு கூறிய பார்வதியை மானிட மங்கையாக எனச்சபிக்க, அவள் காசிக்கு வந்து கங்கையாடிப் புறப்பட்டுத் தலங்கள் தோறும் தீட்சை செய்து கொண்டுவந்து முடிவாக இங்கே வந்து தன் தவம் பூர்த்தியாக வேண்டுமென்ற பிரார்த்தனை செய்து பிரதிஷ்டித்தமையின் இவர் இப்பெயர் பெற்றார். தேவி பஞ்சாக்ஷர உபதேசம் பெற்றுத் திவ்ய தேசம் பெற்றாள். தேவியுடன் விநாயகர் பிரம்மசாரி வடிவம் கொண்டு வந்தார். தேவியின் தவத்தைப் பாதுகாக்க வந்தவள் *துர்க்கை*, அவள் பொன்னிறம் அடையும் படி பரமசிவன் வரங்கொடுத்தமையின் கனகதுர்க்கை என்று பெயர் பெற்றாள். காளஹஸ்தியின் வடக்கில் இரண்டம்பு வீழெல்லையில் கனக துர்க்கையின் கோவிலுள்ள மலையுள்ளது.

அகண்ட வில்வவனம் : அளவற்ற இதழ்களையுடைய வில்வவனம் சாபமடைந்த தேவியின் தேகம் இந்தத் தலத்தில் இம்மரமாகி முளைக்க, அவள் இதன் இதழால் அருச்சித்து நல்ல தேகத்தைப் பெற்றாள்.

சக்தி விநாயகர் : கோயிலின் உக்கிராணத் தருகே உள்ளது.

தக்ஷிணாமூர்த்தி தெற்கு வாயிலுக்கு எதிரே சுகர், சநத்குமார், பராசரர்க்குச் சுத்தாத்வைத உபதேசம், துவஜஸ்தம்பம் இவருக்குண்டு. இம்மரம் தற்போது அழிந்து விட்டது.

யோசனைதூரத்திலிருந்து மால்வணங்குதல் - திருவேங்கடம்

அகத்தியாசலம் : (சுவர்ணமுகரி தோன்றினமலை;) இது புங்கனூர்க்குச் சமீபத்தில் உள்ளது. இதற்குப் பழைய பெயர் பிரமகிரி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொன்முகரி மாஹாத்மியம் : இதில் 20 அத்தியாயம் உள்ளது. இதிலேதான் பிரமதேவர்க்கு வந்த பிரமத்தி போனமை சொல்லப்பட்டுள்ளது.

ஞானப்பிரசூனாம்பிகை : இவர்தவம் புரிந்து, உபதேசிக்கப் பெற்று 50 லட்சம் சிவபஞ்சாக்ஷரத்தை ஜபித்து, சிவஞானம் மலரப் பெற்றமையால் இப்பெயர் பெற்றனள்.

நீலா : (பிசாசப்பெண்.) மாளவ தேசத்தில் மலஹாரிணி நதிதீரத்திலுள்ள விப்பிரகூட அக்கிரகாரத்துள்ள அநீலாசி யென்னும் அந்தணனுடைய மனைவி, மௌகல்யகோத்திரத்திற் பிறந்தவர் பெயர் பிரியவதி; ஆண் பிள்ளையில்லை. பெண்ணொருத்தி; அவள் பெயர் கனகலை. இவள்... எல்லாவித்தையையும் அறிந்து, மிதிலைச் சனகரிடம் தத்துவ சாத்திரங்களை அறிந்து, பல முனிவர்களையும் வாதத்தில் வென்று, கௌண்டரவ்ய மகாமுனிவர்பால் பிரம்மத்தைத் தெரியும் என்று பொய் சொல்லிப் பெண் பிசாசாகச் சபிக்கப் பெற்று, நீலை என்று பெயர் பெற்று அலைந்து, அகத்தியாசலம் அடைந்து, தீபதீர்த்தஸ்நானம் செய்து அகத்திய முனிவர்தரிசனத்தால்; பேய் வடிவமொழிந்தாள். வைரவ மந்திர உபதேசத்தால் பைரவமலை (கோனை) யை அடைந்து அவர் சூலத்தால் திரிந்து எறியப்பட்டு மணிகர்ணிகை தீர்த்தத்தில் இறந்து, சுவாமியால் பிரணவமந்திரம் உபதேசிக்கப் பெற்று முத்தி பெற்றாள்:

1. பைரவமலை
2. கபாலபைரவமூர்த்தி
3. பைரவதீர்த்தம்

மணிகர்ணிகாதீர்த்தம் : இது கூப வடிவமாகவுள்ளது. மூலத்தானத்திற்குத் தெற்கே ஓர் அம்பு வீழ் எல்லையில் உள்ளது. இதன் கரையில் மணிகர்ணிகேசுவரர் உள்ளார். மணி-பிரணவமந்திரம்; கர்ணம் என்றால்-காது நீலியின் காதில் பிரணவத்தை உபதேசித்தமையல் இது இப்பெயர் பெற்றது.

மணிமான் : குபேரனுடைய சைத்திரரதம் என்கிற வனத்தில் உள்ளவன். இவன் ஒரு மானுடைய கழுத்தை முறித்தமையால் வேடனாகு என்று நந்திதேவாரால் சபிக்கப்பட்டு, இங்கே வந்து கலிசையென்னும் வேடுவப் பெண்ணை மணந்து, கண்ணப்பரைப் பெற்று அச்சாபம் நீங்கித்தன் இடம் அடைந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வச்சிரதிர்த்தம் : வெள்ளிமலையின் கிழக்கே 4 மைலில் உள்ள பனஸகோனை என்ற இடத்தில் சுனையாக உள்ளது. இந்திரன் பூசை பண்ணிய சிவலிங்கம் இதன் கரையில் உள்ளது.

அரகரதீர்த்தம் : வச்சிர தீர்த்தத்தின் கீழக்கேயுள்ளது. கரபனென்னும் ஆதிசைவன் சிவதிரவியாபசாரத்தால் இறந்து நரகவேதனையடைந்த பொழுது, அங்கே வந்து பார்த்து, சானந்தமுனிவர் சகிக்காமல் 'ஹரஹர' என்றமையைக் கேட்டுக் கயிலை அடைந்தனன். இதனால் அரகரன் என்னும் பெயர்பெற்ற இவன் காளத்தி வந்து ஓர் ஆதிசைவனுக்குப் புத்திரனாகப் பிறந்து, தீர்த்ததை உண்டுபண்ணினமையால் இப்பெயர் பெற்றது.

மலைகள், தீர்த்தங்கள் - கடவுள்கள்

இரசதகிரி: திவ்ய கைலாசத்தின் சிகரங்களில் ஒன்றான சிவானந்த ஏக நிலையம் என்று பெயருள்ளது. (ஸ்ரீ காளஹஸ்திகிரிக்கு)

கனககிரி: (கனகதுர்க்காம்பாகிரி) வடக்கேயுள்ளது.

வித்தியாசைலம் : இது கிழக்கேயுள்ளது; இதில் முருகர் உள்ளார் இராமருக்கு வேதாந்த உபதேசம் செய்தமையின், வேதாந்த தேசிகர் என்று இவருக்குப் பெயர்.

நீலமலை: தெற்கேயுள்ளது. இதுதான் பைரவமலை.

சூரியதீர்த்தம் : மேற்கு வாயிலின் சுவாமி சந்நிதிக்குத் தெற்கில் கிணற்று வடிவம்; சுவாமிக்குத் திருமஞ்சனம் இந்நீரால்செய்யப்படுகிறது.

சரசுவதிதிர்த்தம்: வடக்கே 2 ஆம் பிராகாரத்தில், சுவாமி சந்நிதியின் தெற்கே உள்ள கிணறு.

செல்லக்கணபதி: 2ஆம் பிராகாரம் தென் கிழக்கில் உள்ளார்.

ஆகாயகணபதி: உக்கிராணத்திற்கு மேற்கேயுள்ளார்.

மிருத்தியுஞ்சயேசுவரர்: சிவலிங்கம் - (கல்லால்), தட்சிணாமூர்த்தியின் சந்நிதிக்கும் கிழக்கே மேற்கு முகமாக உள்ளார். ஓர் அரசனுக்கு ராஜ்யம் கொடுத்தார்.

உரோமசர்: தட்சிணாமூர்த்தி துவஜ ஸ்தம்பத்திற்குக் கிழக்கே உள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பத்மசேன மகாராஜா கன்னிகைகளின் பிரதிட்டைலிங்கம் : மேற்கானும் உரோமச முனிவருக்கு வடக்கேயுள்ளார்.

படித்துறை விநாயகர் : பொன்முகரியின் படித்துறையில் வலப்பக்கத்துள்ளார்.

சூரியபுஷ்கரணி : மேற்கு வாயிலின் வெளிப்புற வழிக்கு வலப்பக்கத்துக் கிணறு.

சந்திர புஷ்கரிணி: மேற்படி வழியின் இடப்புறத்துக் கிணறு.

கண்ணப்பர் வடிவமுள்ள 5 இடங்கள்

1. கீழ்க்கோயிலின் மூலஸ்தானத்தின் அர்த்த மண்டலத்தின் வழிக்கு வலப்புறத்தே தெற்குநோக்கியது; முதலில் இவருக்குப் பூசையான பின்புதான் சுவாமிக்குப் பூசை செய்வது வழக்கம்.

2. மேற்படி ஆலயத்தின் 2-வது கிழக்குப் பிரகாரத்தின் கிழக்கே, (தளத்திற்கு மேலே, உன்னதத்தில் (உயரத்தில்)) உள்ள மண்டபத்தில் வடக்கு நோக்கியுள்ளார். மிகுந்த அழகான வடிவம்.

3. இரண்டாவது பிரகாரத்தின் மேற்கு வாயிலின் வெளியே வலப்புறத்தே தெற்குநோக்கிய வடிவமாக உள்ளது.

4. முதற்பிரகாரத்தில் நந்திக்கு மேற்கேயுள்ளது.

5. மலையின் மேல் மேற்கு நோக்கி நின்ற வடிவமாக உள்ளது; அருகில் ஒரு வேடப்பெண் உருவம் கைகுவித்த வண்ணமாக நிற்கின்றது.

கன்னியாலிங்கம் 2 : பெரிய பிராகாரத்தின் தெற்கு வாயிலின் உள்ளே வழிக்கு மேற்கே கிழக்கு நோக்கிய வடிவங்கள்;

மணிகர்ணிகேசுரர் கோயில்: தெற்கேயுள்ள ஒரு கோயில். மேற்படி மூலஸ்தானத்தின் வெளியே ஒரு ரிஷி வடிவம் மிக நன்றாக உள்ளது. வலக்கை உடைந்து போயிருக்கிறது. பிரகாரத்தின் வாயுமூலை மணிகர்ணிகாதீர்த்தம் உள்ளது. கீழே மணிகண்டேசுவரர் ஆலயத்துக்குகீழே தெற்கேயுள்ள மண்டபத்தின் கீழ்பாகத்தில் மலையின் அடிப்பாகத்திலேயே வடக்குத் தொடங்கி அநேகம் பிம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவையாவன:-

1. நடராஜர், சிவகாமியம்மன்

2. சுப்பிரமணியர்

3. உமாமகேசுவ்ரர்

4. நிருத்தகணபதி

5. திருக்கலியாண கோலமும் பரிவார தேவதைகளும் விஷ்ணுதாரை வார்க்கிற பிம்பமும் உள்ளன.

6. பிட்சாடன மூர்த்திகளும் தாருகாவனத்துப் பெண்களும். சிலைகளும் மலையிலேயே... நல்ல திருவுருங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

பிரம்மலிங்கம்: மேற்படி மண்டபத்தின் மேலே மேற்கு நோக்கிய ஆலயத்தில் வெள்ளியங்கிரியைச் சார்ந்து நான்கு திசைகளிலும் நான்கு திருமுகங்களையும் உடைய ஒரு சிவலிங்கம் உள்ளது. அது பிரம்மாவினால் பிரதிட்டை செய்யப்பட்டதாகத்தெரிகிறது. மேற்படி மூர்த்திக்கு எதிரில் சமீபத்தில் கிணற்று வடிவமாக முதலில் கைவல்யதீர்த்தம் என்றும் பின் பிரம்ம தீர்த்தம் என்றும் பெயருள்ள ஒரு தீர்த்தம் உள்ளது. பிரம்மலிங்கத்தின் மேலே மலையில் மேற்கு முகமாக தெற்கேயிருந்து சில பிம்பங்கள் உள்ளன. 1. பிட்சாடனர்: மற்றும் இருபுறத்தும் மங்கையர்கள். 2. ஏகபாத ருத்திரர் அப்பால் வடக்கேயுள்ள பிம்பங்கள் கண்ணுக்கு எட்டாமையால் எழுதமுடியவில்லை. உளியினால் பிம்பங்களுடைய உருவங்களை அமைப்பதற்கு முதலில் கீற்றுக்கள் மாத்திரம் அமைக்கப்பட்டு நின்று போய்விட்டன. பிரம்ம தீர்த்தத்துக்கு மேற்கேயுள்ள இடத்தில் யாரேனும் சந்நியாசிகள் பரகதிஅடைந்தால் அவர்களை அடக்கம் செய்வது வழக்கமாக இருக்கிறது.

சகலாகம நாயகர்கோயில்: சுவயம்பு இது. மணிகண்டேசுவரர் ஆலயத்துக்கு ½ மைல் தூரத்தில் தெற்கேயுள்ளது. இது அத்தியரால் பூசிக்கப்பட்டது. ஆலயத்தின் மேற்கு முகமாய் மூலலிங்கமும் தேவியும் வேறு வேறான கர்ப்பக் கிருகத்தில் உள்ளனர். மேற்படி இடத்துக்கு வடக்கேயுள்ள கோவிலில் சம்மோகன க்ஷேத்திரபாலக மூர்த்தி அழகிய திருவுருவம் உடையவராய் தெற்கு நோக்கி ஒரு ஆலயத்தில் எழுந்தருளியிருக்கிறார். இந்த மூலமூர்த்தி அகத்தியரால் பூசிக்கப்பட்டது. மேற்படி மூலலிங்கத்தின் வடக்கே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிழக்குப் பிராகாரத்தில் மேற்கு சந்நிதியாக ஒரு சிவலிங்கக் கோவில் உள்ளது. மேற்படி சகலாகம நாயகர் கோவிலின் எதிரில் ஒரு பர்லாங்கில் ஞானப்பிரகாசதீர்த்தம் என்று ஒரு குளம் உள்ளது; படித்துறைகள் உண்டு. அதன் தென்கரையில் பாவுகல்லுகள் போய்விட்ட ஒரு பாழ்மண்டபம் உண்டு.

புஷ்டி கணபதி கோவில்: சந்நிதி கிழக்குப் புறம். இது சகலாகம நாயகர் கோவிலுக்கும் ஞானப்பிரகாச தீர்த்தத்துக்கும் இடையே உள்ளது. இவர் பஞ்சாட்சர உபதேசத்துக்குத் தவம் செய்த தேவியின் தவத்தைப் பலிக்கச் செய்தமையின் இப்பெயர் பெற்றார்.

நீலகிரி: சகலாகம நாயகர் கோயிலுக்குத் தெற்குள்ள மலை.

சித்தாசலம்: நீலகிரிக்கும் வெள்ளியங்கிரிக்குத் தெற்கேயுள்ள சித்தாசலத்திற்கும் நடுவில் மேற்பாகத்தில் உள்ளது. அகஸ்தியாசிரமம்.

பாரத்துவாஜதீர்த்தம்: ஜீவன் முக்த தீர்த்தம் என்று முதலில் பெயருள்ள இது, நாற்புறமும் அழகான படித்துறைகளும் இடையே நீராழி மண்டபமும் உள்ள பெரிய தடாகம். 60 வருடத்துக்கு முன்பு இறுதியில் தை அமாவாசையில் ஸ்ரீ காளஹஸ்தீசுவரருக்கு தெப்போத்ஸவம் நடந்ததாகச் சொல்லுவர். இப்போது தை அமாவாசை தோறும் காளஹஸ்தீசுவரர் எழுந்தருளி வந்து இதன் அக்கினி மூலையில் உள்ள மண்டபத்தில் தங்கி, சாயங்காலம் இதை மூன்று முறை சுற்றிச் செல்வது வழக்கம். பரத்துவாஜர் உண்டாக்கியது. தீர்த்தம் மிகச் செவ்விது. இவ்விடம் ஜீவன்முக்தி க்ஷேத்திரம் என்று சொல்லப்படும்.

பரத்துவாஜேசுவரம்: இக்கோயில் மேற்படி தீர்த்தத்தின் அக்கினி மூலையின் உள்ளது. பரத்துவாஜர் பூசித்தது. இதில் மூல லிங்கத்தின் அருகே பரத்வாஜர் பிம்பம் சிலைவடிவில் உள்ளது.

பராசரேசுவரம்: பராசரமுனிவர் பூசித்தது. இக்கோயில் பரத்துவாஜ தீர்த்தத்தின் வாயுமூலையில் .... உள்ளது.

நீலகண்டேசுவரம்- வீரக்ஷேத்திரம்

இது நீலகண்டர் என்னும் அந்தணருக்கு ஆனந்த நடராஜராகத் தோன்றி ஸ்ரீ காளஹஸ்தீசுவரர் காட்சி கொடுத்த இடம். இது சொர்ணமுகி ஆற்றுக்கு அக்கரையில் நிருதிமூலையில் உள்ளது. இதில் பங்குனி மாதத்தில் வருடந்தோறும் சுவாமி எழுந்தருளுவது

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழக்கம். ஸ்ரீ காளஹஸ்தி நகரமானது அந்தக்காலத்தில் ஆற்றுக்கு அக்கரையில் இருந்ததாகச் சொல்லுவார்கள்.

குடுமித்தேவர்: இவர் ஆலயம் வெள்ளியங்கிரிக்கு மேலே ஸ்ரீ காளஹஸ்தீசுவரர் கோயிலுக்கு மேலே மலையின் உச்சியில் மேற்கு முகமாக உள்ளது. இடப்புறத்தில் கண்ணப்பர் ஆலயம் உண்டு. இவர்தான் கண்ணப்பர் பூசித்த மூர்த்தியென்று தோன்றுகிறது. மாசிமாத சிவராத்திரி இவருக்குத் துவஜாரோகணம் ஆன மறுநாள் ஸ்ரீ காளஹஸ்தீசுவரருக்கும் ஆகும்.

மாசிமாதம் சிவராத்திரி 5 நாள் ரிஷபவாகனம்: கண்ணப்பருக்கு உற்சவம், சுவாமியின் துவஜாரோகணம் ஆவதற்கு முதல்நாள். குடுமித்தேவருக்கு வடபுறத்தே அம்பிகை ஆலயமும், அதன் எதிரே விநாயகர் ஆலயமும் உள்ளன.

தொண்டைமான் நாடு: இப்பெயருள்ள ஊரென்று இவ்வூருக்கு நிருதிதிக்கில் உள்ளது; காளஹஸ்தீசுவரருடைய நகைகள் ஒரு சமயத்தில் திருட்டுப் போன பொழுது இதையறிந்த மேற்படியூர் அரசன் வந்து பல நகைகளையும் சுவாமிக்குச் சாத்தித்தரி சித்தமையின், அவ்வரசன் வடிவம் குதிரைமீது விக்கிரகரூபமாகக் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது. இதனால் சுவாமி வருடத்திற்கு ஒரு முறை இவ்வூருக்குப் போவது வழக்கம். சிலந்திப்பூச்சி, காளான் என்னும் பாம்பு, யானை இவைகளின் வடிவங்கள் உலோக விக்கிரகங்களில் சிறப்பாக அமைந்துள்ளன. அறுபத்து மூவருடைய விக்கிரகங்களுடைய வடிவங்கள் மிக அழகாக உள்ளன. சமயாசாரியர் மூவருடைய வடிவம் மட்டும் இல்லை. சிலா வடிவங்கள் முன்னுள்ளன என்பதற்கு ஆனாய நாயனார் வடிவம் மட்டும் கல்லில் இருப்பது சாட்சி.

அரகரதீர்த்தம்: ரசதகிரியில் கிழக்கில் பலாவனத்தில் ஒரு வகையான மரங்களின் வேரிலிருந்து துளிப்பது; யாரேனும் அரஹரவென்று சொல்லின் துளிர்க்கும். இங்கே ஒரு சிவலிங்கம் இருக்கிறது.

சகஸ்ரலிங்கம்: ஸ்ரீ காளஹஸ்தீசுவரருக்குத் தெற்கே 5 நாழிகை வழித்தூரத்தில் ஒரு லிங்கம் உள்ளது. இதில் 1000 லிங்கமுண்டு. சகஸ்ரலிங்கேசுவர தீர்த்தம் உண்டு. இதன் நீர் அமிர்தஜலம் என்று பெயர் பெறும். இவ்விடம் தர்ம க்ஷேத்திரம். சிவன் யட்ச வடிவங்கொண்டு-சோதித்த பின்பு, விஷ்ணுமுதலிய ஆயிரந் தேவர்கள் பூசித்த இடம். சகஸ்ரலிங்கத்திற்கு ஒரு கோயிலுண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மார்க்கண்டதீர்த்தம்: இது சகஸ்ரலிங்கத்திற்கு உத்தரத்தில் அருவியாக உள்ளது. மார்க்கண்டேசுவரர் (இலிங்கம்) இதன் கரையில் உண்டு.

காளிதீர்த்தம்: இதுவேடம் (தெற்கு) என்னும் கிராமத்தில் வாய்க்காலாக உள்ளது. பைரவ தீர்த்தேதோடு சேர்ந்தது.

மோகனிதீர்த்தம்:

மாயூரதீர்த்தம்: நீலமலையின் வடபாகத்தில் கிணறாக உள்ளது. கேரள தேசத்தில் பிறந்தவனும் பணத்தை விரும்பித்தந்தையைக் கொன்றவனுமான மாயூரன் என்பவன் சந்திரகன் என்னும் புரோகிதனுடன் தேசாடனஞ் செய்து வந்து யானை வடிவாகத் தோன்றிப்பின்பு, விருத்தப்பிராமண (முதிய அந்தண) வடிவாகத் தோன்றிய சுவாமி கையில் உள்ள தண்டத்தால் ஒரு தீர்த்தம் உண்டாக்கி, அதில் ஆட்டுவிக்க, அவன்பாபம் ஒழித்து வீடுபெற்றான்.

உருத்திரதீர்த்தம்:

மணிகங்கை: மணிகர்ணிகை - மணிகர்ணேசுவரம்

வியஷ்டி ரூபலிங்கம்: மூலலிங்கம்.

சமஷ்டி ரூபலிங்கம்: வெள்ளிமலை; இம்மலையே ஆவுடையார். இம்மலையிலுள்ள சகஸ்ரலிங்கமே லிங்கம். அரகரதீர்த்தமே சோமசூத்திரம்.

சுவாமி: தேவியோடு சோமாஸ்கந்தம் மாசி மாதத்தில் நடக்கும் பிரமோற்சவத்தில் 9 ஆம் நாளிலும் மகர சங்கராந்தியிலும், மறுநாளிலும் வேட்டைக் கோலத்தோடு மலையை வலம்வருவது வழக்கம். இதற்கு மிர்கயா விநோதம் என்று பெயர். சிலந்தி முதலியன பூசித்தது திரோதாயுகத்தில். நக்கீரர் பூசித்தது ஆந்திர புராணத்தில் உள்ளது.

பாண்டி நாட்டுக் கன்னியர்:

1. அமிர்தலதை
2. காந்திமதி

திருப்பதியில் ஏறிச் சென்ற ஒருவைணவர் கானத்திற்போகையில் கோயில் கோபுரந் தோன்றக் கதவை மறைப்பித்தார்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

கண்போயினபின் கதவைத்திறக்கச் சொல்லிவிட்டு திருவேங்கட முடையானால் கூறப்பட்டு வந்து, "மணிகோபுரசாம்பசிவ மஹாப்பிரபோ' என்று முடியும் 100 பத்தியங்களைப் பாடி ஒரு கண் பெற்றார். இவரைத் தாதாசாரியென்று சொல்வது வழக்கம். இராசேந்திர சோழன் பூசித்தது மட்டும் புராணத்திற் சொல்லப்பட்டுள்ளது.

தலப்பெயர்

1. பிரஹ்மபுரம்

2. ஸ்ரீ விஷ்ணுநகரம் : விஷ்ணுபூசித்தார் பெரிய லிங்கம்

3. பாண்டியபுரம் : வரகுணபாண்டியர் பூசித்து ஊரையுண்டாக்கித்தம் பெயரால் இவ்வூர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

4. நாரதபுரம் : நாரதலிங்கம் உண்டு.

5. ஸ்ரீகாளஹஸ்திநகரம்

6. அகண்ட வில்வகானனம்

மூர்த்தியின் பெயர்கள்:-

1. ஸ்ரீ காளஹஸ்தீசுவரர்
2. தட்சிணகைலாச நாதேசுவரர்
3. தீர்த்தம்

1. ஸ்வர்ணமுகரி: இது இந்தத்தலத்தில் உத்திரவாகினி. இதில் அநேக தீர்த்தங்கள் உண்டு.

2. தத்துவப்பிரகாசதீர்த்தம்: இதுவித்தியா சைலத்தின் (குமாரஸ்வாமி மலை) கீழே மேற்றிசையில் உள்ளது.

3. பரானந்ததீர்த்தம்: மலைக்குக் கிழக்கே உள்ளது. இங்கே பிரசன்ன காளஹஸ்தீசுவரனலிங்கம் உண்டு. பிரமப்பிரதிஷ்டை செய்யப் பட்டது.

4. திவ்ய கைலாசகங்கை: பொன்முகரி

5. தேவதீர்த்தம்: மேற்படி

அகண்டதீபம்: சுவாமியின் மூலத்தானத்தில் இவை இடைவிடாமல் அசைந்தாடி வாயுலிங்கம் என்பதை வெளிப்படுத்துகின்றது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

விருட்சம் : மகிழ், வில்வம்

நதி: பொன்முகரி

மலை

1. வெள்ளிமலை
2. பொன்மலை
3. வித்தியாசைலம்
4. சித்தாசலம்
5. ஸ்கந்தாசலம் - தெற்கே 10 மைலில் உள்ளது.

இதற்குத் தெற்கே 4 நாழிகை வழித்தூரத்தில் உள்ள தொண்டைமான் நாடென்னும் ஊரில் (பூகர்ண க்ஷேத்திரம்) மகாவிஷ்ணுவைச் சிங்காசனத்தில் வைத்து ஏகசத்திரமுள்ள சாம்ராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்தனர். இதில் ஸ்ரீ ராமர் பிரதிஷ்டை பண்ணின ஸ்ரீ கோதண்ட ராமேசுவரலிங்கம் உண்டு. இங்கு சுவாமி ஒரு தரம் மாசி மகத்தின் மற்றைநாள் வீதிவலம் போவது வழக்கம்.

கிருதயுகத்தில் பூசித்தவர் : 10
பிரம்மா, அகஸ்தியர், பார்வதி, நீலா, ஹரிஹரன், மயூரன், பீமன், சந்திரன், சூரியன், இந்திரன்.

திரேதா யுகத்தில் பூசித்தோர் : 11
விஷ்ணு, பிரஹ்மா, லக்ஷ்மி, ஸ்கந்தர், ராமர், மார்க்கண்டேயர், கண்ணப்பர், எண்காற்பூச்சி, காளான், யானை, சக்கிரம்.

துவாபர யுகத்தில் பூசித்தோர்:
சுபவை, விசயன், ஜபாலை, மிருத்தியுஞ்சய மகாராஜன், நாரதன், விஷ்ணு முதலிய ஆயிரம் தேவர்கள், சுகர், சனற்குமாரர், பராசரர்.

கலியுகத்தில் பூசித்தோர்:
சாரங்கன், வரகுணபாண்டியன், ராஜேந்திரன் சோழன், பத்மசேனகராஜன், பாண்டியனுடைய பிள்ளை, சக்கரதராஜன், பரத்துவாசர், அமிர்தலதா, காந்திமதி. இந்தப்புராணம் பரத்துவாசர் கேட்க உரோமசர் சொல்லியது.

காலிகோபுரம்: இது கோயிலைச் சார்ந்ததன்று. கோயில் இருப்பதைப் பிறர் அறிந்து கொள்ளுதற்குக் கட்டப்பட்டது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறே தெலுங்கநாடு முழுமையும் உள்ளது; சந்திரகிரியில் இருந்த கிருஷ்ணராயர் கட்டுவித்ததாகச் சொல்லுவார்.

கண்ணப்பகர்ணம்: வடக்கு வீதிக்கு நேரேயுள்ளது. மதுரைக்கன்னியர் பூசித்த லிங்கம் தட்சிணாமூர்த்திக்கு இடப் பக்கத்தில் உள்ளதான தெற்கு நோக்கிய லிங்கமொன்று இருக்கின்றது.

புஷ்பகிரிமடம்: மேற்கு வீதியில் இருக்கிறது. அன்னசத்திரம் உண்டு.

மாசிமகம்: இரவில் வீதியில் சுவாமி வருதலும், தொண்டைமான் திருடுதலும், மறுநாள் தொண்டைமான் நாடு இதற்கு 4 மைல் தெற்குப் போதலும், இழந்து போன சொத்துக்களைப் பெறுதலும் நடைபெறும்.

மாத உத்ஸவ விவரம் :-

சித்திரை : திருவாதிரை முதல் 12 நாள் வசந்தோற்சவம்

வைகாசி: மிருகசீரீடம் முதல் 10-நாள் பௌர்ணமிவரையில் வசந்தோற்சவம்

ஆனி: அட்டமி முதல் 5 நாள் பிரதோஷம் வரையில் பெரிய தெற்குப் பிராகாரத்துள்ள ஜலக்கிரீடை மண்டபத்தில் சைத்திய உபசார உற்சவம். இம்மாதம் சுக்கில பட்சத்தில் தட்சிணாமூர்த்திக்குக் கிழக்கேயுள்ள மேல் மண்டபத்தில் (கும்பேசுவர மண்டம்) 5 நாள் சைத்தியோபசார உற்சவம்.

ஆடி: சண்முக நயினார்க்குப் பிரம்மோற்சவம். கிருத்திகை 5ம் உற்சவம்.

ஆவணி: குமாரகாளஹஸ்தீசுவரக்குருக்கள் மண்டபத்தில் பௌர்ணமி சபாபதியாக 5 நாள் சைத்தியோபசார உற்சவம் நடைபெறும்.

புரட்டாசி: நகரேசுவர மண்டபத்தில் பௌர்ணமி முடிய 5 நாள் சைத்தியோபசார உற்சவம்.

ஐப்பசி: நவராத்திரி உற்சவம்.

கார்த்திகை: கிருத்திகா தீபம். சோமவாரம் 4ம் விருஷபோற்சவம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

மார்கழி: 30 நாளும் உதயத்தில் அம்பிக்கை உற்சவம். (கொப்பி உத்ஸவம்)

தை: 1ம் தேதியில் பிரசன்ன காளஹஸ்தீசுவரர் கிரிப்பிரதட்சிணம் (மலைவலம் வருதல்). 2-ம் தேதியில் சோமாஸ்கந்த கிரிப் பிரதட்சிணம். மேற்படி அமாவாசையில் பரத்துவாசருடைய ஆசிரமத்திற்குப் போதல், தெப்போற்சவம்.

மாசி: மக நட்சத்திரத்தில் வீதிப் பிரதட்சிணம், வஸ்திரம் திருட்டுப் போதல். மறுநாள் காலை தொண்டைமான் நாட்டிற்குப் போதல். இம்மாதம் (கிருஷ்ண பட்சத்தில் சதுர்த்தியன்று விருஷபோற்சவம்) பிரம்மோற்சவம் 9-நாள் கிரிப்பிரதட்சிணம்.

மாசி: இம்மாதத்தில் துவஜாரோகணத்திற்கு முதல் நாள் கண்ணப்பருக்கு உற்சவம். இதில் கண்ணப்பர் பரத்வாஜாச்ரமத்தின் வழியே உச்சிக்குப் போய் துவஜாரோகணஞ் செய்துவிட்டுப் போனவழியே வந்து ஊரைச் சுற்றி வருதல் நடைபெறும்.

பங்குனி: சூரிய புஷ்கரிணியைச் சார்ந்த நாகவல்லி மண்டபத்தில் சுக்கில பட்சத்தில் பௌர்ணமி இறுதியாக 5 நாள் சைத்தியோபசார உற்சவம்.

கண்ணப்பர்: மணிமான் என்னும் யட்சன் மானைக் கொன்று அந்தப் பாவத்தால் வேடனாகச் சைலாதியால் சபிக்கப்பட்டு இங்கே வந்து 5 வருடம் இருந்து பூசித்து முக்திபெற்றார் என்று தலபுராணம் கூறும்.

உடுமலைப்பாடு: இது இவ்வூர்க்கு மேற்கே 3 மைலில் உள்ளது. இது உடுப்பூர் என்று ஊகிக்கப்படுகின்றது.

கிருஷ்ணகந்தோற்சவம்: மாசி உற்சவத்தில் 8 -நாள் இரவு செய்வது. தர்ப்பையைச் சுட்டகரியை சாம்பிராணி தைலத்தோடு சேர்த்து அதைத்தேவிக்கும் சுவாமிக்கும் கழுத்துக்குக் கீழும் பொட்டாக நெற்றியிலும் சாத்துதல். இதுதான் திருச்சாத்து. இது எந்தத் தலத்திலும் வழக்கம். திருச்சாத்துச் சாத்திய பின் வெண்ணெய் சாத்துதல் வழக்கம். தும்பை மாலை சாத்துதல் இத்தலத்தில் விசேடம். எட்டாம் நாள் இரவு வைதீக பீடத்தின் முன்பு பதினாறுகால் மண்டபத்தில் திருக்கலியாணமும் உலாவருதலும் வழக்கம். இரதோற்சவம் இக்காலத்தில் ஆறாம் திருநாளில் நடக்கின்றது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

வடக்குமடம்: (சங்கரமுனிமடம்:) இது கோவிலுக்குக் காலி கோபுரத்துக்கு வடக்கே இராச வீதிக்கு மேற்கே கல் மண்டபமாக உள்ளது; சங்கராசாரியர் மடம்.

மணிக்கங்கை மடம்: (மணிகர்ணீசுவர மடம்.) மேற்படி கோயிலின் தெற்கேயுள்ளது. மேற்படி மடத்து முனிவர்சிலை இப்பொழுது கையுடைந்து இருக்கிறது.

ஆறு கொத்தார்: ஹோதா-அதிகாரி.

ஆரு ஹித்தாலு: இப்பெயர் பெற்ற முதல் வம்சமொன்று இவ்வூரில் இருந்ததாம். இவர் வீடு வடக்கு வீதியில் இருந்ததாம்.

1. கிராமக்காவல் - (கங்காணம்)
2. நைவேத்திய தீபாராதனை முதலியவற்றை அருகிருந்து செய்வித்தல்.
3. குடைபிடித்தல்
4. பல்லக்கின் முன்புறம் தாங்கல்
5. யானை முதலியவற்றிற்கு விருஷப முத்திரை போடுதல் = முத்திராதிகாரம்
6. மெய்க்காவல்.
7. பெயரி உக்கிராணப் பொருள்களைக் கொடுக்கல், வாங்கல்.

என்னும் (ஆறு) அதிகாரமுறையோர் எட்டுக் கொத்தான இளையநாயகர் பால் முதலியன கொண்டுவருவோர்:

1. விலமநாயகர்
2. கம்ம நாயகர்
3. கம்பஸ்தயா நாயகர்
4. கோடஸாடு நாயகர்

சிவகோசரியார்: ஆற்றுக்கு அக்கரையில் குருக்களின் தோட்டம் உண்டு; அதில் நான்கு திசையிலும் நான்கு மண்டபங்கள் உண்டு. இது சிவகோசரியார் இருந்த இடமென்ற சொல்லுவர்.

மூவகை ஆதிசைவர் இங்கு உள்ளனர்;

1. திருவாலங்காட்டார்.
2. திருக்கழுக்குன்றத்தார்
3. காஞ்சீபுரத்தார்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஐந்து கோத்திரம்: கௌதம, அகஸ்திய, பாரத்துவாஜ, கௌசிக, காசியப கோத்திரத்தினர்... இவர்களில் திரவிட சம்பிரதாய முடையோர் ஆதிசைவர்; ஆந்திர சம்பிரதாயமுடையயோர்; சிவத்துவிஜர். சிவத்துவிஜரை வைதிகர்களும் ஆதிசைவர்களும் பந்தியில் வைத்துக் கொள்ளார்கள்; அவர் கானீனர்.

இவ்வூரில் கண்ணப்பர் ஆலயம் 5 இடத்தில் உண்டு; அவற்றுள் நகரமத்தியில் இருந்த கோயிலை விஷ்ணு ஆலயமாகச் செய்து விட்டனர். இதில் இருந்த விக்கிரகம் கோயிலில், துவஜஸதம்பத்துக்கு வெளியே உள்ளது. கண்ணப்புரம் என்பது இந்த இடத்தின் பெயர்.

தெலுங்கு: த்ருலிங்கம் என்பதன் சிதைவு. 1. ஸ்ரீகாளஹஸ்தி 2. த்ராக்ஷாராமம். 3. ஸ்ரீசைலம் என்னும் 3லிங்கத்தை எல்லையாக உடைய மொழி.

இதனால் தெலுங்கு தேயம் திருலிங்கம் என்றும் தெலுங்கு மொழி திருலிங்கபாஷை என்றும் பெயர் பெறும்.

எந்தத் தேசத்தில் எள்ளைப் போலப் பசுக்கள் பாலைப் பொழிந்து யஞ்ஞத்தைப் பெருக்குகின்றதோ அது திலகுதேயம். பின்னர்த் தெலுகுதேயம் என்று மருவிற்று என்பர். (ஷடத்தியாயி) - ஸ்ரீகாளஹஸ்தி மகாத்மியம் செய்தவர் தூர்ஜடிகவி. 497 வருடத்திற்கு முந்தியவர். பல்லாரி ஜில்லாவில் துங்கபத்திரா நதி தீரத்தில், பாழடைந்து கிடக்கும் விஜயநகரத்தை ஆண்டகிருஷ்ணதேவராயர் காலத்தில் இருந்தவர்: அவர் மீது பல சுலோகங்கள் சொல்லியிருக்கின்றார். தெலுங்கில் உள்ள பத்திய காவ்யம் 4 - (உச்சுவாஸம்.) அவற்றை சுவாமி பாடும் படி கனவில் சொன்னதால் பாடப்பட்டது.

1. 164 பத்தியம்
2. 159 பத்தியம்
3. 226 பத்தியம்
4. 206 பத்தியம்

முதலாவதில் யாதவ சரிதம் உள்ளது.

★ தொண்டைநாட்டில், 24 கோட்டங்களுள் ஒன்றாகிய வேங்கடக் கோட்டத்துக் தொண்டைமான் போராற்றூர்நாட்டு மும்முடிச் சோழபுரமென்றும், ஆற்றார் வளநாட்டு மும்முடிச் சோழபுரமென்றும் சிலாசாஸனங்களில் இதன் பெயர் காணப்பெறுகின்றது. ப.பக்கம்.பா.பாட்டு.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாராயணவனம்: புத்தூர்ஸ்டேஷனுக்குக் கிழக்கே மூன்று மைலில் உள்ளதொரு நகரம். வசிட்டர் தவஞ்செய்து தட்சிணா மூர்த்தியால் காட்சி கொடுக்கப் பெற்று, உபதேசம்பெற்றார். சிவனுடைய பிரிவாற்றாமையால், உமையும் (ஞானப்பூங்கோதை) வெள்ளிமலையும் மேருமலையும்வருதல். ஸ்வர்ணமுகரி உற்பத்தி இரண்டாவதில் பிரம்மாவுக்குக் குமாரர் பிறத்தல். அவர்களைக் கொல்ல உக்கிரனை யுண்டுபண்ணுதல். முதலியன. ருபுபிறத்தல், சிலந்தி, பாம்பு, யானை3-வது உச்சுவாஸம்.

கண்ணப்பர் பொத்தப்பிநாடு: உடுமூர் (உடுமூலபாடு-நகர வருணனை) கண்ணப்பர் தந்தை-நாகநாதன். கண்ணப்பர் தாய்-தந்தை (பெயர்). எதுகையில் வந்துள்ளது பலவிடத்தும். நக்கீரர் = நக்கீரர் சங்கப் பலகை அகத்தியர் கொடுத்தார். 4-வது கன்னியர் கதை. மாணிக்கவல்லி-தாய் வாலி பூசித்த சிவலிங்கம். பூர்வ ஜன்ம விருத்தாந்தம். இந்திரநீல பருவதத்தில் அருச்சுனன் தவஞ்செய்தான்.

ஆந்தரம் = அ (8) விஷ்ணு; (அம்) இவரைத்தரித்தவர் அந்தரன். இவரால் உண்டு பண்ணப்பட்டது ஆந்தரம். ஆந்தரம். அந்தத் வடிவமாகிய மலையைத்தரிக்குந் தேயம் அநந்த்ர:; இது ஆந்தரம் என்றாகி இதில் வழங்கும் மொழிக்கு ஆயிற்று என்றலும் ஒன்று.

குறிப்பு: ஐயரவர்கள் தம் கையாலேயே எழுதியுள்ள காகிதப்பிரதியில் உள்ள விஷயங்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. (ஆராய்ச்சியாளர் களுக்குப் பயன்படும் என்று கருதி.)

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

டாக்டர். உ.வே. சா. அவர்களின்
திருக்காளத்திப்புராண முன்னுரை

கணபதி துணை

முகவுரை

"காளத்தி காணப் பெற்ற கண்களே கண்க ளென்றுங்
காளத்தி நகருக் கேகுங் கால்களே கால்க ளென்றுங்
காளத்தி புகுங்க ருத்தே கருத்தென்றுங் கயிலை நாமக்
காளத்தி புகழு நாவே நாவென்றுங் கற்றோர் சொல்வர்"

★ திருக்காளத்தியென்பது தொண்டை நாட்டில் தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்று. இந்தஸ்தலத்துக்குத் தக்ஷிணகைலாஸம் அல்லது தென்கயிலாயம், தென்கயிலை, திருக்காளத்தி, ஸ்ரீகாளஹஸ்தி அல்லது சீகாளத்தி, காளத்தி, சிவாநந்தகிரி, சிவாநந்தைக நிலயம், விஞ்ஞான க்ஷேத்திரம், கண்ணப்பபுரம், மும்முடிச் சோழபுரம் முதலிய வேறு காரணப் பெயர்களுமுண்டு.

தக்ஷிண கைலாஸமென்னும் பெயரின் காரணம், இப்புராணம், 32ம் பக்கம், 27-உம் செய்யுள் முதலியவற்றாலும், திருக்காளத்தியென்னும் பெயரின் காரணம், 48ம் பக்கம், 61ம் செய்யுள் முதலியவற்றாலும் விளங்கும். இப்படியே பிறபெயர்களின் காரணம் இந்நூலாலும் பிறநூலாலும் நன்கு உணரலாகும். இஃது ஐந்து யோசனை அகலம், பத்து யோசனை நீளமுள்ளது. (ப.150; பா.27.) "மண்டு யோசனையைந் தகலமுமிரட்டி நீளமும் வயங்குதென்கயிலை" (1.7.41.) என்னும் சூதசங்கிதையாலும் இது விளங்கும்.

மஹாபுராணங்களுள்ளும், உபபுராணங்களுள்ளும், மற்ற ஸ்தல புராணங்களுள்ளும் இத்தல மகிமையைச் சொல்லாதவை பெரும்பாலும் இல.

மெய்யன்பையே திருவுருமாகக் கொண்ட ஸ்ரீகண்ணப் நாயனார் இடையீடின்றி வழிபட்டு ஆறு நாட்களில் முத்தி பெற்ற பெரும்புகழ் வாய்ந்தது இது. இன்னும் விராட்புருஷனுடைய விசுத்திஸ்தானமென்றும், பிரமதேவருருடைய அநாகதஸ்தான மென்றும், பஞ்ச பூதஸ்தலங்களுள் வாயுஸ்தலமென்றும்,

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சாக்ஷரஜபசித்தியை விரைவில் தந்தருளுவதென்றும், சிவஞானத்தை அளிக்கவல்ல ஸ்தலங்கள் நான்கனுள் ஒன்றென்றும் ஒருநாளேனும் நியமத்துடன் வசிப்பவர்களுக்குக் கலியின் பீடையை மாற்றிப் பிறவித்துயரை நீக்கவல்ல ஸ்தலங்கள் இரண்டனுள் ஒன்றென்றும் நூல்களிற் பாராட்டப் பெற்றது இத்தலமே. இத்தல மகிமையும், தீர்த்த விசேடமும், வழிபட்டுப் பேறுபெற்றோருடைய மேம்பாடுகளும் இந்நூலாலன்றி இதன் பின் காட்டப்பெற்றுள்ள தேவாரமுதலிய திருமுறைகளாலும் வேறுநூல்களிலிருந்து எடுத்துக்காட்டிய செய்யுட்களாலும் புலப்படும். இத்தலம் சிவஸாரூப்பியம் தருவதென்பதை.

"புலிபுலி யதளு டுக்கும் பொருகரி கரித்தோல் போர்க்கும்
வலியவா னானேறேறும் வாளரா வரம் பூனு
மெலியியன் மான்மா னேந்தும் வெந்திறற் சீயஞ் சீயத்
தலைபுனை தருந்தென்வெள்ளிச் சயிலத்தி லிறக்கின் மன்னோ"

(சீகாளத்திப் புராணம், தென்கயி. 68)

என்னுஞ் செய்யுளால் ஒரு புலவர் பெருமான் தெரிவித்திருக்கும் அழகு பாராட்டற்பாலது.

ஸ்தலவிநாயகர் இருவர்: (அ) பஞ்சசந்திவிநாயகர் (ஐஞ்சந்தி விநாயகரெனவும், அஞ்சந்திவிநாயகரெனம் இவர் கூறப் பெறுவர்). (ஆ) பாதாள கணபதி.

ஸ்வாமியின்திருநாமங்கள்: தென்கைலைநாதர், திருக்காளத்தி நாதர், ஐங்குடுமித்தேவர், ஐந்துகொழுந்து, குடுமித்தேவர், ஆராவமுது, கணநாதர், கல்லாலடியார், கல்லாலடியிற்கரும்பு, மருந்து மலைமேல்மருந்து, காபாலி (காவாலி), காளத்தி, காளத்திக்கற்பகம், சோதிவிடங்கர், பொன்முகரித்துறைவர் என்பவை முதலியன.

அம்பிகையின் திருநாமங்கள்: ஞானப்பிரஸூனாம்பிகை, ஞானப்பூங்கோதை, ஞானக் கொழுந்து, ஞானசுந்தரி, ஞானப் பேரொளி, சிற்புட்ப கேசி, வண்டார்குழலாள் என்பவை முதலியன.

ஸ்தலவிருக்ஷங்கள் இரண்டு: (1) அகண்டவில்வம், (2) கல்லால்.

இத்தலத்திற்குரிய நதி, பொன்முகரி. இது சந்நிதியில் உத்தரவாகினியாய்ச் செல்லுதலின் மிகச்சிறந்ததாகக் கூறப்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பெறுகின்றது. இதன் மகிமை இந்நூலுள் அங்கங்கே பரக்கக் காணப்படுவதன்றி வேறுநூல்களிலும் காணப்படும்;

"தத்து வங்கடந் தொளிர்கின்ற முக்கணான் றன்னோ
டொத்த செந்தமிழ் முனிவரன் பல்பல உழந்த
மெய்த்த வந்தர வந்தவிவ் வாற்றொடோர் வேந்த
னுற்ற நோன்பிவட் டந்ததோர் கங்கையோ வொக்கும்."

"குடதி சைக்கட லுடைந்தொரு வழிக்கொடு குணாத
கடல்வ யிற்புக வெழுந்தன வெழுந்தவிக் கடுநீ
ருடனொ ருத்தனுண் டஞ்செவி யொழுக்கிய நீருங்
கொடிக விழ்த்தசெந் நீருமோ நிகர்ப்பன கூறின."

"இடன கன்றவில் வாறுதன் கட்படா விறந்த
முடிவில் வெஞ்சினக் குஞ்சர முதலிய வற்றி
முடலை வெண்டிரைக் கருங்கட லுய்த்துமன் னுயிரைக்
கடவுள் வெள்ளியங் குன்றினமே லேற்றிடுங் கடிது."

"உலகி லெங்கணு மில்லதோ ரதிசய மொன்றித்
தலைமை கொண்டபொன் முகரியுட் டாழ்ந்தவர் யாருந்
தொலைவி றுன்பங்கள் பலதருஞ் சூழ்வினைப் பிறப்பா
மலைநெ டுங்கடற் கரைமிசை யேறுவ ரன்றே."

(சீகாளத்திப் புராணம், பொன்முகரி, 88-91)

என்பவற்றாலும் விளங்கும்.

மற்றத் தீர்த்தங்கள்: பிரமதீர்த்தம், ஸரஸ்வதி தீர்த்தம், இந்திர தீர்த்தம் அல்லது வச்சிரதாரை மாயூரதீர்த்தம், உருத்திர தீர்த்தம், மார்க்கண்ட தீர்த்தம், அரகரதீர்க்கம், மகாமோகினி தீர்த்தம், மணிகன்னி அல்லது மணிகர்ணிகை, பகவதி தீர்த்தம், பைரவதீர்த்தம், மாகாளதீர்த்தம், மகாகாளி தீர்த்தம், மூகதீர்த்தம் முதலியன. இவற்றுள் இந்திரதீர்த்தம் முதலியவற்றின் பெருமைகள்.

"இருவினை மலைதொ லைக்கு மந்திர தீர்த்தம் பா
வரவடர் மயூர தீர்த்த மாரஞர்ப் பிறவி யென்னு
முருகெழு புரந்தீ யூட்டு முருத்திர தீர்த்தம் பேழ்வாய்
வெருவரு தழற்கட் கூற்றம் வெல்லுமார்க் கண்ட தீர்த்தம்."

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

"அரகர தீர்த்தம் யாரு மாவுமோ கினிதீர்த் தம்வெண்
டிரையெறி தருமா காள தீர்த்தமென் றிவைமுன் னாய
பரமபுண் ணியதீர்த் தங்கள் பலபடிந் தவரை விண்ணோர்
நிரைதொழ விருத்தல் செய்து நிலவுமா புலவு வேலாய்."

(சீகாளத்திப்புராணம். பொன்முகரி.)

என்னுஞ் செய்யுட்களாலும் விளங்கும்.

இதனைச் சூழ்ந்துள்ள மலைகள், கனகதுர்க்கைமலை, குமாரகிரி, இந்திரகிரி, நீலகிரி, ஸித்திகிரி என்பன.

பீடங்கள் இரண்டு: (1) ஆகமபீடம். (2) வைதிகபீடம். இவற்றுள் முதலாவது திருக்காளத்திநாதருக்குரியது. இரண்டாவது தக்ஷிணாமூர்த்திக்குரியது. வைதிகபீடம் தென்பீடமெனவும் வழங்கும்.

இத்தலத்திலுள்ள வேறுகோயில்கள்: பகவதிகோயில், இந்திரநாதர் கோயில், மணிகர்ணிகேசர் கோயில், காலபைரவர் கோயில், ஆயிரவிலிங்கப் (ஸஹஸ்ரலிங்கம்) பெருமாள் கோயில், மூகேசர் கோயில், மகிஷாசுரமர்த்தினிகோயில், மார்க்கண்டேசர் கோயில், யக்ஷேசுவரர் கோயில் முதலியன.

வழிபட்டுப் பேறுபெற்றோர்: திருமால், திருமகள், பிரமதேவன், ஸரஸ்வதி, சிலந்தி, காளனென்னும் பாம்பு, யானை, பிரமரிஷிகளாகிய ஸனகாதிகள், சுவேதாசுவரர் இறுதியாகவுள்ள நூற்றுப்பன்னிரண்டு தேவரிஷிகள், உரோமசர், அகஸ்தியர், வஸிஷ்டர் முதலிய மகரிஷிகள், அஷ்டதிக்பாலகர், யோகினியாகிய நீலைமுதலியோர், அக்னிப்பிரபன் முதலிய அசுரர்கள், மணிமான் முதலிய யக்ஷர்கள், ஆதிசேஷன் முதலிய நாகர்கள், முசுகுந்தன் முதலிய அரசர்கள், சங்கப்புலவராகிய நக்கீரர், மதுரைக் கன்னியரிருவர், யாதவவேந்தன் முதலியோர்.

இதன் பழைய வரலாறுகளைத்தெரிவிக்கும் நூல்கள், வடமொழியில் ஷடத்தியாயி, ஸ்ரீகாளஹஸ்தி மாஹாத்மியம் (இது 96-அத்தியாயம் உள்ளது), தக்ஷிணகைலாஸ மாஹாத்மியம், ஸ்வர்ணமுகரி மாஹாத்திமியம், ஸூத ஸம்ஹிதையிலுள்ள 3-அத்தியாயங்கள் அடங்கிய புஸ்தகமொன்று, வாஸிஷ்டலைங் கத்திலுள்ள 12-அத்தியாயங்களடங்கிய புஸ்தகமொன்று ஆகிய இவைகளும், தெலுங்கில் வழங்குகின்ற தூர்ச்சடிகவி செய்த

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

புராணமொன்றும் ஆகிய இவைகளாம். இவை இப்போது கிடைக்கின்றன. இவற்றையன்றி வடமொழியிற் பர்வதாமஹாத்மிய மென ஒன்றுண்டென்று சொல்லுகின்றனர். அது கிடைக்கவில்லை.

ஸ்வர்ணமுகரீ மாஹாத்மியத்தில் 18-அத்தியாயங்கள், ஸூத ஸம்ஹிதையில் 3-அத்தியாயங்கள், வாஸிஷ்டைலைங்கத்தில் பன்னிரண்டு அத்தியாயங்கள் ஆகிய இவற்றின் மொழிபெயர்ப்பே இத்திருக்காளத்தி புராணம். இஃது இப்புராணத்துள்ள நூல்வரலாற்றால் அறியலாகும்.

"தலத்துமான்மியம் வேறினிக்காணினும்" என்னும் நூல் வரலாற்றுச் செய்யுளால், இவருக்கு மேற்கூறிய மூன்று நூல்களே கிடைத்திருந்தன வென்றும், இக்காலத்தில் காணப்படும் இத்தல சம்பந்தமான வேறு வடமொழிநூல்கள் கிடைக்கவில்லையென்றும் தெரிகிறது.

இப்புராணத்தால், பொன்முகரிநதியின் மகிமையும், இத்தலத்துள்ள மற்றத் தீர்த்தங்களின் பெருமைகளும், இதனைச் சூழ்ந்துள்ள மலைகளின் வரலாறுகளும், இதனையடைந்து பேறுபெற்ற தேவர்களாலும் முனிவர்கள் முதலியோர்களாலும் பிரதிஷ்டித்துப் பூசிக்கப் பெற்ற தைவிகம், ஆர்ஷம் முதலிய மஹாலிங்கங்களின் பெருமைகளும், வழிபட்டுய்ந்தோர்களுடைய அருள்பெற்ற சரிதங்களும், உத்தரகைலாசம் முதலிய ஸ்தலங்களுள்ளும் புஷ்கர முதலிய தீர்த்தங்களுள்ளும் முக்கியமானவற்றின் அரிய வரலாறுகளும், சிவோத்கர்ஷமும், குணமூர்த்திகளின் அருளிச் செயல்களும், ஸ்ரீ பங்சாக்ஷரம், விபூதி, ருத்திராக்ஷம் இவற்றின் மகிமைகளும் ஸ்ரீ பஞ்சாக்ஷரஜபத்தாலும், ருத்திராக்ஷதாரணத்தாலும் மேம்பாடுற்றவர் இன்னாரின்னா ரென்பதும், தர்மாதர்மங்களின் வகைகளும், அவற்றின் பயன்களும், வர்ணாஸ்ரம தர்மங்களும், பொதுவொழுக்கங்கள், தானங்களும், அவற்றின் பயன்களும், பலசமயக் கோட்பாடுகளும், தாருகாவனத்து முனிவர் நாற்பத்தெண்ணாயிரவரை இறைவன் ஆட் கொண்டருளிய அருமையும், கர்மகாரணங்களும், ஞானயோகமும், முத்திசாதனமும், திருக்காளத்திநாதருடைய கருணையைப் பெற விரும்புவோர் மாதங்கள், திதிகள், வாரங்கள், நக்ஷத்திரங்கள் இவற்றில் அனுஷ்டிக்க வேண்டிய விரதங்களின் வகையும், யுகதர்மங்களும், ஸ்ரீகாளஹஸ்தி வாஸத்தால் கலிபீடை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீங்குமென்பதும், சிவஞானமும் முத்தியும் வாய்க்குமென்பதும், இவைபோல்வன பிறவும் அறியலாகும்.

இப்புராணம், பாயிரமும், கடவுள் வாழ்த்தும், நூலியற்றுதற்குக் காரணமும், அவையடக்கமும், நூல்வரலாறும், பதிகமும், முறையே அமையப்பெற்று, அருச்சுனன் தீர்த்த யாத்திரை உரைத்த அத்தியாயம் முதலிய 33 அத்தியாயங்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது. இதன் செய்யுட்டொகை. 1726.

"ஆதரித்தகா ளத்திமான்மியமென வறைந்தேன்" (ப.7.பா.2) என்று நூலாசிரியர் கூறியதைக் கண்டு இந்நூற்பெயர் காளத்திமான்மியமென வழங்குவதற்குரியதாயினும் ஏட்டுப் பிரதிகளில் திருக்காளத்திப் புராணமென்றே வரையப் பட்டிருந்தமையின், அப்பெயரையே இதற்கு வைக்கும்படி நேர்ந்தது. ★ கிடைத்த தமிழ்ப் புராணக் கையெழுத்துப் பிரதிகள்.

1. திருக்கையபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துப் பிரதி....1

2. செப்பறையைச் சார்ந்த இராஜவல்லிபுரம் ஸ்ரீபொன்னம்பல தேசிகர் மடாலயத்துள்ள ஸ்ரீ கனகசபாபதி தேசிகரவர்கள் பிரதி... 1

3. தொழுவூர், ஸ்ரீ வேலாயுத முதலியாரவர்கள் பிரதி...1

4. ம-ள-ள-ஸ்ரீ, காஞ்சி-நாலிங்க முதலியாரவர்கள் பிரதி... 1. இவற்றுள், "கண்ணப்பர் சிவகோசரியார் முத்தியடைந்த அத்தியாயம்" என ஓர் அத்தியாயம் அதிமாக இருந்த பிரதியில் (ப.237.) பதிகத்தின் 3-ஆம் செய்யுளின் நான்காம் அடி, "கண்ணிய சிலம்பியு மிபமுங் காளனும்" எனவும், 4-ஆம் செய்யுள் "நற்சிவகோசரனாம் வேதனும், பொற்சிலைத் திண்ணனும் பூசை செய்ததுஞ், சிற்பர னுண்மையுஞ் சிவனுக் குத்தமப், பற்பல தலங்களா வுள்ள பான்மையும்" எனவும், முதல் இரண்டு அத்தியாயங்களும் ஒன்றுபடுத்தப்பட்டு, அதன் பெயர், "அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை பரத்துவாச தரிசனம் உரைத்த அத்தியாயம்." எனவும், நான்காம் அத்தியாயத்தின் இறுதிச் செய்யுள், "என்றுகூறு முனிவனை யேந்தலு, நன்றி சேர்சிவ கோசநம்பியும், வென்றி வெஞ்சிலை வீரனும் பூசைசெய், தொன்று மின்பமுணர்த்தென வோதினான்" எனவும் காணப்பட்டன.

இந்நூலாராய்ச்சிக்குக் கிடைத்த வடமொழிப் புராணக் கையெழுத்துப் பிரதிகள்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

1. ஸ்ரீகாளஹஸ்தி, ஸ்ரீமத் குமாரகாளஹஸ்தி சிவாசாரியரவர்கள் அளித்த ஸ்வர்னமுகரீ மாஹாத்தமியமும் வாசிஷ்டலைங்கமும் அடங்கிய பிரதி... 1

2. ஷியூர் ஸ்ரீமத் முத்துகுமார காளஹஸ்தி சிவாசாரியாரவர்கள் அளித்த தக்ஷிணகைலாஸ மாஹாத்மியப் பிரதி..1

3. ஷியூர் பிரஹ்மஸ்ரீ சாமிவாத்தியாரவர்கள் அளித்த ஷடத்தியாயீ பிரதி 1

இவற்றுள் முதலாவது பிரதியே இந்நூலாராய்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாக இருந்தது.

★ இப்புராணத்தையன்றி இத்தலத்திற்குரிய தமிழ்நூல்கள் 11 - ஆம் திருமுறையில் உள்ளனவாகிய நக்கீரதேவருளிச் செய்த கயிலை பாதி காளத்தி பாதித் திருவந்தாதியும், போற்றிக்கலிவெண்பாவும், கண்ணப்பதேவர் திருமறமும், கல்லாட தேவரருளிச் செய்த கண்ணப்பதேவர் திருமறமும், கருணைப்பிரகாசர் முதலிய மூவரியற்றிய சீகாளத்திப் புராணமும், திருக்காளத்தி நாதருலாவும், திருக்காளத்திநாதர் இட்டகாமிய மாலையொன்றும், திருக்காளத்திநாதர் கட்டளைக் கலிப்பாவும், திருக்காளத்திநாதர் பதிகமும், திருக்காளத்திக்கோவையும் ஆகிய இவைகளாம். கோவையிற் காப்புச்செய்யுள் மட்டுமே இப்போது காணப்படுகின்றது. தனிப்பாடல்கள் பல.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

விருத்தம்

"மருப்படிக்கொண் டெழுமுலையா ரெண்ணிறந்தார்
வயிற்புக்கு வருந்துநெஞ்சே
கருப்படிக்கா லருந்தியெனக் களித்தெழுபே
ரன்பினொடுங் கவின்கா ளத்திப்
பொருப்படிக்கிழக் கண்ணப்ப ரருள்வேட்டம்
புரிகாற்பொன் னடியிற் பூண்ட
செருப்படிக்கிழ்ச் சிறுமணலாய்க் கிடவாத
தீவினைக்கென் செய்கு வோமே."

வெண்பா

சிலந்தியொடு காளனத்தி திண்ணர்தமை யாண்ட
நலந்திகழுங் காளத்திநாதா - அலந்துஞ்
சகமயக்கந் தீரேனுன் றாண்மலரை யுன்னி
அகமயக்கந் தீர அருள்.

சென்னை
17.4.1912.

இங்ஙனம்
வே. சாமிநாதையன்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

1. திருக்காளத்தித்தலத்தின் சிறப்பு

'தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'

என்று அடியார் வணங்கிப் போற்றும் சிவபெருமான் கயிலை மலையை இடமாகக் கொண்டவர். எனினும் அப்பெருமான் இந்தியப் பெருநாட்டின் புண்ணிய நதிக் கரைகளிலும், மலைதோறும், எழுந்தருளிக் கோயில் கொண்டு அருள் பாலிக்கிறார்.

இறைவனின் அருள் விளையாடல்கள் நிகழ்ந்த திருத்தலங்கள், வரலாற்றில் சிறந்த இடம் பெறுகின்றன. அவ்வகையில் அடியார்களுள் 'அன்பே பிழம்பாகத்திரிந்த' கண்ணப்பருக்கு அருள்புரிந்த திருத்தலம் திருக்காளத்தியாகும். இத்தலத்தின் வரலாற்றுப் பெருமையையும், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் சிறப்புக்களையும் பழங்காலத் தமிழ் நூல்கள் போற்றிப் புகழ்கின்றன. பன்னிரு திருமுறைகள் முதலாகச் சைவ புராணங்கள் வழியாக, சிவப்பிரகாசர், குமரகுருபரர் ஆகிய சைவப் புலவர்களின் பாடல்கள் இறுதியாகத் திருக்காளத்தியைப் பற்றிய செய்திகள் பற்பல உள்ளன. இந்நூலில் திருக்காளத்தித் தலச்சிறப்பு-திருகாளத்தியில் அடியார்கள் பெற்ற பெருவாழ்வு-அடியார்கள் வரலாறு-சாத்திரதோத்திர நூல்களில் திருக்காளத்தி பற்றிய செய்திகள் ஆகியவற்றைத் தொகுத்து வழங்குகிறோம்.

திருக்காளத்தி - தலச்சிறப்பு

சிவபெருமான் திருக்கோயில் கொண்ட திருத்தலங்களுள் பஞ்சபூதத்தலங்கள் தனிச்சிறப்புடையன. அவற்றுள் திருக்காளத்தி 'வாயுத்தலம்' என்ற பெருமை பெறுகின்றது. இறைவனின் அருகில் உள்ள திருவிளக்கின் சுடர் எப்போதும் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்கும் காட்சி, இங்கே இறைவன் வாயுவின் உருவில் அருள் வழங்கிக் கொண்டிருப்பதைப் புலப்படுத்தும். இத்தலம் தென் கயிலாயம் மூன்றனுள் முதன்மையானது. இத்தலத்திலுள்ள கல்வெட்டு இறைவனைத் "தென்கயிலாயமுடையார்" என்று குறிப்பதால், இது புலனாகும்.

கயிலைக்கு நிகராக மதிக்கப் பெறும் இத்தலத்தை நக்கீரர் தாம் பாடிய 'கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி' என்ற நூலில்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

போற்றுகிறார். ஆறு ஆதாரத் தலங்களுள், திருக்காளத்தி 'விசுத்தித்தல' மாகும்.

சீகாளத்தி என்ற இத்தலத்தின் திருப்பெயர் 'சீ'- என்னும் சிலந்தி, 'காளம்'-என்னும் பாம்பு, 'அத்தி'-என்னும் யானை ஆகிய மூன்றாலும் பூசிக்கப் பெற்றமையால் உருவாயிற்று. இவற்றைத் தவிரத் திருமால், பிரம்ம தேவர், இலக்குமி, சரஸ்வதி, அஷ்டதிக்குப் பாலகர், சனகாதிமுனிவர், சுவேதாசுவதரர் முதலியோர், 112 தேவரிஷிகள், உரோமசர், வசிட்டர், அகத்தியர், யோகினிகள், அக்னிப் பிரபன் முதலிய அசுரர்கள், ஆதிசேடன் முதலிய நாகர்கள், மணிமான் முதலான யட்சர்கள், முசுகுந்தச் சக்ரவர்த்தி முதலான அரசர்கள், நக்கீரர், கன்னியர் இருவர், ஜங்கமராஜன், கண்ணப்பர், சிவகோசரியார், ஆகியோரால் வழிபடப் பெற்றது.

இத்தலமுள்ள நாடு: ஆற்றூர் வளநாடு. ஸ்தல விநாயகர்: அஞ்சந்தி விநாயகர்.

மேலும் நிருத்த கணபதி, புஷ்டி கணபதி, சக்திவிநாயகர், செல்லக் கணபதி, ஆகாயகணபதி, படித்துறை விநாயகர் ஆகிய சந்நிதிகளும் உள்ளன.

ஸ்வாமியின் திருப்பெயர்கள் : 1. சீகாளத்திநாதர். 2. திருக்காளத் திநாதர் 3. அழைத்து வாழ்வித்தவர் 4. ஆயிரநாமத்தவர் 5. ஆராவமுதர் 6. ஆல் 7. ஐந்து கொழுந்து 8. கணநாதர் 9. கரும்பு 10. கல்லாலடிக் கரும்பு 11. கல்லாலடியார் 12. கல்லாலின் கனி 13. காபாலி 14. காளத்தி 15. காளத்தியானை 16. சார்ந்தாரைக் காத்தவர் 17. சேர்ந்தோர்க்கினியார் 18. சோதிப்பெருந்தேவர் 19. சோதி விடங்கர் 20. தருமம் உரைத்தவர் 21. தென்கைலை நாயகர் 22. பச்சிமவாயிற்பரமர் 23. மலைக்கொழுந்து 24. மாணிக்கச் சோதிமலை 25. மும்முடிச் சோழபுரமூர்த்தி 26. மெய்த்தேவர் 27. யானைத்துணை 28. வரந்தருவார். திருக்கோயிலில் பெருமானுக்குச்சாத்தும் கவசத்தில் இந்த இருபத்தெட்டும் நட்சத்திரங்களாக விளங்குகின்றன.

சோமாஸ்கந்தமூர்த்தி திருப்பெயர்: சோதிவிடங்கர்.

அம்பிகையின் திருநாமங்கள்: 1. ஞானப்பூங்கோதை

2. வண்டார் குழலாள்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பீடங்கள் : திருக்காளத்திநாதரது பீடம் - ஆகமபீடம்.

தக்ஷிணாமூர்த்தியின் பீடம்- வைதிக பீடம், தென்பீடம்

ஸ்தலங்களின் திருநாமங்கள்: 1. கண்ணப்பபுரம் 2. திருக்காளத்தி 3. தென்கயிலை 4. மும்முடிச்சோழபுரம்

தீர்த்தங்கள்: 1. பொன்முகரி ஆறு 2. அரகரதீர்த்தம் 3. உருத்திர தீர்த்தம் 4. மகாகாளிதீர்த்தம் 5. மகாமோகினிதீர்த்தம் 6. மணிகர்ணிகை 7. மாயூரச்சுனை 8. மார்க்கண்டதீர்த்தம் 9. வச்சிரதீர்த்தம் 10. சூரியதீர்த்தம் 11. சரஸ்வதிதீர்த்தம் 12. சூர்யபுஷ்கரணி 13. சந்திரபுஷ்காணி 14. பரமானந்ததீர்த்தம் 15. தத்துவப்பிரகாச தீர்த்தம் 16. நாரதபுஷ்க்ரணி 17. பைரவதீர்த்தம் 18. ஞானப்பிரகாச தீர்த்தம்.

விருக்ஷம்: 1. அகண்ட வில்வம் 2. கல்லால் 3. சிலைவடம்

மலைகள்: 1. அத்தியமலை 2. துர்க்கைமலை 3. தென்கயிலை 4. நீலமலை

வழிபட்டுப் பேறுபெற்றோர் : 1.அக்கினிப் பிரபன் 2. அரிச்சந்திரன் 3. அருச்சுனன் 4. ஆதிசேடன் 5. இந்திரன் 6. கண்ணப்பர் 7. கன்னியர் இருவர் 8. காளன் என்னும் பாம்பு 9. கௌசிகர் 10. சனகாதிகள் 11. சித்திரசேனன் 12. சிலந்தி 13. சிவகோசரியார் 14. சுந்தரபாண்டியன் 15. சோழர் மூவர் 16. திருமால் 17.நக்கீரர் 18. துர்க்கை 19. பகீரதன் 20. பிரமன் 21. மகாகாளி 22. மணிமான் 23. முசுகுந்தன் 24. மூகன் ஒருவன் 25. யாதவன் 26. யானை 27. வசிட்டர் 28. ஸரஸ்வதி

மடங்கள்: பதினெண்மடம், பரத்துவாச்சிரமம் மணிகங்கை மடம்.

திருத்தொண்டுபுரிவோர்: ஆறு கொத்தார், எட்டுக்கொத்து இளைய நாயக்கர்கள், கோயிற்கணக்கர் சிட்டயராமன், பத்துக்குடிவேத பாரகர், மந்திரவோலைக் கணக்கர்.

சிறந்த வழிபாடு: தென்கயிலையை வலம் வருதல், மேற்குச் சாளர வழியே திருக்காளத்திநாதரை தரிசித்தல்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ. திருக்காளத்தி தலவரலாறு

திருக்காளத்தி என்பது தொண்டை நாட்டில் 24 கோட்டங்களுள் ஒன்றாகிய வேங்கடக் கோட்டத்துத் தொண்டைமான் பேராற்றூர் நாட்டு மும்முடிச் சோழபுரம் என்றும், ஆற்றூர் வளநாட்டு மும்முடிச் சோழபுரம் என்றும் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெறுகின்றது. இத்தலம் திருக்காளத்தி புகைவண்டி நிலையத்தருகே உள்ளது. ரேணிகுண்டா புகைவண்டி நிலையத்துக்கு 15 மைல் வடக்கில் அமைந்துள்ளது. இப்போது ஆந்திர மாநிலத்தில் உள்ளது. இது தட்சிண கைலாசம் என்று வழங்கப்படுகிறது. இத்தலம் ஐந்து யோசனை அகலமும் பத்து யோசனை நீளமும் உள்ளது. இதனை

"மண்டுயோசனை ஐயைந்து அகலமும் இரட்டி
நீளமும் வயங்கு தென்கயிலை"

என்ற சூதசங்கிதை அடிகளால் உணரலாம்.

இத்தலம் விராட் புருஷனுடைய விசுத்திஸ்தானம் என்றும், பிரம்ம தேவனுடைய அநாதஸ்தானம் என்றும், பஞ்சாட்சர ஜப சித்தியை விரைவில் தரும் தலம் என்றும், சிவஞானத்தைக் கொடுக்கத்தக்க காசி, சிதம்பரம், விருத்தாசலம், காளத்தி ஆகிய நான்கு தலங்களுள் ஒன்று என்றும், ஒரு நாளாவது நியமத்துடன் வசித்தால், கலியின் பீடையை மாற்றிப் பிறவித்துன்பம் போக்கும் காசி, காளத்தி ஆகிய இரண்டு தலங்களுள் ஒன்று என்றும் நூல்களில் பாராட்டப் பெறுவதாகும். இது தென்கயிலாயம் மூன்றனுள் ஒன்று. 'தீட்சை செய்வித்தன்றிப் பஞ்சாட்சர உபதேசம் செய்யேன்' என்று சிவன் சொல்லிய ரகசியத்தைத் தன் தோழியிடம் பார்வதி கூறியது கண்டு, மானிட மங்கையாகுமாறு சபித்தார். இத்தலத்தில் தேவியின் தேகம் வில்லமாக முளைக்க, இதன் தளங்களால் தேவிபூசித்தாள். இந்த இடம் அகண்டவில்வவனம் என்று வழங்குகின்றது. இக்கோயிலுக்கு வடக்கில் துர்க்காம்பிகை மலை; இதனைக் கனககிரி, பொன்மலை, கனகதுர்க்காம்பாகிரி என்பர். கிழக்கில் குமாரசுவாமி மலை, இது வித்யாசைலம் எனவும் வழங்கும். இங்கே முருகர் சந்நிதி உள்ளது. வேதாந்த உபதேசம் செய்தமையால் முருகர்-வேதாந்த தேசிகர் எனப்படுகிறார். தெற்கில் கண்ணப்பர் மலை. இது கைலாச சிகரங்களில் ஒன்று. இதனை வெள்ளி மலை, காளத்திமலை எனவும் கூறுவர். இதன்தெற்கே

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பைரவமலை. அதற்கும் தெற்கே தொண்டைமான்நாடு. ஆகவே இது நான்கு திசையையும் நோக்கிய தலமாகும்.

தெலுங்கு என்பது திரிலிங்கம் என்ற சொல்லிலிருந்து உண்டாயிற்று. ஸ்ரீகாளஹஸ்தி, திராக்ஷாராமம், ஸ்ரீசைலம் என்ற மூன்று லிங்கங்ளுக்கு இடைபட்ட பகுதியில் வழங்கிய மொழி தெலுங்கு. மேலும், எந்த நாட்டில் பசுக்கள் எள்ளைப் போலப் பாலைப் பொழிந்து யாகங்களை வளர்க்கின்றனவோ, அந்த நாடு திலகுதேசம் எனப்படும். இதுவே தெலுகதேசம் என்று மருவிற்று என்றார். 'அ' என்ற எழுத்து விஷ்ணுவைக் குறிக்கும் இவரைத் தரித்தவர் 'அந்தரன்', இவரால் உண்டுபண்ணப்பட்ட நாடு அந்தரம். அநந்த வடிவமான மலையை தரிக்கும் தேசம் அநந்த்ரம். இதுவே மருவி ஆந்தரம் என்றாகி, இதில் வழங்கும் மொழியும் ஆந்திரமொழி ஆயிற்று. இதைத்தாண்டி வடக்கே தமிழ்மொழி வழங்காமையால் தேவாரம் பாடி மூவரும், வடதிசைத் தலங்களைப் போற்றி இங்கிருந்தே பாடியருளினர்.

இத்தலத்தின் மகிமையை மகாபுரணங்களும், உபபுராணங்களும், ஸ்தலபுராணங்களும் கூறுகின்றன. வடமொழியில் ஷடத்தியாயி, ஸ்ரீகாளஹஸ்தி மாஹாத்தியம், தக்ஷிண கைலாஸ மஹாத்மியம், ஸவர்ணமுகீ மாஹாத்மியம், சூத ஸம்ஹிதையின் மூன்று அத்தியாயங்கள், வாஸிஷ்ட லைங்கத்தின் பன்னிரண்டு அத்தியாயங்கள் ஆகியவை கூறுகின்றன. பர்வத மாஹாத்மிய மென்றநூல் இத்தலவரலாறு கூறுகிறது என்பர். அந்நூல் இப்பொழுது அகப்பட்டுள்ளது.

தெலுங்கில் -ஸ்ரீகாளஹஸ்தி மாகாத்மியம் என்றநூல் உள்ளது. கிருஷ்ண தேவராயர் சபையில் இருந்த "அஷ்டதிக்கஜங்கள்" என்று புகழ்பெற்ற எட்டுப் புலவர்களுள் ஒருவரான தூர்ஜடி கவி இதனை இயற்றியுள்ளார். கிருஷ்ணதேவராயர் இத்தலத்திற்கு வந்து அடிக்கடி மகாதானங்கள் செய்ததாகக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்சிற்றம்பலம்

நக்கீரதேவ நாயனார் அருளிச் செய்த

கயலைபாதி காளத்திபாதி

திருவந்தாதி - உரையுடன்

நேரிசை வெண்பா.

(கயிலைக்கு ஒரு வெண்பாவும், காளத்திக்கு ஒரு வெண்பாவுமாக மாறி மாறி வர நூறு வெண்பாக்களால் ஆகிய திருவந்தாதிப் பிரபந்தத்தை நக்கீரர் அருளிச் செய்தார்)

மு. நடராஜன்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஸ்ரீ நக்கீரர் இயற்றிய 100 பாடல்களும், உரையும்

(1) சொல்லும் பொருளுமே தூத்திரியும், நெய்யுமா
நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாகச் - சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகற் கேற்றினேன் பெற்று.

விளக்க உரை:-

பெருமையுடைய திருக்கயிலாய மலையில் எழுந்தருளி இருக்கின்ற மங்கை பங்காளனாகிய சிவபெருமானுக்கு, எனது சொல்லும், பொருளும், நாவும் முறையே சுத்தமான திரியாகவும், நெய்யாகவும், அகலாகவும் பெற்று, சொல்லுதற்கரிய வெண்பா அந்தாதியே தீபமாகப் பெற்றுத் திருவிளக்கை ஏற்றினேன் என்பதாகும்.

திரி, நெய், அகல் இவற்றைக் கொண்டு ஏற்றப்படும் விளக்கு புற இருளை நீக்குவது போல, சொல், பொருள், நா இவற்றினால் தோன்றும் வெண்பாக்கள் சிவபெருமானுக்கு ஏற்றும் விளக்காக உருவகித்து, அஞ்ஞான இருளை நீக்கி, மெஞ்ஞான ஒளியைப் பெறுதலாயிற்று.

(2) பெற்ற பயன்இதுவே யன்றே, பிறந்தியான்;
கற்றவர்கள் ஏத்துஞ்சீர்க் காளத்திக் - கொற்றவர்க்குத்
தோளாகத் தாடரவம் சூழ்ந்தணிந்த அம்மானுக்(கு)
ஆளாகப் பெற்றேன் அடைந்து.

விளக்க உரை:-

அறிவுடைய நூல்களைக் கற்றவர்கள் வணங்குகின்ற, சிறப்புடைய திருக்காளத்தி வேந்தனாகிய (தேவனாகிய) சிவபெருமானுக்கு, அவரது திருத்தோள்களிலும், திருமார்பிலும், படமெடுத்து ஆடும் இயல்புள்ள பாம்புகளை ஆராய்ந்து அணிந்த எமது தந்தைக்கு, நான் சரணமடைந்து அடிமையானேன். நான்பிறந்தடைந்த பயன் இதுவேயன்றோ.

(3) அடைந்துய்ம்மின் அம்மானை; உம் ஆவி தன்னைக்
குடைந்துண்ண எண்ணியாவெங் கூற்றங்கு - அடைந்துநும்
கண்ணுளே பார்க்கும் பொழுது கயிலாயத்(து)
அண்ணலே கண்டீர் அரண்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளக்க உரை:-

உலகத்தீரே, உமது உயிராகிய உணவைத்தோண்டியெடுத்து உண்ணக் கருதிய கொடிய யமன் அங்கு வந்தடைய, அவனை உமது கண்ணினால்! கண்டு கலங்கும்போது, உமது உயிர்க்காவலனாகிய திருக்கயிலாயத்தில் எழுந்தருளியிருக்கின்ற பெரியோனை (அம்மானை) சரண் அடைந்து பிழையுங்கள் என்பது கருத்து.

பனங்காயினின்று நுங்கைக் குடைந்தெடுத்து உண்ணுதல் போல, கூற்றுவன் சிறிதும் இரக்கம் இல்லாமல் உமது உடம்பினின்றும் உயிரைக் குடைந்தெடுத்து உண்ணப் போகின்றான் ஆதலால், உம்ஆவி தன்னைக் குடைந்துண்ண வெண்ணிய வெங்கூற்றம் என்றும், இறுதிக்காலத்தில் உயிர்களுக்கு யமதரிசனமுண்டாதல் திண்ணமாதலால் "நுங்கண்ணுளே பார்க்கும் பொழுது" என்றும், அப்பொழுது உயிர்த்துணையாவான் காலகாலனாதல் வேண்டுமாதலால் "கயிலாயத்தண்ணலே கண்டீரான்" என்றும், அந்தப் பெரியோனை அடைந்தாலன்றி, கூற்றங் கடந்து உய்யீர் என்பதற்கு "அடைந்துய்ம்மின்" என்றும் கூறினார். யமலோகத்தின் கொடுமை மிகுதியால் அதன் பெயரைச்சொல்ல அஞ்சி அங்கு என்றார்.

உலகத்தீரே, உம்மிறுதிக் காலத்தில் கூற்றுவனை வென்று உய்யக் கருதுவீராயின் அவனுக்குக் கூற்றுவனாகிய சிவபெருமானைச் சரண் அடையுங்கள் என்பது கருத்து.

(4) *அரணம் ஒருமூன்றும் ஆரழலாய் வீழ*
முரணம்பு கோத்த முதல்வன் - சரணமே
காணுமால் உற்(று) அன்பன் காளத்தி கைதொழுது
பேணுமால், உள்ளம் பெரிது.

விளக்க உரை:-

என் மனமானது, மதில்களோர் மூன்றும் (திரிபுரங்கள்) நிறைந்த நெருப்புமயமாய் . எரிந்துவிழ, வலிமையான அஸ்திரத்தைத் தொடுத்த தலைவனாகிய சிவபெருமானது திருவடிகளையே பெரிதும் காண வேண்டுமென ஆசைப்பட்டு அவனது திருக்காளத்தியை அஞ்சலி செய்து நின்றதில் என்ன வியப்பு உள்ளது - என்பது கருத்து.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அரணமொரு மூன்று என்றது திரிபுரங்களை குறிக்கும். அவை இரும்பு, பொன், வெள்ளி என்பவற்றால் அமைந்த மூன்று மதில்கள் ஆகும். வியப்பாவது முன்பெல்லாம் பிரபஞ்ச வாசனையில் மூழ்கிக்கிடந்த மனம் இங்ஙனம் இறைவன் விஷயத்தில் மடை மாறப்பட்டதே என்னும் வியப்பு.

(5) பெரியவர், காணீர்என் உள்ளத்தின் பெற்றி
தெரிவரிய தேவாதி தேவன் - பெரிதும்
திருத்தக்கோர் ஏத்தும் திருக்கயிலைக் கோனே
இருத்தத்தான் போந்த(து) இடம்.

விளக்க உரை:-

யாவர்க்கும் தெரிதல் அருமையாகிய தேவர்களுக்கு அதிதேவனாகிய, பெரிதும் சிவஞானப் பெருஞ்செல்வத்தினை யுடையோர் துதிக்கின்ற திருக்கயிலை இறைவன் இருத்தற்கே என் மனம் இடம் பெற்றது. பெரியோரே என் மனத்தின் தன்மையைப் பாருங்கள். எனவே சிவபெருமான் வீற்றிருத்தற்கு இடம் கொடுத்தலன்றி வேறு எதற்கும்இடம் கொடாதது என் மனத்தின் தன்மை என்பதாகும்.

(6) இடப்பாகம் நீள்கோட் டிமவான் பயந்த
மடப்பாவை தன்வடிவே யானால் - விடப்பாற்
கருவடிசேர் கண்டத்தெம் காளத்தி ஆள்வார்க்(கு)
ஒருவடிவே அன்றால் உரு.

விளக்க உரை:-

நஞ்சின் பகுதியதாகிய கருமையாகிய அழகு பொருந்திய திருமிடற்றினையுடைய எமது திருக்காளத்தியை ஆள்வாருக்கு இடப்பக்கம், நீண்ட சிகரங்களையுடைய மலையரையன் பெற்ற இளமைப்பருவமுள்ள பாவைபோலும் உருவத்தை யுடையவளாகிய உமாதேவியின் உருவமேயானாலும் ஒரு வடிவினையுடையதன்று, இருவடிவு என்பதாகும்.

(7) உருவு பலகொண் டுணர்வரிதாய் நிற்கும்
ஒருவன் ஒருபால் இருக்கை - மருவினிய
பூக்கையிற்கொண் டெப்பொழுதும் புத்தேளிர் வந்திறைஞ்சும்
மாக்கயிலை என்னும் மலை.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளக்க உரை:-

மணத்தினால் இனிதாகிய மலர்களைத் தேவர்கள் தம் கையிலேந்தி எக்காலமும் வந்து அர்ச்சித்து வணங்குகின்ற, பெருமை பொருந்திய திருக்கயிலாயம் என்னும் மலையானது, பல வடிவங்களைக் கொண்டு யாவர்க்கும் அறிதல் அருமையாய் நிற்கின்ற ஒப்பற்றவனாகிய சிவபெருமான் ஒரு பக்கத்தில் வீற்றிருக்கும் இடமாகும்.

(8) மலைவரும்போர் வானவரும், தானவரும் எல்லாம்
அலைகடல்வாய் நஞ்செழல்கண் டஞ்சி - நிலைதளரக்
கண்டமையால் தண்சாரற் காளத்தி ஆள்வார்நஞ்(சு)
உண்டமையால் உண்டிவ் வுலகு.

விளக்க உரை:-

தேவர்களும், அசுரர்களும் ஆகிய எல்லோரும் அஞ்சி நிலை தளர, பாற்கடலின்கண் விஷமானது, மலைவருதல் போல எழுந்து வருதலைப்பார்த்து, பயந்து தங்கள் நிலையழியக்கண்டதனால், திருக்காளத்தியாள்வாராகிய சிவபெருமான் அவ்விஷத்தைப் பருகினதனால், இந்த உலகமே அழிந்தொழியாது நிலைபெற்று நின்றது என்பது கருத்து.

(9) உலக மனைத்தினுக்கும் ஒண்ணுதல்மேல் இட்ட
திலக மெனப்பெறினும் சீசீ; - இலகியசீர்
ஈசா, திருக்கயிலை எம்பெருமான், என்றென்றே
பேசா திருப்பார் பிறப்பு.

விளக்க உரை:-

எக்காலத்திலும் அழிவின்றி விளங்குகின்ற பெருஞ் சிறப்பையுடைய ஈசனே, திருக்கயிலாயத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானே என்று புகழ்ந்துரைத்து மேன்மேலும் அவன் திரு வார்த்தையை எடுத்துப் பேசாதிருப்பவரது ஜன்மமானது எல்லா உலகங்களுக்கும் ஒட்பமாகிய நெற்றியிலிட்ட திலகம் என்று சொல்லப்பெறினும் பயனில்லாதது. அது கண்ணில்லாத முகம் போல அருவருக்கப்படுவதேயாம்.

(10) பிறப்புடையர், கற்றோர், பெருஞ்செல்வர், மற்றும்
சிறப்புடைய ரானாலும் சீசீ; - இறப்பால்
கடியார் நறுஞ்சோலைக் காளத்தி ஆள்வார்
அடியாரைப் பேணா தவர்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

விளக்க உரை:-

என்றும் அழிதலில்லாத, இன்பம் நிறைந்த, நல்ல மணங்கமழ்கின்ற சோலைகள் சூழ்ந்த திருக்காளத்தியாள்வாரது தொண்டர்களை விரும்பி வழிபடாதவர், உயர்ந்த குடியில் பிறத்தலையுடையராயினும், கற்றற்குரியவைகளைக் கற்றோ ராயினும், பெருஞ்செல்வத்தையுடையவராயினும், மற்ற எல்லாச் சிறப்புகளையுடையாராயினும் பயனில்லை. இதன்மூலம் அடியார் பெருமைக்கு அளவில்லை என்பது கருத்தாகும்.

பிற தேவர்களுடைய சிறப்புப்போன்று அழிவதன்றாதலால் "இலகியசீர்" என்றும், ஒப்புயர்வு இல்லாத பெருஞ்செல்வன் ஆதலால் "ஈசன்" என்றும் அவனது திருவார்த்தையை எடுத்துச் பேசாதிருப்பார் உலக முழுவதும் ஆளும் திறமையுடையவராயினும், அவரது பிறப்பு வீணானது என்றும் உணர்க.

(11) *அவரும் பிறந்தவராய்ப் போவார்கொல் ஆவி!*
எவரும் தொழுதேத்தும் எந்தை - சிவம்மன்னு
தேக்குவார் சோலைத் திருக்கயிலை ஏத்தாதே
போக்குவார் வாளா பொழுது.

விளக்க உரை:-

எல்லோரும் வணங்கியத்துதிக்கின்ற எமது தந்தையாகிய சிவபெருமானது நன்மைநிலைபெற்ற தேன் ஒழுகுகின்ற சோலைகள் சூழ்ந்த திருக்கயிலாயத்தை துதியாமலே தம் வாழ்நாட்களை வீணாக்கழிப்பவராயின், அவர் அருமையாகிய மானிடப் பிறவியின் பயனை அடையாதவராவர். இதனால் அவர் ஆவியோடு கூடியிருந்தும் (உயிருடன்) பிணத்தை நிகர்ப்பர் (இறந்தவர்) என்றவராயிற்று.

(12) *வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்*
கேளார் கொல்; அந்தோ கிறிப்பட்டார்; - கீளாடை
அண்ணற் கணுக்காராய்க் காளத்தி யுள்நின்ற
கண்ணப்ப ராவார் கதை.

விளக்க உரை:-

பெரியோனாகிய சிவபெருமானுக்கு அன்பராகிய திருக்காளத்தியில் நிலைபெற்றிருந்த கீளாடையையுடைய கண்ணப்பத்தேவரது கதையைக் கேளாமல் வீணாகத் தமது

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாழ்நாளைப் போக்குகின்றவராகிய மானிடர், ஐயோ, அவர் பொய்யான பிரபஞ்சவாசனையில் அகப்பட்டு வீணே காலங்கழிக்கின்றார்.

(13) கதையிலே கேளீர்; கயிலாயம் நோக்கிப்
புதையிருட்கண் மாலோடும் சென்று - சிதையாச்சீர்த்
தீர்த்தன்பால் பாசுபதம் பெற்றச் செருக்களத்தில்
பார்த்தன்போர் வென்றிலனோ பண்டு.

விளக்க உரை:-

அருச்சுனன் முற்காலத்தில் கண்ணொளி மறைதற்குரிய இருட்டுப் பொழுதில் கண்ணனோடு சேர்ந்து திருக்கயிலாயத்தை நோக்கிச்சென்று அழியாத சிறப்பினையுடைய பரிசுத்தனாகிய சிவபெருமானிடத்தில் பாசுபதம் என்னும் அஸ்திரத்தைப் பெற்றுப் போர்த்தொழிலைச் செய்கின்ற பாரத யுத்த களத்தில் துரியோதனாதியரை வென்றான். இதனைப் பாரதக் கதையில் கேட்பீராக.

பாரதக் கதை:-

அருச்சுனன் (பார்த்தன்) முதலில் பெற்ற பாசுபதாத்திரத்தை இந்திரனுக்காக 'நிவாத கவசர, காலகேயர்' என்னும் அசுரர்கள் மேல் ஏவி அவர்களை அழித்ததனால், அவ்வத்திரம் மீண்டும் கயிலாயத்திற்குச் சென்றுவிட, மறுபடியும் அவன் பதின்மூன்றாம் நாட்போர் முடிந்த பின் இரவில் கண்ணனுடன் கயிலாயத்திற்குச் சென்று சிவபெருமானை வணங்கி அவ்வத்திரத்தைப் பெற்று வந்து, பதின்மூன்றாம் நாட்போரில் தான் செய்த சபதப்படியே தன் மகன் அபிமன்னுவைக் கொன்ற சயத்திரதனைப் பதினாலாம் நாள் சூரியன் மறைவதற்குள் கொன்று வெற்றியடைந்தான். இக்கதையே இவ்வெண்பாவில் குறிப்பிடப்பட்டது.

அருச்சுனன் சயந்திரதனைக் கொன்றதில் ஓர் அதிசயம் உண்டு. அருச்சுனன் செய்த சபதத்தைக் கேட்டுச் சயந்திரதனின் தந்தை தன் மகனை நாளைப் பகலுக்குள் எப்படியும் அருச்சுனன் கொன்றுவிடுவான். அவனுக்குச் சிவன், திருமால் இருவரின் துணைகளும் உண்டு என்று அஞ்சி, சமந்த பஞ்சக மடுவில் இறங்கி, "என் மகனின் தலையைத் தரையில் எவன் வீழ்த்துகின்றானோ அவன் தலை அப்பொழுதே சுக்கு நூறாய் வெடித்துச் சிதறுக" என்று மந்திரம் செபித்துக் கொண்டிருந்தான்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

இறுதியாக அருச்சனன் சயந்திரதனின் தலையை அம்பினால் வீழ்த்த முயன்றபோது, கண்ணன் குறுக்கிட்டு "இவன் தலையை வீழ்த்துதல் மட்டிலும் உனக்கு வெற்றியாகாது. அந்தத் தலை மடுவில் செபம் செய்து கொண்டிருக்கும் இவன் தந்தை கையில் போய்ச் சேர வேண்டும்" என கூறினான். அருச்சுனன் அப்பொழுது பாசுபதாத்திரத்தை எடுத்து மந்திரித்து, தன் கருத்தை முடிக்க வேண்டி ஏவ, அது சயந்திரதன் தலையைக்கொய்து கொண்டு போய், கண்மூடிக் கொண்டு செபம் செய்யும் அவன் தந்தையின் கையில் சேர்ந்தது.அவன் தந்தையோ ஏதோ பொருள் என்று அந்தத் தலையைத் தரையிலே விடுத்தான். அதனால் அவனது மந்திர செபம் அவனுக்கே பலிக்க, அவன் தலை சுக்கு நூறாய் வெடித்துச் சிதறியது. இதனையே "பாசுபதம் பெற்றுப் பார்த்தன் போர் வென்றிலனோ பண்டு" என இவ்வாசிரியர் சிறப்பெடுத்து மொழிந்தார். எனவே "சிவபெருமானை வணங்குவோர் செய்தற்கரிய செயலையும் செய்ய வல்லவர்" என்பது இதன் கருத்து.

(14) பண்டு தொடங்கியும், பாவித்து நின்கழற்கே
தொண்டு படுவான் தொடர்வேனைக் - கண்டுகொண்(டு)
ஆளத் தயாஉண்டோ, இல்லையோ? சொல்வாயே
காளத்தி யாய்உன் கருத்து.

விளக்க உரை:-

திருக்காளத்தியையுடையவனே, இளமைக்காலந்தொட்டு உனது மங்கள குணங்களைப் பாவனை பண்ணி, உனது திருவடிக்கே அடிமைப்படும் பொருட்டுத் தொடர்ந்து பற்றுகின்றவானாகிய என்னை அறிந்து கொண்டு ஆண்டருள, கிருபை உண்டோ இல்லையோ, அடியேனுக்கு உன் திருவுள்ளக்கிடக்கையை நீயே திருவாய் மலர்ந்தருள வேண்டும்.

"பண்டு தொடங்கியும் பாவித்து நின்கழற்கே தொண்டு படுவான்தொடர்வேன்" என்றமையால் பழவடியேன் என்பதும், கண்டுகொண்டு என்றமையால் இறைவன் முற்றறிவன் என்பதும், "ஆள" என்றமையால் முற்றறிவாற் கண்டுகொண்ட பின்னர் ஆள்வதே தகுதி என்பதும், "தயா" என்றமையால் ஆள்வதற்குக் காரணம் பெருங்கருணையே என்பதும், "உண்டோ இல்லையோ" என்றமையால் இதுகாறும் ஆளாமையால் ஐயமுற்றேன் என்பதும், "உன் கருத்து சொல்லாய்" என்றமையால், எம்மனோர் கருத்தை

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறிதற்குரிய முற்றறிவனாகிய உன் கருத்தை நீயே சொல்லின் அன்றி யாம் அறியவல்லேமல்லேம் என்பதும் பெறப்பட்டன.

(15) கருத்துக்குச் சேயையாய்க் காண்தக்கோர் காண
இருத்தித் திருக்கயிலை என்றால் - ஒருத்தர்
அறியான் உறுவார்க்(கு) அறியுமா றுண்டோ,
நெறிவார் சடையாய் நிலை!

விளக்க உரை:-

நீண்ட சடையையுடையவனே, மனத்துக்குத் தூரத்தி லிருப்பவனே, காணும் தகுதியுடையோர் காணும்படி திருக்கயிலாயத்தில் இருப்பை உடையவனாயின் உனது நிலையை அறிய முயல்வோராகிய ஒருவருக்கு அறியும் வழியுளதோ.

எம்மனோர் கண்ணுக்கேயன்றிக் கருத்துக்கும் புலப்படாதவன், காணத்தக்கோர் கருத்துக்கேயன்றிக் கண்ணுக்கும் புலப்படுவான் என்றமையாயிற்று. புலப்படாமையும், புலப்படுதலுமாகிய இருதன்மையனாய் நிற்கும் உனது நிலையை அறியவல்லார் யாவர் என்பது கருத்து.

(16) நிலையில் பிறவிநெடுஞ்சுழியிற் பட்டுத்
தலைவ தடுமாறு கின்றேன்; - தொலைவின்றிப்
போந்தேறக் கைதாராய்; காளத்திப் புத்தேளிர்
வேந்தே, இப் பாசத்தை விட்டு.

விளக்க உரை:-

தலைவனே, திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கின்ற தேவர்பிரானே, நிலையற்ற பிறவிக்கடலின் பெருஞ்சுழியில் அகப்பட்டு முடிவில்லாமல் தடுமாறுகின்றேன். ஆதலால் இந்தப் பிரபஞ்ச ஆசையை விட்டு வந்து முத்திக்கரையில் ஏறுவதற்கு நீ கைதர வேண்டும்.

மாறி மாறிப் பலபிறப்பும் பிறத்தலால் "நிலையில் பிறவி" என்றும், அப்பிறவி ஒன்றன்பின் ஒன்று காரணகாரிய முறையாக வருதலால், "தொலைவின்றி" என்றும், இறைவன் கைதராது இருந்தால் இந்தப் பிறவிக்கடலைக் கடக்க ஒண்ணாதாகையால் "கை தாராய்" என்றும், கடந்தவாறே கரையேற வேண்டுமாதலால், "போந்தேற" என்னும் கூறினார். பிறவியைக் கடலாக் கோடலால், ஏற என்றது முத்திக்கரையில் ஏற என்றுரைக்கலாயிற்று. தலைவ என்று

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அழையாமல் புத்தேளிர் வேந்தே என்றது எம்மனோர்க்குத் தலைவனாதலேயன்றித் தேவர்களுக்குந் தலைவனாதலை வற்புறுத்தற்கு. புத்தேளிர் என்றது பிரமன் முதலியோரை.

(17) பாசத்தை விட்டுநின் பாதத்தின் கீழே, என்
நேசத்தை வைக்க நினைகண்டாய், - பாசத்தை
நிக்குமா வல்ல கயிலாயா, நீ என்னைக்
காக்குமா(று) இத்தனையே காண்.

விளக்க உரை:-

இந்த பிரபஞ்சப் பற்றைவிட்டு உன் திருவடியிலே என் அன்பை வைக்கும்படி நீ திருவுளத்திற்குச் சங்கற்பிக்க வேண்டும். பந்த பாசத்தை ஒழிக்கும் வழியில்வல்ல திருக்கயிலாயனே நீ என்னைக் காத்தருளும் வகை இவ்வளவே. அதாவது முத்தியை தந்தருளுவது என்பதே.

(18) காணா தலக்கின்றார் வானோர்கள், காளத்திப்
பூணார மார்பன்றன் பொற்பாதம்; - நாணாதே
கண்டிடுவான் யான் இருந்தேன், காணீர், கடல்நஞ்சை
உண்டிடுவான் றன்னை ஒருங்கு.

விளக்க உரை:-

தேவர்களும், திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கிற, ஆரங்களைத்தரித்த திருமார்பினையுடையவனாகிய சிவ பெருமானது பொன் போன்ற திருவடியொன்றனையும் காணாது வருந்தி, திகைப்பதைக் கேட்டறிந்தும் நான் சிறிதும் நாணாமல், பாற்கடலில் தோன்றிய விஷத்தைப் பருகினவனாகிய சிவபெருமானை முழுதும் காணத்துணிந்திருக்கின்ற எனது அறியாமையை நீங்கள் பாருங்கள் என்பது கருத்து.

(19) ஒருங்கா(து) உடனேநின்(று) ஓர்ஐவர் எம்மை
நெருங்காமல் நித்தம், ஒருகால் - நெருங்கிக்
கருங்கலோங் கும்பற் கயிலாயம் மேயான்
வருங்கொலோ நம்பால் மதித்து.

விளக்க உரை:-

ஒப்பற்ற (இந்திரியங்களாகிய) ஐவரும் உடன் கூடியிருந்து, எமக்கு அடங்காமல் நின்று, எம்மை அழிக்காமலிருக்கும்படி நெருக்கம் அடைந்து, கரிய மலைபோல் உயர்ந்த யானைகள்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

சஞ்சரித்தற்குரிய திருக்கயிலாயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் நம்மிடத்துத் திருவுளம் வைத்து நாள்தோறும் ஒருதரம் எழுந்தருளுவனோ.

பிறவிக்கு ஏற்ற விஷயங்களில் இழுத்துச் செல்லும் பெருவலி உடைமையால் இந்திரியங்களை ஒரைவர் என்றும், இறைவன் பொறி வாயிலைந்தவத்தான் ஆதலால் அவன் நித்தமொருக்கால் நம்மிடத்தில் மதித்து வருவானாயின் இவ்வைவர் எமக்கு அடங்கியிருப்பர் என்றற்கு "கயிலாயமேயான் நித்தமொருகால் வருங்கொலோ" என்றும் கூறினார்.

(20) நம்பால் மதித்துறையும் காளத்தி நண்ணாதே
வம்பார் மலர்தூய் வணங்காதே; - நம்பா, நின்
சீலங்கள் ஏத்தாதே தீவினையேன் யானிருந்தேன்;
காலங்கள் போன கழிந்து.

விளக்க உரை:-

அடியாருக்கு நம்பகமானவனே எம்மிடத்து மதிப்புவைத்து நீ வாசம் பண்ணுகின்ற திருக்காளத்தியை அடையாமலும், மணமுடைய மலர்களைத்தூவி உன்னைத்தொழாமலும், உன் மங்கள குணங்களைக் கூறித் துதிக்காமலும் தீவினையையுடையேனாகி நான் இருந்தேன். என் ஆயுள் நாட்கள் விரைவாகக் கழிகின்றன.

உயிர்கள் எளிதில் கண்டு உய்வதற்கே சிவபெருமான் தென் கயிலாயம் என்று அழைக்கப்படும் திருக்காளத்தியில் எழுந்தருளியுள்ளார்.

(21) கழிந்த; கழிகிலாய் நெஞ்சே, கழியாது
ஒழிந்தநாள் மேற்பட் டுயர்ந்தோர் - மொழிந்தசீர்க்
கண்ணுதலான் எந்தை கயிலாய மால்வரையை
நண்ணுதலாம் நன்மை நமக்கு.

விளக்க உரை:-

மனமே, சென்ற நம்வாழ்நாளைப்பற்றி நீ இரங்கினாயில்லை. கழியாது எஞ்சியுள்ள நாட்களிலாயினும் உயர்ந்தோர் புகழ்ந்த சிறப்பினையுடைய நெற்றிக் கண்ணனாகிய எமது தந்தையின் திருக்கயிலாயம் என்னும் பெருமையுடைய மலையை அடைதல் நமக்கு நன்மையுண்டாக்கும் என்பது கருத்து.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

(22) நமக்கிசைந்த வாநாமும் ஏத்தினால், நம்பர்
தமக்கழகு தாமே யறிவர் - அமைப்பொதும்பின்
கல்லவாம் நீடருவிக் காளத்தி யாள்வாரை
வல்லவா, நெஞ்சமே, வாழ்த்து.

விளக்க உரை:-

மனமே, நமக்கு ஏற்ற வழியில் நாமும் துதிப்போமாயின் சிவபெருமானாகும் தமக்கு அழகாகிய காரியத்தைச் செய்யத்தாமே அறிவார். ஆதலால் மூங்கில் புதர்களோடு கற்களையும் உடையனவாகிய நீண்ட அருவி ஆறுகளையுடைய திருக்காளத்தியாள்வரை முடிந்த வகையாய்த் துதிசெய்வாயாக.

(23) வாழ்த்துவாய்; வாழ்த்தா தொழிவாய்; மறுகழியிட்டு
ஆழ்த்துவாய்; அஃதறிவாய் நீயன்றே! - யாழ்த்தகைய
வண்டார் பொழிற்கயிலை வாழ்கென் றிருப்பதே
கண்டாய் அடியேன் கடன்.

விளக்க உரை:-

மனமே, வாழ்த்துவாய், வாழ்த்தாது ஒழிவாய், மறு பிறவியாகிய சுழியின்கண் வீழ்ந்தெழுவாய், அத்தன்மையை அறியவல்லாய் நீயல்லவா. வீணையின் அழகுடைய வண்டுகள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்கயிலாயமானது வாழ்வதாக என்று சிந்தித்திருப்பதே அடியேனுக்குக் கடமையாகும்.

(24) கடநாகம் ஊடாடும் காளத்திக் கோனைக்
கடனாகக் கைதொழுவார்க் கில்லை; - இடம்நாடி
இந்நாட்டி கேவந்(து)இங்(கு) ஈண்டிற்றுக் கொண்டுபோய்
அந்நாட்டில் உண்டுழலு மாறு.

விளக்க உரை:-

தமது பிறப்பிடத்தை நாடி இவ்வுலகில் வந்து பிறந்து, இங்கு புண்ணிய பாவங்கைள மிகுதியாகச் சம்பாதித்துக் கொண்டுபோய் மறுபிறவியில் அநுபவித்து உழலுதல் மதயானைகள் சஞ்சரித்தற்கு இடமாகிய திருக்காளத்தியில் எழுந்தருளிய இறைவனைத் தமது கடமையாகக் கொண்டு கைகூப்பி வணங்குவார்க்கு இல்லையாகும். மண்ணுலகம் வினைகளை ஈட்டும் இடம் எனவே இதனைக் "கரும பூமி" என்பர். சுவர்க்க நரகங்கள் வினைப்பயன்களை நுகரும் இடம். எனவே அவற்றைப் "போக பூமி" என்பர். சிவபெருமானை

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

வணங்குவார் இந்த இருவகை பூமிக்கும் செல்லாது சிவலோகத்தையடைவார் என்பது பொருள்.

(25) மாறிப் பிறந்து, வழியிடை யாற்றிடை
ஏறி யிழியும் இதுவல்லால், - தேறித்
திருக்கயிலை ஏத்திரேல், சேமத்தால் யார்க்கும்
இருக்கையிலை கண்டீர் இனிது.

விளக்க உரை:-

உருமாறிப் பிறந்தவிடத்து இடைவழியில் புண்ணிய பாவங்களுக்கீடாகச் சுவர்க்காதிகளில் ஏறி, நரகாதிகளில் இழிகின்ற இத்தொழிலை அல்லாது, தெளிந்து திருக்யிலாயத்தை துதிக்கவில்லையானால், யாருக்கும் இனிதான இன்பத்தோடு கூடியிருந்தல் அரிது. (அமைதி கிடைக்காது.)

(26) இனிதே பிறவி; இனமரங்கள் ஏறிக்
கனிதேர் கடுவன்கள் தம்மில் - முனிவாய்ப்
பிணங்கிவரும் தண்சாரல் காளத்தி பேணி
வணங்கவல்ல ராயின் மகிழ்ந்து.

விளக்க உரை:-

கூட்டமாகயிருக்கின்ற மரங்களில் ஏறி, பழங்களை ஆராய்கின்ற குரங்குகள் தம்முள் கோபங்கொண்டு பிணங்கி வருகின்ற குளிர்ச்சியாகிய சாரலையுடைய திருக்காளத்தியை ஒருவர் விரும்பி மகிழ்ந்து தொழவல்லாரானால் அவருக்குத் துன்பம் தருவதாகிய பிறத்தலும் இன்பம் தருவதேயாம்.

(27) மகிழ்ந்தலரும் வண்கொன்றை மேலே மனமாய்
நெகிழ்ந்து நெகிழ்ந்துள்ளே நெக்குத் - திகழ்ந்திலங்கும்
விண்ணுறங்கா வோங்கும் வியன்கயிலை மேயாய்என்
பெண்ணுறங்காள்; என்செய்கேன்? பேசு.

விளக்க உரை:-

மிகுதியாக விளங்குகின்ற மேகங்கள் படியும்படி அழகிய சோலைகள் உயர்ந்த பெருமையடைந்த திருக்கயிலாயத்தில் எழுந்தருளினவனே, என் பெண்ணானவள் மகிழ்ந்து மலர்கின்றவளவிய உன் கொன்றை மலர்மாலையின் மீது மனமுள்ளவளாகி உள்ளே நெகிழ்ந்து உருகி, கண்ணுறங்காள், இதற்கு யான் என்ன செய்ய முடியும்; நீயே சொல்வாயாக.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

(28) பேசும் பரிசறியாள் பேதை; பிறர்க்கெல்லாம்
ஏசும் பரிசானாளே; பாவம்! - மாசுனைநீர்
காம்பையலைத் தாலிக்கும் காளத்தி என்றென்று
பூம்பயலை மெய்ம்முழுதும் போர்த்து.

விளக்க உரை:-

பேசும்வதை அறியாதவளாகிய என் பேதைப் பெண்ணானவள், பெரிய சுனை நீரோடு மூங்கில்களும் மலைமீது ஒலிக்கின்ற திருக்காளத்தியென்று பலவாறாகச் சொல்லி, அழகிய பசலை நிறத்தால் உடம்பு முழுவதும் மூடப்பட்டு, பிறர்க்கு எல்லாம் பழி தூற்றப்படுந்தன்மையளானாள், இது என்ன பாவம்.

(29) போர்த்த களிற்றுரியும், பூண்ட பொறியரவும்
தீர்த்த மகளிருந்த செஞ்சடையும் - மூர்த்தி
குயிலாய மென்மொழியாள் கூறாய வாறும்
கயிலாயா, யான்காணக் காட்டு.

விளக்க உரை:-

திருக்கயிலாயத்தையுடையவனே நீ உனது திருமேனியின்மீது போர்த்தருளிய யானைத்தோலையும், ஆபரணமாக அணிந்த புள்ளிகளையுடைய பாம்புகளையும், கங்காதேவி தங்கியிருக்கின்ற சிவந்த சடாபாரத்தையும், உன் திருமேனியில் குயிலோசை போலும் மெல்லிய மொழியினையுடையவளாகிய உமாதேவியார் பாகமான விதத்தையும் நான் காணும்படி காட்டுவாய்.

(30) காட்டில் நடம்ஆடிக் கங்காளர் ஆகிப், போய்
நாட்டிற் பலிதிரிந்து நாள்தோறும் - ஓட்டுண்பார்
ஆனாலும் என்கோலோ, காளத்தி ஆள்வாரை
வானோர் வணங்குமா வந்து.

விளக்க உரை:-

மயானத்தில் நடனம் செய்து, எலும்புகளைச் சுமப்பராகிய திருக்காளத்தியாள்வார் நாள்தோறும் ஊரில் சென்று பிச்சை எடுத்து ஓட்டில் வைத்து உண்பவராயினும், அவரைத் தேவர்களெல்லோரும் வந்து வணங்குவதற்குக் காரணம் என்ன என்பதாகும்.

(31) வந்தமரர் ஏத்தும் மடைக்கூழும் வார்சடைமேல்
கொந்தவிழும் மாலை கொடுத்தார்கொல்! - வந்திந்து
வால்உகுத்த வண்கயிலைக் கோமான் மணிமுடிமேல்
பால்உகுத்த மாணிக்குப் பண்டு.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளக்க உரை:-

முற்காலத்தில் துதித்து வெள்ளொளியைப் பரப்புகின்ற வளவிய திருக்கயிலாயத்துக்கு வேந்தனாகிய சிவபெருமானானவர், தம் அழகிய திருமுடிமீது பாலை அபிஷேகம் செய்த பிரமச்சாரியாகிய சண்டேசுர நாயனாருக்கு, தேவர்கள் வந்து தோத்திரம் பண்ணுகிற தமது பரிகல சேஷத்தையும், நீண்ட சடையின் மீது அணிந்த பூங்கொத்துக்கள் விரிகின்ற மாலையையும் தந்து அருளினார் என்பதாகும்.

(32) பண்டிதுவே; அன்றா கில், கேளிர்கொல்! பல்சருகு
கொண்டிலங்கத் தும்பின்னூற் கூடிழைப்பக் - கண்டு
நலந்திக் கெலாம்ஏத்தும் காளத்தி நாதர்
சிலந்திக்குச் செய்த சிறப்பு.

விளக்க உரை:-

முற்காலத்தில் நிகழ்ந்த இந்தச் சரித்திரமேயாயினும், பல சருகுகளைத் தம்மீது கொண்டிருந்த சிவலிங்கப் பெருமான் மீது பின்னப்பட்ட நூல்களைக் கொண்டு கூட்டைச் செய்ய, அதன் பக்தி விசேடத்தைக் கண்டு, எல்லாத்திசையிலுள்ளார் எல்லோரும் நன்மையையெடுத்துப் புகழ்தற்குரிய திருக்காளத்தி இறைவர், சிலந்திப்பூச்சிக்குச் செய்த மேன்மையாயினும் நீங்கள் கேட்டிலிரோ.

சிலந்திக்குச் செய்த சிறப்பாவது சோழ மன்னனாகச் கோச்செங்கணான் என்ற பெயரில் பிறக்கச் செய்தமை. அம்மன்னனே திருவானைக்கா முதலான எழுபது தலங்களில் சிவபெருமானுக்கு மாடக்கோவில் எடுத்தான். எனவே சிவபெருமானுக்கு அன்புடன் சிறிய பணி செய்யினும் அவன் பெரிய பயன் தருவான்.

(33) செய்த சிறப்பெண்ணில், எங்குலக்கும்? சென்றடைந்து
கைதொழுவார்க்(கு) எந்தை கயிலாயர்; - நொய்தளவில்
காலற்காய்ந் தாரன்றே, கண்டீர்! கழல்தொழுத
பாலற்காய் அன்று பரிந்து.

விளக்க உரை:-

எமது தந்தையாகிய திருக்கயிலாயநாதர் திருவடியைப் பூசித்து வணங்கிய பாலகனான மார்க்கண்டேயனுக்காக அந்நாளில் இரங்கியருளி யமனைக் கோபித்து உதைத்தார். இதனைப்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பாருங்கள். இங்ஙனம் செய்த அவர் திருக்கயிலாயத்தைச் சென்றடைந்து கைகூப்பி வணங்குவோருக்கு செய்த மேன்மையை மதித்து நோக்கினால், அந்தச் சிறப்புக்கு ஓர் முடிவு உண்டோ சொல் என்பது கருத்து.

(34) பரிந்துரைப்பார் சொற்கேளாள்; எம்பெருமான் பாதம்
பிரிந்திருக்க இல்லாமை பேசும் - புரிந்தமரர்
நாத, வா! காளத்தி நம்பா, வா என்றென்றே
மாதவா உற்ற மயல்.

விளக்க உரை:-

என் பெண்ணானவள் விரும்பி, தேவர்பிரானே வருவாயாக, திருக்காளத்தியிலெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே வருவாயாக என்று பலமுறை சொல்லி அடைந்தமைய லிருந்தவாறென்ன வியப்பு. தன்னிடத்து அன்புகொண்டு சொல்லுவோரது சொல்லைக் கேளாதது, அவள் சிவபெருமானது திருவடியைப் பிரிந்திருக்கமாட்டாமையே என்பது கருத்து.

(35) மயிலைத் தவிர்க்கநீ வாராய்! ஒருமூன்(று)
எயிலைப் பொடியாக எய்தாய்; - கயிலைப்
பருப்பதவா, நின்னுடைய பாதத்தின் கீழே
யிருப்பதவா வுற்றாள் இவள்.

விளக்க உரை:-

பொடிப்பொடியாகும் ஒப்பற்ற மும்மதில்களையும் எய்தவனே. திருக்கயிலாய மலையையுடையவனே, இப்பெண் உன்னுடைய பாதத்தின் கீழே இருத்தலை விரும்பினாள். ஆதலால் இவளது மையலை நீக்கும் பொருட்டு நீ வருவாயாக.

(36) இவளுக்கு நல்லவா றெண்ணுதிரேல், இன்றே
தவளப் பொடியிவள்மேல் சாந்தி, - இவளுக்குக்
காட்டுமின்கள் காளத்தி; காட்டிக் கமழ்கொன்றை
சூட்டுமின்கள்; தீரும் துயர்.

விளக்க உரை:-

இந்தப் பெண்ணுக்கு நல்ல வழியை நினைப்பீராயின் இப்பொழுதே இவள்மீது திருவெண்ணீறு அணிந்து திருக்காளத்தியைக் காட்டுங்கள், பிறகு காளத்தினாதரது பரிமளிக்கின்ற கொன்றை மலர் மாலையைச் சூட்டுங்கள். இங்ஙனம் செய்வீராயின் இவளது துன்பம் நீங்கும்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

(37) *துயர்க்கெலாம் கூடாய தோற்குரம்பை புக்கு*
மயக்கில் வழிகாண மாட்டேன்; - வியற்கொடும்போர்
ஏற்றானே! வண்கயிலை எம்மானே! என்கொலோ
மேற்றான் இதற்கு விளைவு!

விளக்க உரை:-

எல்லாத்துன்பங்களுக்கும் கூடாகிய தோலாற் செய்த சிறுகுடிலாகிய உடம்பிற் புகுந்து, மயக்கமற்ற நன்னெறியை காணமாட்டாதவனாகியிருக்கின்றேன். பெருமையுள்ள கொடிய போர்த்தொழிலில் வல்ல இடபத்தையுடையவனே, வளமாகிய திருக்கயிலையிலெழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானே, இனிமேலாயினும் இப்படியிருக்கின்ற எனது நிலைக்கு உளதாகும் பயன்யாதோ, அறியேன்.

(38) *விளையும் வினைஅரவின் வெய்ய விடத்தைக்*
களைமினோ! காளத்தி ஆள்வார் - வளைவில்
திருந்தியசீர் 'ஈசன்' திருநாமம் என்னும்
மருந்தினைநீர் வாயிலே வைத்து.

விளக்க உரை:-

திருக்காளத்தியாள்வார் கோடுதலில்லாத குற்றமற்ற சிறப்பினையுடைய ஈச்சுரன் அவனது திருநாமமென்கிற மருந்தினை வாயிலிட்டு விருத்தியடைகின்ற வினைகளாகிய பாம்புகளின் கொடிய விஷத்தை நீங்கள் வேரறுங்கள்.

மருந்துகள் யாவும் உள்விழுங்கவே நோயைத் தீர்க்கும். ஈசனின் திருநாமமோ வாயில் உச்சரிக்கும்போதே நோயைத் தீர்க்கும் அதிசய மருந்தாகின்றது. இறைவன் நாமத்தைச் சொல்லுதலால் பிறவியாகிய விஷத்தைப் போக்குதல் என்பது கருத்து.

(39) *வாயிலே வைக்கு மளவில் மருந்தாகித்*
தீய பிறவிநோய் தீர்க்குமே; - தூயவே
கம்பெருமா தேவியொடு மன்னு , கயிலாயத்(து)
எம்பெருமான் ஓர்அஞ் செழுத்து.

விளக்க உரை:-

பரிசுத்தராகிய திருவேகம்பர் உமாதேவியுடன்கூடி நிலைபெற்ற திருக்கயிலையெம்பெருமானது ஒப்பற்ற ஸ்ரீ பஞ்சாக்ஷரம் வாயினால்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

உச்சரித்தால் அது மருந்தாகிக் கொடிய பிறவிப்பிணியை நீக்கும். ஸ்ரீ பஞ்சாக்ஷரம் என்பது அஞ்செழுத்தான "நமச்சிவாய" என்பதாகும்.

(40) அஞ்செழுத்துங் கண்டீர் அருமறைகளா வனவும்,
அஞ்செழுத்தும் கற்க அணித்தாகும் - நஞ்சவித்த
காளத்தி யாருக்கும் காண்டற் கரிதாய்ப்போய்
நீளத்தே நின்ற நெறி.

விளக்க உரை:-

அரிய வேதங்களாய் விரிந்திருப்பனவும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமே அதைக் கற்றால், பாற்கடலில் உண்டாகிய ஆலகால விஷத்தின் கொடுமையைத் தனித்தருளிய திருக்காளத்திநாதர், யாருக்கும் காண முடியாத நெடுந்தொலைவில் இருந்தாலும், மிக அருகில் இருப்பதுபோல எளியவனாய்ப் புலப்படுவார் என்பது கருத்து.

(41) நெறிவார் சடையாய், நிலையின்மை நீ ஒன்(று)
அறியாய்கொல்! அந்தோ! அயர்ந்தாள்; - நெறியில்
கனைத்தருவி தூங்கும் கயிலாயா நின்னை
நினைத்தருவி கண்சோர நின்று.

விளக்க உரை:-

நெறிதலுடைய நீண்ட சடையையுடையவனே, வழிகளில் ஒலியுடன் கூடிய அருவி, ஆறுகள் ஓடுகின்ற திருக்கயிலாய மலையை இடமாகவுடையவனே, தேவரீரே, உம்மை நினைத்துக் கண்ணீர் அருவியாறாகப் பெருக நின்று சோர்ந்தாள். ஐயோ அவளது நிலையாமையை நீ அறிந்திலையோ.

(42) நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும்யாம்
என்றும் நினைந்தாலும் என்கொலோ! - சென்றுதன்
தாள்வா னவர்இறைஞ்சுதம் தண்சாரற் காளத்தி
ஆள்வான் அருளாத வாறு.

விளக்க உரை:-

தேவர்கள் வந்து தன்திருவடியை வணங்குமிடமாகிய குளிர்ச்சியான சாரலையுடைய திருக்காளத்தியாள்பவராகிய சிவபெருமான், நாம் நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும், எப்பொழுதும் நினைத்தாலும் அருள் புரியாத விதமென்னவோ? இறைவன் அருளும் காலத்தை அவன் அறிதலின்றிப் பிறர் அறியுமாறில்லை.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

(43) அருளாத வாறுண்டே! யார்க்கேனும் ஆக;
இருளார் கறைமிடற்றெம் ஈசன் - பொருளாய்ந்து
மெய்ம்மையே உன்னில், வியன்கயிலை மேயான்வந்(து)
இம்மையே தீர்க்கும் இடர்.

விளக்க உரை:-

கருமையான நஞ்சு பொருந்திய திருமிடற்றையுடைய எமது ஈசன் யாருக்கேயாயினும் அருள்புரியாதவாறு உளதோ? வேதாகமப் பொருள்களை ஆராய்ந்ததனால் உண்டாகிய ஞானத்தால் நினைத்தால், பெருமையுள்ள திருக்கயிலாய மலையின் கண்ணே பொருந்தி வாழ்வோனாகிய சிவபெருமான் எழுந்தருளி இப்பிறயிலேயே நமது பிறவித் துன்பங்களை ஒழித்தருளுவான்.

(44) இடரீர் உமக்கோர் இடம்நாடிக் கொண்டு
நடவிரோ காலத்தால்; நாங்கள் - கடல்வாய்க்
கருப்பட்டோங்(கு) ஒண்முகில்சேர் காளத்தி காண
ஒருப்பட்டோம் கண்டீர்; உணர்ந்து.

விளக்க உரை:-

நாங்கள், கடலின்கண் படிந்து சூலாகி மேலெழுந்த உலகத்துக்கு நன்மையைச் செய்கின்ற மேகங்கள் படிகின்ற திருக்காளத்தி மலையைக் காண மனம் ஒருமைப்பட்டோம். ஆதலால் துன்பம் உடையீரே உங்களுக்கு ஏற்ற இடம் ஒன்றை நாடிக் சிவபெருமானது திருவடி நிழலையடைய, செல்ல வேண்டிய காலத்தில் செல்லுவீர்களாக.

(45) உணருங்கால் ஒன்றை உருத்தெரியக் காட்டாய்;
புணருங்கால் ஆரமுதே போலும்; - இணரில்
கனியவாம் சோலைக் கயிலாயம் மேயாய்,
இனியவா காண்நின் இயல்பு.

விளக்க உரை:-

பூங்கொத்துக்களோடு, கனிகளையும் உடையனவாகிய சோலைகள் சூழ்ந்த திருக்கயிலாயத்தை உறைவிடமாகக் கொண்டவனே, உன்னை உணரும்போது உன் ஒப்பற்ற நிலையை உருவந்தோன்றக் காட்டமாட்டாய்; அடையுமிடத்து அரிய அமிர்தத்தையே ஒத்திருக்குமாதலால் உனது தன்மைகள் இனியனவாயிராநின்றன.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

(46) நின்னியல்பை யாரே அறிவார், நினையுங்கால்!
மன்னியசீர்க் காளத்தி மன்னவனே! - நின்னில்
வெளிப்படுவ ஏழுலகும் மீண்டே ஒருகால்
ஒளிப்பதுவுமா னால்; உரை.

விளக்க உரை:-

நிலையான சிறப்பினையுடைய திருக்காளத்தி வேந்தனே, ஏழு உலகங்களும் உன்னிடத்திலிருந்து தோன்றுவதும், மீண்டும் ஒரு காலத்தில் ஒடுங்குவதுமானால் உன் இயல்பை நினைக்குமிடத்து அறிய வல்லார் யாவரே? சொல்லுவாய்.

(47) உரையும் பொருளும், உடலும் உயிரும்,
விரையும் மலரும்போல்; விம்மிப் - புரையின்றி
சென்றவா றெங்கும் திருக்கயிலை எம்பெருமான்
நின்றவா றெங்கும் நிறைந்து.

விளக்க உரை:-

உயர்ந்த திருக்கயிலாய எம்பெருமானே, சொல்லும் பொருளும் போலவும், உடம்பும் உயிரும் போலவும், மணமும் மலரும் போலவும், குற்றமின்றி எல்லா உலகங்களிலும் நீங்கள் பரிபூர்ணமாக வியாபித்து நிலைபெற்று நின்றிருத்தலில் என்ன ஆச்சரியம் உள்ளது.

(48) நிறைந்தெங்கும் நீயேயாய் நின்றாலும், ஒன்றின்
மறைந்த புலன்காண வாராய்; - சிறந்த
கணியாகும் தண்சாரற் காளத்தி ஆள்வாய்;
பணியாயால்; என்முன் பரிசு.

விளக்க உரை:-

உயர்ந்த வேங்கை மரங்களையுடைய, குளிர்ந்த சாரலையுடைய திருக்காளத்தி மலையையாள்பவனே, என்னெதிரே உனது உண்மைத் தன்மையோடு காட்சி தராமல், எல்லாவிடத்திலும் நீயே நிறைந்து நின்றாலும், ஒரு பொருளில் மறைந்து என் ஐம்புலங்களாலும் காணும்படி எழுந்தருளுவாய்.

உடலில் உயரானது எங்கும் நிறைந்து நிற்பினும், அது ஐம்பொறியில் ஒன்றிற்கும் புலனாகாது மறைந்து நிற்றல்போல, எல்லாப் பொருள்களிலும் நீயே நிறைந்து நிற்பினும் நீ ஐம்பொறிகளில் ஒன்றிற்கும் புலனாகாதே மறைந்து நிற்கின்றாய்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

உன்னைக் கருவியின் வழியாக நினைக்க முடியாமல் அருள் வழியாக நினைத்தால் காணப்படுவாய் என்பதாகும்.

(49) பரிசறியேன்; பற்றிலேன்; கற்றிலேன்; முற்றும்
கரியுரியாய் பாதமே கண்டாய்; - திரியும்
புரம்மாளச் செற்றவனே! பொற்கயிலை மன்னும்
பரமா! அடியேற்குப் பற்று.

விளக்க உரை:-

ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற முப்புரங்களும் அழியும்படி கோபித்தவனே, அழகிய கயிலாயமலையின் கண்ணே நிலைபெற்ற மேலோனே, உன் தன்மை முழுவதும் அறிந்திலேன், பற்று முழுவதும் அறிந்திலேன், அறிவு பயக்கும் நூல்களை முழுதும் கற்றேனில்லை, ஆயினும் அடியேனுக்குப் பற்றுவது யானைத் தோலையுடையையாகிய உன் திருவடியே ஆம்.

(50) பற்றாவான் எவ்வுயிர்க்கும் எந்தை பசுபதியே;
முற்றாவெண் திங்கள் முளைசூடி; - வற்றாவாம்
கங்கைசேர் செஞ்சடையான்; காளத்தி யுள்நின்ற
மங்கைசேர் பாகத்து மன்.

விளக்க உரை:-

எமது தந்தையும், பசுபதியும், முதிராத வெள்ளிய இளம்பிறையைத் தரித்தவனும், வற்றாத நீரினையுடைய கங்காநதி தங்கிய சிவந்த சடையையுடையவனும், திருக்காளத்தியில் நிலைபெற்றிருக்கின்ற உமாதேவியைத் தன் இடபாகத்திலுடைய இறைவனுமாகிய சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் பற்றாயிருப்பவன்.

பசுபதி என்பதற்கு எல்லா உயிர்களுக்கும் தலைவன் என்பது பொருள். இச்சிறப்புப் பெயர் சிவன் ஒருவனுக்கே உரியதாதலை நோக்குக.

(51) மன்னா! கயிலாயா! மாமுத்தம், மாணிக்கம்
பொன்னா மாக்கொண்டு பூணாதே - எந்நாளும்
மின்செய்வார்செஞ்சடையாய்!வெள்ளெலும்புபூண்கின்ற(து)
என்செய்வான்? எந்தாய்! இயம்பு.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

விளக்க உரை:-

மன்னவனே, திருகயிலாயமலையையுடையவனே, எமது தந்தையே, ஒளி செய்கின்ற நீண்ட செஞ்சடையையுடையவனே, அழகிய முத்து, மாணிக்கம், பொன் என்பவனவற்றால் செய்யப்பட்ட மாலையை அணியாமல், எக்காலத்திலும் வெண்மையாகிய எலும்புகளைக் கொண்ட மாலைகளை அணிவது எதனால்? நீ சொல்வாயாக.

(52) இயம்பாய்; மடநெஞ்சே! ஏனோர்பால் என்ன
பயன்பார்த்துப் பற்றுவான் உற்றாய்? - புயம்பாம்பால்
ஆர்த்தானே! காளத்தி அம்மானே என்றென்றே
ஏத்தாதே வாளா இருந்து.

விளக்க உரை:-

அறியாமையையுடைய மனமே, திருத்தோள்களைப் பாம்புகளைக் கொண்டு கட்டியவனே, திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கின்ற எமது தந்தையே எனப் பலமுறை புகழ்ந்து துதிக்காமலே சும்மா வீணாகயிருந்து, பிற தேவர்களிடத்தில் என்ன பயன் இருப்பதாகக் கண்டு அவர்களைப் பற்றத் தொடங்கினை? நீ சொல்வாயாக.

(53) இருந்தவா காணீர்; இதுவென்ன மாயம்!
அருந்தண் கயிலாயத் தண்ணல் - வருந்திப்போய்த்
தானாளும் பிச்சை புகும்போலும்! தன் அடியார்
வானாள, மண்ணாள வைத்து.

விளக்க உரை:-

அருமையான குளிர்ச்சியுடைய கயிலாயங்கிரியினையுடைய பெரியோன் தன் அடியார்களை அவர்களது தவத்திற்கு ஏற்றவாறு விண்ணுலகையும், மண்ணுலகையும் ஆளவைத்து, தான் மட்டிலும் நாள்தோறும் வருந்திச்சென்று பிச்சையெடுப்பான். இச்செய்தியிலிருந்த விதத்தைப் பாருங்கள். இது என்ன மாயை.

"வேண்டுவார் வேண்டும் பயனை வழங்குபவன் பிச்சை புகுகின்றான்" என்றால் அஃது அதிசயமேயாயினும், ஊன்றி நோக்கின் அது தன்பொருட்டாகாது பிறர் பொருட்டாய் இயற்கையாய் விடும் என்பது கருத்து.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

(54) வைத்த இருநிதியே, என்னுடைய வாழ்முதலே,
நித்திலமே, காளத்தி நீள்சுடரே - மொய்த்தொளிசேர்
அக்காலத் தாசை அடிநாயேன்; காணுங்கால்
எக்காலத் தெப்பிறவி யான்.

விளக்க உரை:-

எம்பொருட்டுச் சேமித்துவைத்த நிதியே, என் உயர் வாழ்க்கைக்கு முதல் காரணமே, முத்தே, திருக்காளத்தியில் குடிகொண்டுள்ள பரஞ்சோதியே, மிகுதியாகிய மெய்ஞ்ஞான ஒளிபொருந்திய காலத்தில் பொன் போன்ற உன் திருவடியை தரிசித்துக் காணுமிடத்து எனக்கு எக்காலத்தில் எந்தப் பிறவியையுடையவனாவேன். அக்காலமே எனக்கு ஒளிமிகுந்த காலமாகும்.

(55) யானென்றும் தானென்(று) இரண்டில்லை என்பதனை
யானென்றுங் கண்டிப்ப னானாலும் - தேனுண்(டு)
அளிகள்தாம் பாடும் அகன்கயிலை மேயான்
தெளிகொடான், மாயங்கள் செய்து.

விளக்க உரை:-

நான் என்றும் நீ என்றும் இரண்டில்லை என்பதை நான் என்றும் கொண்டிருப்பேனாயினும், வண்டுகள் பூந்தேனைப் பருகிப் படுதற்குரிய விசாலமாகிய திருக்கயிலாயத்தில் எழுந்தருளி யிருப்பவனே, மாயங்களைச் செய்து தெளிவை அருள் செய்யான்.

"தானென்று" என்பதிலும் "யாமென்றும்" என்பதிற்போல எண்ணும்மை விரிக்க, இரண்டு இல்லை (வேறு வேறாய்ப் பிரிந்து நிற்றல் இல்லை) 'உடலும் உயிரும் போல் இருவரும் ஒன்றியே உள்ளோம்' என்றபடி. இவ்வாறு நாங்கள் இருவரும் ஒன்றியிருப்பினும் அவர் என்னோடு இருக்கும் இருப்பினை யான் உணராதபடி அவன் எனது அறிவை மறைத்தல் செய்கின்றான் என்பது பிற்கூற்றின் பொருள். மறைத்தல் "இரண்டில்லை" என்பது கலைஞானத்தால் உணர முடிகின்றது. அவ்வுணர்வு பேதைப்பெண் காம நூற்பொருளை உணர்வது போலன்றி அனுபவ உணர்வு அன்றாகலானும், அனுபவ உணர்வு அவன் அருளவே வரும். "இரண்டில்லை என்பதனை யான் என்றும் கண்டிருப்பன். ஆனாலும், கயிலை மேயான் மாயங்கள் செய்து தெளிகொடான்" என்றார். எனவே "கணடிருப்பன்" என்றது கலைஞானத்தையும்,

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

"தெளி" என்றது அனுபவ ஞானத்தையும் ஆயின. இறுதியில் 'யான் செய்வது என்' என்னும் குறிப்பெச்சம் வருவிக்க.

தெளிவித்தலே இறைவனுக்கு இயல்பாவதன்றி மறைத்தல் அவனுக்கு இயல்பன்று ஆயினும், உடல் நலத்தையே செய்கின்ற மருத்துவன் கழலையைப் போக்கக் கருவியாற்கீறி அழ வைப்பது போல, அவன் (இறைவன்) ஆணவத்தை மெலிவித்தற்கு அதனது மறைக்கும் ஆற்றலைச் செயற்படுத்துதலையே, அவனே மறைத்தலைச் செய்வதாக நூல்கள் கூறும். அவனது ஆற்றல் (சக்தி) ஆணவம் முதலிய மலங்களைச் செயற்படுத்தி மறைப்பினை உண்டாக்கும் பொழுது, 'திரோதான சத்தி' என்றும், மலம் நீங்கியபின் தன்மைக்காட்டியருளும் பொழுது 'அருட் சத்தி' என்றும் பெயர் பெறும். இரண்டும் செயலால் வேறாவன அல்லது பொருளால் வேறல்ல; ஒன்றேயாம்; இரண்டும் கருணையேயன்றி, எதுவும் கொடிதன்று. திரோதான சத்தி மறக் கருணை, அருட் சத்தி, அறக்கருணை, மறக்கருணாவது, செயலால் வன்கண்மையுடையது போன்று, பயனால் நலம் செய்வது; அறக்கருணையாவது செயல், பயன் இரண்டினாலும் இனிதாவது.

(56) மாயங்கள் செய்து ஐவர் சொன்ன வழிநின்று,
காயங்கொண் டாடல் கணக்கன்று, - காயமே
நிற்பதன் றாதலால் காளத்தி நின்மலன்சீர்
கற்பதே கண்டீர் கணக்கு.

விளக்க உரை:-

நல்லவர்போல் காட்டித் தீமைகள் செய்து, பஞ்சேந்திரியங்கள் சொன்ன வழியில்நின்று உடம்பையே பாராட்டுதல் நல்ல நெறியன்று, உடம்பு நிலையானது இல்லையாதலால் திருக்காளத்தியிலெழுந்தருளியிருக்கின்ற நிர்மலனாகிய சிவபெருமானது பெருமையைக் கற்றலே நல்ல வழக்கமாகும்.

(57) கணக்கிட்டுக் கொண்டிருந்து காலனார் நம்மை
வணக்கி வலைப்படா முன்னம், - பிணக்கின்றிக்
காலத்தால், நெஞ்சே, கயிலாயம் மேவியநற்
சூலத்தான் பாதம் தொழு.

விளக்க உரை:-

கூற்றுவனார் நம்வாழ்நாளை எண்ணிக் கொண்டேயிருந்து அது முடிந்தவுடன் நம்மை அடக்குதலால், நான் துன்பப்படுதற்கு

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்பே மனமே மாறுபாடில்லாமல் எக்காலத்திலும் திருக் கயிலாயத்திலெழுந்தருளியிருக்கின்ற சூலாயுதத்தையுடைய சிவபெருமானது நன்மை பயக்கும் திருவடியை வணங்கு என்பதாகும்.

நல்பாதம் என்றது தம் அன்பர் பிறவிக்கடலைக் கடந்து முத்திக்கரையை அடைய உதவும் மரக்கலமாய் இருத்தலாகிய நன்மையுள்ள திருவடி என்றபடி.

(58) தொழுவாள்; பெறாளே; தோள்வளையும்; தோற்றாள்
மழுவாளன் காளத்தி வாழ்த்தி - எழுவாள்;
நறுமா மலர்க்கொன்றை நம்முன்னே நாளைப்
பெறுமாறு காணீர் என் பெண்.

விளக்க உரை:-

எனது பெண்ணானவள், மழுவாயுதத்தையுடையவராகிய சிவபெருமானது திருக்காளத்தியைத் துதித்து, தன் கைவளையையும் இழந்தவளாகி நின்று வணங்கி நின்றாள், மீண்டும் அவ்விழந்த வளையைப் பெறுதலேயின்றி, நாளையே நம் கண்ணுக்கெதிரில் நறுமணமுள்ள கொன்றை மலர் மாலையையும் பெறும் விதத்தைப் பாருங்கள்.

(59) பெண்ணின்(று) அயலார்முன் பேதை; பிறைசூடி,
கண்நின்ற நெற்றிக் கயிலைக்கோன் - உண்ணின்ற
காமந்தான் மீதூர நைவாட்குன் கார்க்கொன்றைத்
தாமம்தா, மற்றிவளைச் சார்ந்து.

விளக்க உரை:-

பிறையையணிந்தவனே, கண் நிலைபெற்ற நெற்றியையுடைய திருக்கயிலை வேந்தனே, இப்பொழுது என் பேதைப்பெண்ணானவள் அயலாருக்கெதிரே தன் மனத்தின் கண்ணதாகிய காமம் அதிகரிக்க நைபவள் பொருட்டு இவளைக்கூடி உனது பெருமையுள்ள கொன்றை மலர் மாலையைத் தந்தருள்.

(60) சார்ந்தாரை எவ்விடத்தும் காப்பனவும் சார்ந்தன்பு
கூர்ந்தார்க்கு முத்தி கொடுப்பனவும், - கூர்ந்துள்ளே
மூளத் தியானிப்பார் முன்வந்து நிற்பனவும்
காளத்தி யார்தம் கழல்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

விளக்க உரை:-

உம்மைச் சார்ந்தவரை எந்தவிடத்திலும் காத்தருள்வனவும், சார்ந்து அன்பு மிகுந்தவர்க்கு முத்தியைத் தந்தருள்வனவும், மிகுதியாய் மனதில் பற்றும்படி தியானிப்பவர்களுக்கெதிரில் வந்து நின்றருள்வனவும், விரும்பி - திருக்காளத்தியையுடையவராகிய சிவபெருமானாரது திருவடிகளை வணங்க வேண்டும்.

(61) தங்கழல்கள் ஆர்ப்ப, விளக்குச், சலன் சலன் என்(று)
அங்கழல்கள் ஆர்ப்ப, அனலேந்திப் - பொங்கலத்(து)
ஆர்த்தா டரவும், அகன்கயிலை மேயாய்நீ
கூத்தாடல் மேவியவா, கூறு.

விளக்க உரை:-

திருக்கயிலையில் எழுந்தருளியவனே, உமது திருக்கழல்கள் ஒலி செய்யவும் விளக்குச் சுடர் போலச் சலன் சலன் என்று நெருப்பானது ஒலிக்கவும், திருக்கரத்தில் நெருப்பை ஏந்திக்கொண்டு விளங்குகின்ற திருமார்பில் படமெடுத்து ஆடுகின்ற பாம்பை ஒன்றோடொன்று பொருந்தி ஆரமாகப்பூண்டு நீ கூத்தாடுதலுக்குப் பொருந்திய காரணங்களைக் கூறவேண்டும்.

அரசர் முதலியோரை மகிழ்வித்துப் பொருளும், புகழும் பெற வேண்டுவார் செய்யும் செயலை நீ மேற்கொண்டது ஏன்? அதனை நீ கூறு என்பதாம். 'உனது இயல்புகளைக் கூத்துச் செய்கைகளால் உணர்த்திப் பக்குவிகளை ஆட்கொள்ளவே மேற்கொண்டாய் போலும்' என்பது குறிப்பு.

(62) கூறாய்நின் பொன்வாயால்; கோலச் சிறுகிளியே
வேறாக வந்திருந்து மெல்லெனவே - நீல்தாவும்
மஞ்சடையும் நீள்குடுமி வாளருவிக் காளத்திச்
செஞ்சடைஎம் ஈசன் திறம்.

விளக்க உரை:-

அழகாகிய சிறுகிளியே, நீலநிறமுடைய மேகங்கள் வந்துபடிகின்ற நீண்ட சிகரங்களையுடைய, ஒளியுள்ள அருவி ஆறுகள் பெருகுகின்ற திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கின்ற செஞ்சடையுடைய எம் ஈசனது மங்கள குணங்களை வேறாகப் பிரித்து மெதுவாக உன் அழகிய வாயினால் சொல்வாயாக.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

காளத்திப் பெருமான்மேல் காதல் கொண்ட ஒருத்தி தான் சொல்வதை இறைவன் கேட்டு மறுமொழி கூறாததால், தான் வளர்க்கும் கிளியை நோக்கிக் கூறி இரங்கியது. 'ஈசன் வராவிடினும் அவன் குணத்தை பிறர் சொல்லக் கேட்பின் ஆற்றுதல் உண்டாகும் என்பது கருத்து. இறைவனிடத்தில் பேரன்பு கொண்டவர்களும் அஃறிணைப் பொருள்களை நோக்கி இவ்வாறு கூறுதல் உண்டு.

(63) ஈசன் திறமே நினைந்துருகும் எம்மைப்போல்
மாசில் நிறத்த மடக்குருகே, - கூசி
இருத்தியாய், நீயும் இருங்கயிலை மேயாற்(கு)
அருத்தியாய்க் காமுற்றா யாம்.

விளக்க உரை:-

குற்றமில்லாத நிறத்தையுடைய இளமையாகிய நாரையே! ஈசனது மங்கள குணங்களையே நினைத்துருகின்ற எங்களைப்போல ஒடுங்கியிருக்கின்றாய் ஆதலால் எம்மைப்போல் நீயும் பெரிய கயிலாய மலையில் எழுந்தருளியிருப்பவராகிய சிவபெருமானுக்கு ஆசையாகி மையல் கொண்டனையாதல் வேண்டும்.

(64) காமுற்றா யாமன்றே காளத்தி யான்கழற்கே!
யாமுற்ற துற்றாய்; இருங்கடலே, - யாம்த்து
ஞாலத் துயிரெல்லாம் கண்துஞ்சு நள்ளிருள்கூர்
காலத்தும் துஞ்சாதுன் கண்.

விளக்க உரை:-

பெரிய கடலே, இரவில் உலகிலுள்ள எல்லாவுயிர்களும் கண்ணுறங்கின்ற இருள் நிறைந்த காலத்திலும் உனது கண்ணுறங்காது, யாம் அடைந்த நிலையை நீயும் அடைந்திருக்கின்றனை. ஆதலால் திருக்காளத்தி எம்பெருமான் திருவடிக்கே மையல் கொண்டனையாதல் வேண்டும்.

(65) கண்ணும் கருத்துங் கயிலாய ரேஎமக்கென்(று)
எண்ணி யிருப்பன்யான் எப்பொழுதும்; - நண்ணும்
பொறியா டரவசைத்த பூதப் படையார்
அறியார்கொல்! நெஞ்சே, அவர்.

விளக்க உரை:-

மனமே, எமக்குக் கண்ணுங்கருத்துமாயிருப்பவர் திருக்கயிலாய நாதரேயென்று நான் எக்காலத்தும் நினைத்திருப்பேன். இதனைப்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

புள்ளிகள் பொருந்தியபடமெடுத்து ஆடுகின்ற பாம்பைத் திருவரை திருக்கர முதலிய விடங்களிற்கட்டின பூதப்படையையுடையராகிய அந்தச் சிவபெருமானார் அறிந்திலரோ.

(66) நெஞ்சே, அவர்கண்டாய், நேரே, நினைவாரை
அஞ்சேல்என் றாட்கொண் டருள்செய்வார்; - நஞ்சேயும்
கண்டத்தார், காளத்தி ஆள்வார் கழல்கண்டீர்
அண்டத்தார் சூடும் அவர்.

விளக்க உரை:-

மனமே, தம்மை நினைப்பவர்களை அஞ்சவேண்டாமென்று அடிமைகொண்டு அருள் புரிபவர், அந்த சிவபெருமானாரே. விண்ணுலகிலுள்ள தேவர் சிரசில் அணிகின்ற மலராவது, நஞ்சக்கறை பொருந்திய திருமிடற்றையுடையவர் திருக்காளத்தியாள்வரது திருவடியே என்பதாகும். எனவே மனமே! திருக்காளத்தியாள்வரை யாமும் நினைத்து உய்ய வேண்டும் என்பதாகும்.

தேவரை அணு பக்கமாக நோக்கின் பலராயினும், சம்பு பக்கமாக நோக்கின் சிவன் ஒருவனேயாம் என்பது கருத்து. 'ஒடுக்கக் காலத்து ஒன்றாகி; மறுபடைப்புக் காலத்தில் பலவாகும்' எனவும், அவ்வாறு இருக்கின்றவன் சிவனே எனவும் கூறியவாறு.

(67) அலரோன், நெடுமால், அமரர்கோன், மற்றும்
பலராய்ப் படைத்துக்காத் தாண்டு - புலர்காலத்(து)
ஒன்றாகி மீண்டு பலவாகி நிற்கின்றான்
குன்றாத சீர்க்கயிலைக் கோ.

விளக்க உரை:-

என்றும் அழியாத சிறப்பமைந்த திருக்கயிலாயத்தி லெழுந்தருளியிருக்கின்ற இறைவன், தாமரை மலரையுடையவனாகிய பிரமன், நெடுமால், தேவர்க்கரசனாகிய இந்திரன், மற்றும் பல பெயர்களுள்ளவர்களாகப் படைத்து, காத்தருளி, முடியுங்காலத்தில் ஒருருவாகி மீண்டும் பல உருவங்களாய்த் தோன்றி நிலைபெற்றிருக்கின்றான்.

(68) கோத்த மலர்வாளி கொண்டனங்கன் காளத்திக்
கூத்தன்மேல் அன்று குறித்தெய்யப் - பார்த்தலுமே
பண்பொழியாக் கோபத்தீப் பற்றுதலும் பற்றற்று
வெண்பொடியாய் வீழ்ந்திலனோ வெந்து.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளக்க உரை:-

மன்மதன் வில்லில் தொடுத்த பாணங்களைக் கொண்டு அந்நாளில் திருக்காளத்திக் கூத்தன் மீது குறி வைத்து எய்ய நோக்குதலும், அவரது பண்பு நீங்காத கோபாக்கினி சூழ்ந்த அளவில் அந்த மன்மதன் ஆதரவற்று வெந்து சாம்பலாய் வீழ்ந்தனனல்லனோ.

காமனை வென்றவர் சிவனைத்தவிர வேறு யாரும்மில்லை. சிவனடியார்களும் காமனை வென்றார் எனின், அவர்களும் சிவனது அருளாலே வெல்லுதலின், அவர்கள் வெற்றியும் சிவனின் வெற்றியே யாம் என்க. பண்பு, குற்றம் செய்தாரைத் திருத்தும் குணத்தோடு கூடியதே சிவனது கோபம் என்றபடி.

(69) வெந்திறல்வேல் பார்த்தற் கருள்செய்வான் வேண்டிஓர்
செந்தறுகண் கேழல் திறம்புரிந்து - வந்தருளும்
கானவனாம் கோலமியான் காணக் கயிலாயா
வானவர்தம் கோமானே, வா.

விளக்க உரை:-

திருக்கயிலாயத்திலெழுந்தருளியிருக்கின்ற தேவர் பெருமானே, வெவ்விய வலிமையமைந்த வேற்படையையுடைய அருச்சுனனுக்கு அருள்புரிய விரும்பி, ஒரு சிவந்த அஞ்சாமையையுடைய பன்றியின் விஷயத்தைக் காரணமாகச் செய்து கொண்டு, நீ வந்தருளிய வேடனாகிய திருக்கோலத்தை நான் காண எழுந்தருள வேண்டும். பார்த்தனை கொல்லச் சென்ற பன்றியைக் கொல்லும் முகத்தால் சிவன் அவனோடு போர்புரிந்து திருவிளையாடல் செய்து பாசுபதம் அளித்தார்.

(70) வாமான்தேர் வல்ல வயப்போர் விசயனைப்போல்
தாமார் உலகில் தவமுடையார்! - தாம்யார்க்கும்
தாண்டற் கரியராய்க் காளத்தி யாள்வாரைத்
தீண்டத்தான் பெற்றமையாற் சென்று.

விளக்க உரை:-

தாம் எவருக்கும் காணுவதற்கு அருமையானவராகி, திருக்காளத்தியாள்வரைச் சென்று தொடப்பெற்றமையால், விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டப்பெற்ற தேர் நடத்துததில் வல்ல, வெற்றியையுடைய போர்செய்த அருச்சுனனைப் போல இவ்வுலகத்தில் தவப்பேறு உடையவர் வேறுயாவர்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

இங்கு தீண்டுதல் என்பது "பார்த்தன் சிவபெருமானோடு மற்போர் தொடங்கிக் கட்டிப்புரண்டான்" என்பதாகும். சிவபெருமான் பலருக்கு அருள்புரியினும் மெய்தீண்டல் மிக அரிதாம். எனவே அருச்சுனன் செய்த தவம் மிகமிகப் பெரியதாகும்.

(71) சென்றிறைஞ்சும் வானோர்தம் சிந்தைக்கும் சேயராய்,
என்றும் அடியார்க்கு முன்னிற்பர்; - நன்று,
கனியவாம் சோலை, கயிலாயம் மேயார்;
இனியவா பத்தர்க் கிவர்.

விளக்க உரை:-

தாம் இருக்கும் இடந்தேடிப்போய் வணங்குகின்ற தேவர்களுடைய மனத்துக்கும் எட்டாதவராயினும், எக்காலத்திலும் தம் அடியவருக்கு எதிரில் அவர்கள் இருக்குமிடத்தில் எழுந்தருளிப் பிரத்தியக்ஷமாகி நிற்பராதலால் இனியவாகிய கனிகளைத் தருவனவாகிய சோலைகள் சூழ்ந்த திருக்கயிலாயத்தில் எழுந்தருளியிருக்கின்ற இவர் தம் அடியார்க்கு இனியவராவர்.

(72) இவரே முதல்தேவர்; எல்லார்க்கும் மிக்கார்;
இவர்அல்லர் என்றிருக்க வேண்டா; - சுவராதே
காதலித்தின் றேத்துதிரேல், காளத்தி யாள்வார்நீர்
ஆதரித்த தெய்வமே யாம்.

விளக்க உரை:-

எல்லாத் தேவர்களுக்கும் இவரே முதற்கடவுள், எல்லோருக்கும் மேலானவரும் இவரே, எனவே இதை இவரல்லர் என நினைக்க வேண்டாம். ஆகவே கவலைப்படாமல் இப்பொழுது விரும்பித் துதிப்பீராயின் திருக்காளத்தியாள்வார் உங்கள் விருப்பப்படி ஆதரித்த தெய்வமாகயிருப்பார்.

திருக்காளத்தியாள்வார் ஒருவராலேயே எல்லாப் பயன்களையும் தருதல் உண்மையானதால், அனைத்துத் தெய்வங்களும் தனித்தனியே தரும் பயன்களை எல்லாம் இவர் ஒருவரே தர முடியுமாதலால், அனைத்துத் தெய்வங்களும் இவர் ஒருவரேயாவர் என்றார். மேலும் இவர் விரும்புவார் விரும்பும்படி வெளிப்பட்டுப் பயனளிப்போராதலால் "காளத்தியாள்வார் நீர் ஆதரித்தத் தெய்வமேயாம்" என்றார்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

(73) ஆம்என்று 'நாளை உள' என்று வாழ்விலே
தாம்இன்று வீழ்தல் தவமன்று; - யாமென்றும்
இம்மாய வாழ்வினையே பேணா(து) இருங்கயிலை
அம்மானைச் சேர்வ தறிவு.

விளக்க உரை:-

நமக்கு இனிமையானது என்றும், நாளை நமக்குள்ளன என்றும், இந்தப் பிரபஞ்ச வாழ்க்கையில் இப்பொழுது வீழ்ந்து கிடத்தல் தவமல்ல. நாம் எப்பொழுதும் இந்தப் பொய்யான வாழ்க்கையை விரும்பாமல் பெரிய திருக்கயிலாயத்திலெழுந் தருளியிருக்கின்ற எமது தந்தையாகிய சிவபெருமானை அடைவதே பேரறிவாவதாகும்.

(74) அறியாம லேனும், அறிந்தேனும் செய்து
செறிகின்ற தீவினைகள் எல்லாம் - நெறிநின்று
நன்முகில்சேர் காளத்தி நாதன் அடிபணிந்து
பொன்முகலி ஆடுதலும் போம்.

விளக்க உரை:-

நன்னெறியில் நின்று, உலகத்திற்கு நன்மை செய்கின்ற மேகங்கள் படிகின்ற திருக்காளத்தியிலெழுந்தருளி இருக்கின்ற இறைவன்து திருவடிகளை வணங்கி, பொன்முகரியாற்றில் மூழ்குதலால், அறியாமலாயினும் அறிந்தாயினும் செய்த பாவங்களெல்லாம் அழிந்தொழியும் என்பதேயாகும்.

(75) போகின்ற மாமுகிலே, பொற்கயிலை வெற்பளவும்
ஏகின் றெமக்காக; எம்பெருமான் - ஏகினால்
உண்ணப் படாநஞ்சம் உண்டாற்கென் உள்ளுறுநோய்
விண்ணப்பஞ் செய்கண்டாய் வேறு.

விளக்க உரை:-

ஆகாயத்தில் செல்லும் அழகிய மேகமே, இப்பொழுது எம்பெருமானது அழகிய திருக்கயிலை மலையளவும் எங்கள் சார்பாகச் செல்ல வேண்டும். அவ்வாறு சென்றால், யாராலும் பருக முடியாத நஞ்சைப் பருகின சிவபெருமானிடத்தில் என் மனதை விட்டு நீங்காத வீரகநோயின் தன்மையைத் தனியேயிருந்து விண்ணப்பம் செய்யக்கடவை.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

எனது நோய்பற்றிப் பிறருக்கு வெளிப்படுத்தலாகாது, அது மறைத்து வைக்கப்படுவதன்று. எனவே இது குறித்துச் சிவபெருமானிடத்துத் 'தனியாகச் சிறப்பெடுத்து விண்ணப்பம் செய்' என்றபடி.

(76) வேறேயும் காக்கத் தகுவேனே; மெல்லியலாள்
கூறேயும் காளத்திக் கொற்றவனே! - ஏறேறும்
அன்பா அடியேற்(கு) அருளா(து) ஒழிகின்ற(து)
என்பாவ மேயன்றோ! இன்று.

விளக்க உரை:-

அழகிய மெல்லியலையுடையவளாகிய உமாதேவியாரை, ஒரு பாகத்தில் பொருந்தப்பெற்ற திருக்காளத்தி வேந்தனே, அன்பருக்கு அன்பனே, வேறிடத்தில் வைத்தாயினும் காக்கத் தகுதியுடையேனாகிய அடியேனுக்கு நீ அருளாதொழிதற்குக் காரணம் இப்பொழுது, என் பாவமேயல்லவா.

(77) இன்று தொடங்கிப் பணிசெய்வேன் யானுனக்(கு)
என்றும், இளமதியே; எம்பெருமான் - என்றும்என்
னுட்காதல் உண்மை, உயிர்கயிலை மேயாற்குத்
தீட்காதே விண்ணப்பஞ் செய்.

விளக்க உரை:-

இளஞ்சந்திரனே, நான் இன்று தொட்டு எக்காலத்தும் உனக்குப் பணி செய்வேன். எம்பெருமானாகிய உயர்ந்த திருக் கயிலையிலெழுந்தருளியிருப்பவனிடத்தில் என்றும் என் மனத்திலுள்ள உண்மையான காதலை அஞ்சாமல் விண்ணப்பம் பண்ணக்கடவை.

(78) செய்ய சடைமுடிஎன் செல்வனையான் கண்டெனது
கையறவும், உள்மெலிவும் யான்காட்டப் - பையவே
காரெறு பூஞ்சோலைக் காளத்தி யாள்வார்தம்
போரேறே இத்தெருவே போது.

விளக்க உரை:-

மேகங்களேறித் தவழ்கின்ற, நெருங்கிய மலர்ச் சோலைகளையுடைய திருக்காளத்தியாளவ்ரது போரில் வல்ல இடபமே, செவந்த சடாமகுடத்தையுடைய என் சீமானை நான் பார்த்து என் துன்பத்தையும், என் மனச் சோர்வையும் சொல்லிச்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

காட்டிக்கொள்ளும்படி இத்தெருவின்கண்ணே மெல்லெனவே செல்வாயாக.

(79) போது நெறியனவே பேசி, நின் பொன்வாயால்
ஊதத் தருவன்; ஒளிவண்டே, - காதலால்
கண்டார் வணங்கும் கயிலாயத் தெம்பெருமான்
வண்தார்மோந்(து) என்குழற்கே வா.

விளக்க உரை:-

ஒளியையுடைய வண்டே பேரரும்புகளை நெறியென்று சொல்லி, உன் அழகிய வாயினால் ஊதும்படி இடந்தருவன். ஆசையால் கண்டவர் பணிகின்ற திருக்கயிலாயத்து எம்பெருமானது வளவிய கொன்றை மலர்மாலையை மோந்து என் கூந்தலின்கண்ணே கொண்டு வருவாயாக.

(80) வா! வா! மணிவாயால் மாவின் தளிர்கோதிக்
கூவா திருந்த குயிற்பிள்ளாய்! - ஓவாதே;
பூமாம் பொழில்உடுத்த பொன்மதில்சூழ் காளத்திக்
கோமான் வர, ஒருகாற் கூவு.

விளக்க உரை:-

அழகிய வாயினால் மாந்தளிரைக் கோதி, கூவாமலிருந்தகுயில் பிள்ளையே வருக வருக, நீங்காத பொலிவாகிய பூமாஞ்சோலையையுடுத்த பொன்மதில் சூழ்ந்த திருக்காளத்தி வேந்தன் வர ஒருமுறை கூவுவாய்.

(81) கூவுதலும், 'பாற்கடலே சென்றவனைக் கூடுக' என்(று)
ஏவினான் பொற்கயிலை எம்பெருமான்; - மேவியசீர்
அன்பால் புலிக்காலன் பாலன்பால் ஆசையினால்
தன்பால்பால் வேண்டுதலும் தான்.

விளக்க உரை:-

அழகிய திருக்கயிலாயத்தெம்பெருமான் சிறப்புடைய அன்பினால் வியாக்கிர பாதரது புதல்வன், பால் விருப்பத்தால், சிவனிடத்தில் பாலைப் பிரார்த்தித்தவளவில், தான் கூவியழைத்துப் பாற்கடல் வருதலும், அதனை நோக்கி நீ போய் அந்தப் பாலகனையடையக் கடவாயென்றேவினான். வியாக்கிர பாதமுனிவர் மகன் உபமன்னியமுனிவர், பாலகனாக இருந்தபோது பசிக்குப்பால் வேண்டப் பாற்கடலையே அழைத்துக் கொடுத்த

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

கயிலைப் பெருமானது அருளையும், ஆற்றலையும் வியந்து கூறியது கோயிற்புராணம்.

(82) தானே உலகாள்வான்; தான்கண்ட வா, வழக்கம்
ஆனான்மற் றார்இதனை அன்(று) என்பார் - வானோர்
களைகண்டதா னாய்நின்ற காளத்தி யாள்வார்
வளைகொண்டார்; மால்தந்தார்; வந்து.

விளக்க உரை:-

தானே உலகங்களையாள்பவன், தான் கண்ட வண்ணம் வழங்குதலையுடையவன் என்பதை வேறு யார் அல்லவென்று தடுக்க வல்லவர். தேவர்களுக்கும் ஆதாரமாகத் தானாகவே நின்ற திருக்காளத்தியாள்வான் வந்து எமது வளையல்களைக் கவர்ந்து கொண்டு, ஆசையை எமக்குக் கொடுத்தேகினான்.

(83) வந்தோர் அரக்கனார் வண்கயிலை மால்வரையைத்
தந்தோள் வலியினையே தாம்கருதி - அந்தோ!
இடந்தார், இடந்திட் டிடார்க்கீழ் எலிபோற்
கிடந்தார் வலியெலாங் கெட்டு.

விளக்க உரை:-

ஒப்பற்ற அரக்கனாராகிய இராவணனார் வந்து தமது புஜபலத்தையே பெரிதும் மதித்து, வளவிய பெரிய கயிலாய மலையைப் பெயர்த்தார், அவ்வாறு பெயர்த்து எடுக்கும்போது கூண்டில் (பொறியில்) அகப்பட்ட எலியைப் போலத் தம் வலிமையெல்லாம் கெட்டுக் கிடந்தார். ஐயோ இது என்ன மாயம்.

(84) கெட்ட அரக்கரே, வேதியரே, கேளிர்கொல்!
பட்டதுவும் ஓராது பண்டொருநாள் - ஒட்டக்
கலந்தரனார் காளத்தி யாள்வார்மேற் சென்று
சலந்தரனார் பட்டதுவும் தாம்.

விளக்க உரை:-

தான் பட்டபாட்டை ஆராயாமல் முன்னொரு காலத்தில் நெருங்கி, சிவபெருமானாகிய திருக்காளத்தியாள்வார் மீது போர் செய்யப்போய், சலந்தரனார் பட்டபாட்டை, கெட்ட அரக்கரே, பெருமை இழந்த மறையோர்களே நீங்கள் கேட்டிலீர்களோ.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லோரையும் வென்று செருக்கு மிகுதியால் சலசந்தரன் என்ற அசுரன், சிவபெருமானை வெல்லக் கருதி அவர் மேல் போர் செய்யச் சென்ற பொழுது, அவர் மண்ணிற் கீறிய சக்கரத்தை எடுத்து அவன் தலையை அறுத்து அழித்த வரலாற்றைக் கந்தபுராணத்துட் காண்க.

(85) தாம்பட்டது ஒன்றும் அறியார்கொல்! சார்வரே!
காம்பற்ற செந்நெற் கயிலைக்கோன் - பாம்புற்ற
ஆரத்தான் பத்தர்க் கருகணையார் காலனார்!
தூரத்தே போவார் தொழுது.

விளக்க உரை:-

கூற்றுவனார், மூங்கிலிலிருந்து உதிர்ந்த மிக்க செந்நெல் பரவியிருக்கின்ற திருக்கயிலாய மலைக்குத் தலைவரும், பாம்புகளை பொருத்தமான ஆரமாகவுடையவராகிய இறைவனது அன்பர்க்கு அருகில் செல்லாது அவரை வணங்கி, தூரத்தே செல்வார். கூற்றுவனார் அருகிற் சேர்வரோ? சேரமாட்டார் ஏனெனில் முன்னே தாம் பட்டபாட்டைச் சிறிதும் அறிந்திலரோ.

(86) தொழுது, நமனும்தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில்சீர்க் காளத்தி மன்னன் - பழுதிலாப்
பத்தர்களைக் கண்டால், பணிந்தகலப் போமின்கள்
எத்தனையும் சேய்த்தாக என்று.

விளக்க உரை:-

குற்றமில்லாத சிறப்புடைய திருக்காளத்தி வேந்தனது குற்றமில்லாத பத்தர்களைக் கண்டால் அவர்களைப் பணிந்து எவ்வளவு தொலைவிலிருப்பினும் விலகிப் போவீர்களென்று கூற்றுவனார் தன் தூதருக்குச் சொல்லுவான்.

(87) வென்றைந்தும் காமாதி வேரறுத்து, மெல்லவே
ஒன்ற நினைதிரேல், ஒன்றலாம்; - சென்றங்கை
மானுடையான், என்னை உடையான் வடகயிலை
தானுடையான் தன்னுடைய தாள்.

விளக்க உரை:-

ஐம்பொறிகளையும் வென்று, காமம் முதலியவைகளை வேரறுத்து, மெல்லவே உங்கள் மனம் பொருந்த நினைவீராயின், அழகிய திருக்கரத்தில் மானையுடைவன், என்னையும் தமக்கு

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அடிமையாகவுடையவன், வட கயிலாயத்தையுடைவன் சிவனாகிய அவனது திருவடிகளைப் போய்ச் சேரக்கூடும்.

ஐந்தும் வென்று என்பது கண், காது, மூக்கு, வாய், செவி ஆகியவற்றை அடக்குதல். காமத்தை வேரறுத்து என்பது அவா, வெகுளி, இவறன்மை, மயக்கம், செருக்கு, அழுக்காறு என்பனவற்றை வேரறுத்து என்க.

(88) தாளொன்றால் பாதாளம் ஊடுருவத், தண்விசும்பில்,
தாளொன்றால் அண்டம் கடந்துருவித் - தோளொன்றால்,
திக்கனைத்தும்போர்க்கும் திறற்காளி காளத்தி
நக்கனைத்தான் கண்ட நடம்.

விளக்க உரை:-

ஒரு திருவடியால் பாதாளத்தை ஊடுருவிச் செல்லவும், மற்றொரு திருவடியால் குளிர்ந்த ஆகாயத்திலுள்ள உலகங்களையெல்லாம் கடந்துருவி, ஒரு தோளினால் எல்லாத் திக்குகளையும் மூடுகின்ற திருக்காளத்திச் சிவபெருமானுடைய திருநடனத்தை, வலிமையுடைய காளி என்பவள், தான் கண்ட காட்சியிருந்தவாறென்னை.

தாருகன் என்ற அசுரனை அழித்த காளியானவள் செருக்கி உலகத்திற்குத் துன்பம் உண்டாக்க, சிவபெருமான் அவளோடு நடனப்போர் செய்து, அவள் நாணிச்செருக்கொழியச் செய்தான் என்பது புராணம். இந்நடனத்திற்கு "ஊர்த்துவதாண்டவம் என்பது பெயர். அஃதாவது ஒரு காலை ஆகாயம் நோக்கிச் செல்ல உயரத் தூக்கி ஆடிய நடனம். இந்நடனம் திருவாலங்காட்டில் நிகழ்ந்தது" என்பது ஐதீகம்.

(89) நடம்ஆடும் சங்கரன்தாள் நான்முகனும் காணான்;
படம்ஆடும் பாம்பணையான் காணான்; - விடம்மேவும்
காரேறு கண்டன் கயிலாயன் றன்உருவை
யாரே அறிவார் இசைந்து.

விளக்க உரை:-

நடனமாடுகின்ற சிவபெருமானது திருவடியை, சதுர்முகனாகிய பிரமதேவனும், காணவில்லை, படமெடுத்து ஆடுகின்ற சர்ப்பத்தைப் படுக்கையாக உடையவனாகிய திருமாலும் காணவில்லை. அங்ஙனமாக நஞ்சக்கறையையுடைய நீல

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

நிறம்மிகுந்த திருமிடற்றினையுடையவனாகிய திருக்கயிலாய நாதனது திருவுருவத்தைச் சரியாக அறியவல்லார் யாவரே.

(90) இசையும்தன் கோலத்தை யான்காண வேண்டி
வசையில்சீர்க் காளத்தி மன்னன் - அசைவின்றிக்
காட்டுமேல், காட்டிக் கலந்தென்னைத் தன்னோடும்
கூட்டுமேல், கூடலே கூடு.

விளக்க உரை:-

பழியில்லாத சிறப்பினையுடைய திருக்காளத்தி வேந்தன், பொருத்தமான தன் திருக்கோலத்தை நான் காணும்படி விரும்பி அசைவு இல்லாமல் அனுதாபம் காட்டுவானாயின், காட்டி என்னுடன் கலந்து தன்னோடும் கூட்டுமாயின் கூடற்சுழியே நீ சேர் என்று தலைமகள் கூறுவாள்.

திருக்காளத்திப் பெருமான் மீது காதல் கொண்டு ஆற்றாத தலைமகள் ஒருத்தி அவன் முற்றறிவும், பேரருளும் உடையவனாதலின் தன்னைக் காதலித்தார் முன் தான் விரைய வந்து அருள் பண்ணுவான் என்னும் உறுதிப்பாடு உடையளாயாயினும், அதனைக் குறிபார்க்கக் கண்களைமூடி மணலில் வலக்கைச் சுட்டு விரலால் ஒரு வட்டம் வரைந்து காண்போம் எனக்கருதி அங்ஙனம் செய்கின்றாள் எனப் பொருள். வட்டம் குறையின்றியிருந்தால் 'தலைவன் விரைவில் வந்து சேர்வான்' என்பதும், வட்டத்தின் இருமுனைகளும் வேறு வேறாய்ப் போய்விட்டிருப்பின் 'தலைவன் அண்மையில் வாரான்' என்பதும் முடிவுகளாகும். வட்டம் வரைதலைக் 'கூடல் இழைத்தல்' எனக் கூறுவர்.

(91) கூடியிருந்து, பிறர்செய்யுங் குற்றங்கள்
நாடித்தம் குற்றங்கள் நாடாதே - வாடி
வடகயிலை ஏத்தாதே வாழ்ந்திடுவான் வேண்டில்
அடகயில, ஆர்ரமுதை விட்டு.

விளக்க உரை:-

ஒருவரோடொருவர் கலந்திருந்து, பிறர் செய்யுங் குற்றங்களை ஆராய்ந்து, தம் குற்றங்களை ஆராயாமலும், வாட்டமடைந்து, வடதிருக்கயிலாயத்தைத் துதியாமலும், ஒருவர் இன்பவாழ்க்கை வாழ விரும்புவராயின், அவ்விருப்பம் கிடைப்பதற்கரிய அமிர்தத்தை

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

விட்டுவிட்டு இலைகளைத் தின்பதற்கு நிகராகும். இச்செயல் 'கனியிருப்பக் காய் கவர்தல்' என்பதனோடு ஒத்ததாகும். இதனால் இறைவனின் திருவருள் வழி வாராத, இன்பம் இன்பமன்று என்பது கருத்து.

(92) விட்டாவி போக, உடல்கிடந்து வெந்தீயிற்
பட்டாங்கு வேமாறு பார்த்திருந்தும் - ஒட்டாவாம்
கள்அலைக்கும் பூஞ்சோலைக் காளத்தி யுள்நின்ற
வள்ளலைச்சென் றேத்தா மனம்.

விளக்க உரை:-

உயிரானது விட்டுவிலக, உடம்பானது விழுந்து கொடிய தீயில் அகப்பட்டு மயானத்தில் வேகின்ற விதத்தைப் பார்த்திருந்தும், தேனையுடைய மலர்ச்சோலைகள் நிறைந்த திருக்காளத்தியில் நிலைபெற்றிருக்கின்ற சிவபெருமானை என் மனமாவது சென்று துதிக்கவொட்டாது.

எல்லாச் செல்வங்களினுஞ் சிறந்த முத்திச் செல்வத்தை வரையாது கொடுத்தருளுதலால் சிவபெருமானை 'வள்ளல்' என்றார்.

(93) மனம்முற்றும் மையலாய், மாதரார், தங்கள்
கனம்உற்றும் காமத்தே வீழ்வர், - புனமுற்(று)
இனக்குறவர் ஏத்தும் இருங்கயிலை மேயான்
தனக்குறவு செய்கலா தார்.

விளக்க உரை:-

தினைப்புனங்களையுடைய குறவர் இனத்தார் வணங்குகின்ற திருக்கயிலாயத்தைச் சேர்ந்திருப்பவராகிய சிவபெருமானிடத்து, அன்பு செலுத்தி வணங்காதவர், இழிந்து, மனம் முழுவதும் மயக்கங்கொண்டவராய் மாதர்களுடைய தவறான காமக்கடலில் விழுந்து அழுந்துவர். கல்லாத மக்களாயினும் குறவர்கள் முன்னைத் தவத்தால் கயிலையருகில் வாழப் பெற்றுச் சிவனை ஏத்துகின்றனர். 'கற்றறிந்து நல்லொழுக்கம் உடையோம்' என செருக்குவார் சிவனை வணங்காது காமத்தே வீழ்கின்றார் என்பது கருத்து.

(94) தாழ்ந்த சடையும், தவளத் திருநீறும்
சூழ்ந்த புலிஅதளும், சூழ்அரவும், - சேர்ந்து
நொருக்கி, வானோர் இறைஞ்சும் காளத்தி ஆள்வார்க்(கு)
இருக்கும், மாகோலங்கள் ஏற்று.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளக்க உரை:-

தேவர்கள் ஒன்றுகூடி வணங்குகின்ற திருக்காளத்தி யாள்வாருக்கு ஏற்றது, பெரிய மாகோலங்களும், நீண்ட சடையும், வெண்ணிறத் திருநீறும், திருவரையிற் சூழ உடுக்கப்பட்ட புலித்தோலும், அத்திருவரையில் கச்சையாகச் சுற்றிக் கட்டப்பட்ட பாம்புமேயாம்.

(95) ஏற்றின் மணியே அமையாதோ! ஈர்ஞ்சடைமேல்
வீற்றிருந்த வெண்மதியும் வேண்டுமோ! - ஆற்றருவி
கன்மேற்பட் டார்க்கும் கவிலாயத் தெம்பெருமான்
என்மேற் படைவிடுப்பாற்(கு) ஈங்கு.

விளக்க உரை:-

ஆற்றருவி கல்மேல்பட்டு ஒலிக்கின்ற திருக்கயிலாய மலையில் எழுந்த ஒளியிருக்கின்ற எம்பெருமான் சிவன் என்மீது படையெடுக்க, தனது இடபத்தின் கழுத்திற் கட்டிய மணியே போதாதோ, குளிர்ந்த சடையின்மீது வீற்றிருக்கின்ற (வெண்ணிற) வெள்ளிய சந்திரனும் வேண்டுமோ.

பகலில் வெளியே சென்று மேய்கின்ற எருதுகள் மாலையில் ஊரையடையும்போது அதன் கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணிகள் ஒலிக்கும். அவ்வொலி இராக்காலத்தின் வருகையை அறிவிப்பதால், தலைவரைப் பிரிந்து தனித்திருக்கும் தலைவிக்கு அது வருத்தத்தை உண்டாக்கும். ஆகவே அந்த எருதுகள் கட்டியுள்ள மணிகள் தலைவிக்கு வெறுப்பை உண்டாக்கும். அம்முறைமை பற்றி வீதியில் திருவுலாப் போகின்ற சிவபெருமானது இடபத்தின் கழுத்தில் ஒலிக்கும் மணியையும், அவர்மேற்கொண்ட காதலால் வருந்தும் தலைவி வெறுத்துக் கூறினாள். அவளது வெறுப்பானது மணியைவிட வெண்மதியில் அதிகமாக இருந்தது. அவளைக் கொலை செய்ய மணியொன்றே போதுமானது, வெண்பிறை வேண்டாம் என்கிறாள்.

(96) 'ஈங்கேவா' என்றருளி, என் மனத்தில் எப்பொழுதும்
நீங்காமல், நீவந்து நின்றாலும் - தீங்கை
அடுகின்ற காளத்தி ஆள்வாய், நான் நல்ல
பணிகின்ற வண்ணம் பணி.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

விளக்க உரை:-

தீமைகளைச் சிதைக்கின்ற திருக்காளத்தியையாள்பவனே, என்னை இங்கு வாவென்று திருவாய் மலர்ந்தருளி என் மனத்தில் எப்பொழுதும் நீங்காமல் நீ வந்து நிலைபெற்று இருப்பினும், உன்னை நான் வணங்கும் வண்ணம் நல்ல நாளைக் கட்டளையிட்டருள வேண்டும். 'கருணை மிகுதியால் நீ நேர்வந்து நிற்பினும், அங்ஙனம் நிற்கும் பொழுது பணிய வேண்டிய முறைகளை நான் அறியேன். அதனால் அதனையும் நீயே அறிவித்தருளல் வேண்டும்' என்றபடி.

(97) *பணியாது முன்இவனைப் பாவியேன் வாளா*
கணியாது காலங் கழித்தேன்; - அணியும்
கருமா மிடற்றெம் கயிலாயத் தெங்கன்
பெருமான தில்லை பிழை.

விளக்க உரை:-

பாவியாகியநான் முன்னதாக இவரை வணங்காமலும், மதிக்காமலும் வீணாக என் வாழ்நாட்களைப் போக்கினேன். இது எனது தவறு. அலங்கரிக்கப்பெற்ற கரிய திருக்கண்டத்தையுடைய எமது திருக்கயிலாயத்திலுள்ள எங்கள் பெருமானது தவறில்லை.

(98) *பிழைப்புவாய்ப் பொன்றறியேன்; பித்தேறி னாற்போல்*
அழைப்பதே கண்டாய் அடியேன்;- அழைத்தாலும்
என்னா தரவேகொண் டின்பொழில்சூழ் காளத்தி
மன்னா தருவாய் வரம்.

விளக்க உரை:-

குற்றம் செய்வதற்குரிய வாய்ப்பை ஒன்றினையும் அறியவில்லை, பித்து ஏறியவர்போல் அடியேன் அழைத்த லொன்றையுமேயுடையேன். அன்பில்லாமல் அழைத்தாலும், இனிதாகிய சோலை சூழ்ந்த திருக்காளத்தி வேந்தனே என் விருப்பத்தையே ஆதரவாகக் கொண்டு வரம் தந்தருளக்கடவாய்.

(99) *வரமாவ தெல்லாம் வடகயிலை மன்னும்*
பரமா, உன் பாதார விந்தம் - சிரம்ஆர
ஏத்திடும்போ தாகவந்(து) என்மனத்தில் எப்பொழுதும்
வாய்த்திடு நீ;வேண்டேன்யான் பற்று.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளக்க உரை:-

வடதிருக்கயிலையில் நிலைபெற்ற மேலோனே, எனக்கு நீ தந்தருளும் வரமாவதெல்லாம் உன் திருவடித் தாமரை மலர் என் சிரத்தில் பொருந்தவும், அதனைத் துதிக்குங்காலம் எனக்குண்டாகவும், நீ அருளி என் மனத்தில் எப்பொழுதும் வைத்திட வேண்டும். அதைத் தவிர நான் வேறொன்றனையும் விரும்பேன்.

(100) மற்றப் பலபிதற்ற வேண்டா, மடநெஞ்சே!
கற்றைச் சடையண்ணல், காளத்தி - நெற்றிக்கண்
ஆரா அமுதின் திருநாமம் அஞ்செழுத்தும்
சோராமல் எப்பொழுதுஞ் சொல்.

விளக்க உரை:-

அறியாமையையுடைய மனமே, வேறு பலவற்றைப் பிதற்றுதல் வேண்டியதில்லை. திரட்சியாகிய சடாபாரத்தையுடைய பெரியோனாகிய திருக்காளத்தியிலுள்ள நெற்றிக் கண்ணையுடைய தெவிட்டாத அமிர்தம் போன்ற சிவபெருமானது திருநாமமாகிய ஐந்தெழுத்தையும் எப்பொழுதும் மறவாமல் உச்சரிப்பாய்.

திருச்சிற்றம்பலம்

கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி

மூலமும் உரையும்

முற்றிற்று

நக்கீர தேவநாயனார் நல்லருள் வாழ்க

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

BHARADWAJA ASHRAMAM

SRIKALAHASTI

AN APPEAL

Manuscripts on palm leaf or paper are the works of our ancients sages and wise men, they are the grate reasures inherited by our nation. These are to be preserved for the generations to come. It is a moral obligation of persons who possess them to preserve them for the benefit of all of us.

Probably you, your friends, or your neighbours may have them in possession. You can contribute them to preserve for the sake of our culture, by presenting them to Bharadwaja Ashram, Srikalahasti (A.P.)

The manuscripts will be accepted and acknowledged with the gratitude by Ashramam and preserved with care and made available to the posterity. The unpublished works found among them will be published in course of time as facilities occur with due recognition of your gift.

Bharadwaja Ashramam invites you to contribute these invaluable manuscripts to its Library.

Bharadwaja Ashramam invites philonthrothic institution and persons to join in publishing the National treasure by way of financial support.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்காளத்தித் தலச்சிறப்பு

திருக்காளத்தி மிகச்சிறந்த சிவத்தலமாகும். இது பஞ்சமுகத் தலங்களுள் ஒன்றான வாயுத் தலமாகும். இது தென்கயிலாயம் எனப் பெரும்புகழ் பெற்றது. இந்தத் தலத்தை சக்தியவிரத க்ஷேத்திரம் என்றும், பாஸ்கர க்ஷேத்திரம் என்றும், அகண்டவில் வக்காடு என்றும், ஸத்யோ முக்திகர க்ஷேத்திரம் என்றும் சிவானந்தைக நிலையம் என்றும் ஸ்தல வரலாறு கூறுகிறது. இத்தலத்தில் சிவபெருமான் சுயம்பு மூர்த்தியாகவும், வாயுஸ்வரூபமாகவும் மற்றும் விராட் மூர்த்தியாகவும் தோன்றியுள்ளார். இத்தலத்தில் சிலந்தி, யானை, நாகம் ஆகியவை பூசித்து முத்தி பெற்றுள்ளன. வேடன் திண்ணன் பெருமானுக்குத் தன்கண்ணையே சமர்ப்பித்து 'கண்ணப்பன்' என்ற பெயர் பெற்றார். இந்த க்ஷேத்திரத்தில் சிவபெருமான், 'ஸ்ரீகாளத்திநாதர்' என்று பக்தர்களால் போற்றப் பெற்று உலகப்புகழ் பெற்றார்.

இந்த க்ஷேத்திரத்தில் பரமேஸ்வரனுடைய தென்முகத்தில் தீட்சைபெற்ற பாரத்வாஜ முனிவர், திருக்காளத்திநாதனை வழிபட்டு முக்தியடைந்தார். திருக்காளத்தி நாதரைப் பற்றிப் பற்பல மகான்கள் பாடியுள்ளனர். பாற்கடலில் தோன்றிய விஷத்தை சிவபெருமான் இந்தச் சிவானந்த மாலையில் உண்டு, ரிஷபாரூடராய்க் காட்சி தந்தார் என்று திருஞான சம்பந்தர் பாடியுள்ளார். இதனால் இந்த க்ஷேத்திரத்தில் மகாசிவராத்திரி யன்று இரவில் 'ரிஷப ஸேவை' மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. இந்த ரிஷப ஸேவை தரிசனமே முக்கியமானதென்பது ஐதிகம். இந்தத்தலமே குருலிங்க ஜங்கம வழிபாட்டுத்தலம்.

- கண்ணப்ப நாயனாரின் அன்புக்குத் தன்னையே தந்து அவரது எளிய வழி பாட்டை இனிமையானதாக ஏற்றுக்கொண்ட ஸ்ரீகாளத்தீஸ்வரர் எழுந்தருளியுள்ள மலை;
- தென்கயிலாயம் எனப்பற்பல புலவர்களாலும், அடியார்களாலும் பாராட்டப் பெற்ற மலை;
- குருலிங்க சங்கம வழிபாட்டுத் தலம்;
- நக்கீரர் முதல் வள்ளலார் ஈறாகத் தமிழ்ப்புலவர்கள் வாயாரப் பாடிய பல பாடல்களைப் பெற்ற திருத்தலம்;
- இமயமலையின் பகுதியாகத் தெற்கே வந்து மூன்று சிகரங்களுள் ஒன்று திருக்காளத்தி மலை;
- வழிவழியாக அன்னையாலும், தேவராலும், முனிவராலும், அடியார்களாலும் வழிபாடு செய்யப்பெற்ற சிவஞான மலை;
- ஐந்துமொழிகளில் இந்தத்தலத்தைப் பற்றிய நூல்கள் உள்ளன.
- இத்தலத்தைப் பற்றித்தமிழ் மொழியில் பாடப்பெற்ற பாடல்கள் அனைத்தையும் தொகுத்தளித்த டாக்டர், உ.வே. சாமிநாதய்யரின் அடியொற்றி ஏறத்தாழ 90 நூல் களிலிருந்து தொகுக்கப்பட்ட பாடல்கள் அனைத்திற்கும் உரையும் விளக்கமும் புலர். இரா இராமமூர்த்தி அவர்களால் இந்நூலில் வழங்கப்படுகிறது.
- மூர்த்தி, தலம், தீர்த்தம், வரலாறு, வழிபாட்டு முறை, திருக்காளத்தித்தல விசேடம், வழிபடுவார்க்கு வரும் பயன் ஆகிய அனைத்தையும் தொகுத் தளிப்பது – இந்நூல்!

அடியார்கள் படித்து இறையருள் பெறவேண்டி – இந்நூலை பதிப்பித்தவர்:
டாக்டர். சிவ ஸ்ரீ ஈசானசிவம், எஸ். எம். கே. அய்யாவுகுருக்கள்
பாரத்வாஜ்ஆஸ்ரமம், ஸ்ரீகாளஹஸ்தி – 517644.